



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com






CHENNAI | Volume- 3 | Issue:272 | 17-04-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


### இன்றைய பஞ்சாங்கம்

17.04.2026 சித்திரை 4
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.03

திதி:
இன்று மாலை 5.43 வரை
அமாவாசை பின்பு பிரதமை.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 12.05 வரை
ரேவதி பின்பு அசுவினி

யோகம் :
இன்று காலை 7.08 வரை
வைதிருதி பின்பு விஷ்கம்பம்.

கரணம்
இன்று காலை 6.39 வரை
சதுஷ்பாதம் பின்பு மாலை
5.47 வரை நாகவம் பின்பு
கிமிஸ்துக்கினம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை
6.02 வரை சித்த யோகம்
பின்பு அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று பிற்பகல் 12.05 வரை
பூரம் பின்பு உத்திரம்

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30

இராகு காலம்
காலை 10.30 – 12.00.

எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

குளிகை
காலை 7.30 – 9.00.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு

# அரசியல் சாயம் பூச வேண்டிய அவசியமில்லை

# மக்களவையில் பிரதமர் மோடி பேச்சு

**புதுடெல்லி, ஏப்.17:**

சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றத்திலும் மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு அளிக்கும் நோக்கில், அரசியல் சாசன திருத்தம் (131-வது திருத்தம்) மசோதா 2026, தொகுதி மறுவரையறை மசோதா 2026, யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த) மசோதா 2026 ஆகிய மூன்று மசோதாக்கள் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டன.

இதன் மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "ஒரு நாட்டின் வாழ்வில் சில முக்கியமான தருணங்கள் அமையும். அத்தகைய தருணங்களில், சமூகத்தின் மனநிலையும், தலைமைத்துவத்தின் திறமையும் இணைந்து ஒரு வலுவான மரபை உருவாக்குகின்றன. இந்தியாவின் நாடாளுமன்ற ஜனநாயக வரலாற்றில் இந்த தருணம் அத்தகைய ஒரு முக்கியமான தருணமே.

பெண்களுக்கான இடஒதுக்கீடு குறித்த யோசனை 25-30 ஆண்டுகளுக்கு முன்பு முதன்முதலில் கருவாகி, அதற்கான தேவை உணரப்பட்டபோதே நாம் இதைச் செயல்படுத்தியிருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால், இன்று நாம் ஒரு முதிர்ந்த நிலைக்கு அதை கொண்டு வந்திருப்போம். உள்ளாட்சித் அமைப்புகளுக்கான தேர்தலில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க முன்வந்தவர்கள், நாடாளுமன்றத்தில் அளிக்க முன்வரவில்லை. அதற்குக் காரணம், தங்களுக்கு போட்டி அதிகமாகிவிடக் கூடாது என்பதே. நமது நாடு 'ஜனநாயகத்தின் தாய்' ஆகும்.



நமது ஜனநாயகம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணித்து வருகிறது. அந்த வளர்ச்சிப் பயணத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்க்கும் நற்பேறு இந்த அவையில் உள்ள நம் அனைவருக்கும் கிடைத்துள்ளது.

நாட்டின் மக்கள் தொகையில் பெண்கள் பாதியளவு இருக்கிறார்கள். தேசத்தைக் கட்டமைக்கும் (நாடாளுமன்ற) செயல்முறையில் அவர்கள் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தமைக்காக நாம் அனைவரும் கொடுத்து வைத்தவர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம், இந்த முக்கியமான வாய்ப்பை நழுவ விட்டுவிடக் கூடாது. இந்தியர்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நாட்டிற்கு ஒரு புதிய திசையை வழங்கப் போகிறோம். நமது ஆட்சி நிர்வாக அமைப்பில் உணர்வுபூர்வமான அணுகுமுறையை ஊடுருவச் செய்ய, நாம் ஒரு அர்த்தமுள்ள முயற்சியை மேற்கொள்ளப் போகிறோம். இது நாட்டின் அரசியலை வடிவமைப்பது மட்டுமல்லாமல், நாட்டின் எதிர்காலத் திசையையும் நிலையையும் தீர்மானிப்பதாகவும் அமையும். 21-ஆம் நூற்றாண்டில், இந்தியா ஒரு புதிய தன்னம்பிக்கையுடன் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இன்றைய உலகில் இந்தியாவுக்கு கிடைத்துள்ள அங்கீகாரத்தை நாம் அனைவரும் உணர்கிறோம். இது நம் அனைவருக்கும் பெருமைக்குரிய ஒரு தருணமாகும். 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்பது வெறும் ரயில்வே வசதிகளை மட்டும் குறிப்பதல்ல என்று நான் உறுதியாக நம்புகிறேன். சாலைகள், உள்கட்டமைப்பு அல்லது பொருளாதார மற்றும் வளர்ச்சிப் புள்ளிவிவரங்கள் மட்டுமே ஒரு வளர்ச்சியடைந்த இந்தியா என்று கருதும் குறுகிய கண்ணோட்டம்கொண்டவர்கள் நாங்கள் அல்ல. 'அனைவருடனும் இணைந்து அனைவருக்குமான வளர்ச்சி' என்ற மந்திரத்தை உண்மையாகவே பிரதிபலிக்கும் ஒரு 'வளர்ச்சியடைந்த இந்தியாவையே' நாங்கள் விரும்புகிறோம். நாட்டின் மக்கள் தொகையில் 50 சதவீதம் உள்ள பெண்கள், கொள்கை உருவாக்கத்தில் ஒரு அங்கமாக மாற வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும்.

நாம் ஏற்கெனவே இதில் காலதாமதம் செய்துவிட்டோம். அதற்கான காரணங்கள் எதுவாக இருந்தாலும், அதற்குப் பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும், இந்த எதார்த்தத்தை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். பெண்களுக்கான இடஒதுக்கீடு தொடர்பான இந்தச் செயல்முறை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அனைத்துக் கட்சிகளுடனும் கலந்தாலோசனைகள் நடத்தப்பட்டன. ஒரே ஒரு கட்சியைத் தவிர, நாங்கள் சந்தித்த மற்ற அனைவரும் கொள்கை ரீதியாக இதற்கு எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

அரசியல் ரீதியில் மட்டுமே சிந்திப்பவர்களுக்கு நான் ஒரு அறிவுரையை வழங்க விரும்புகிறேன். நம் நாட்டில் பெண்களுக்கான இடஒதுக்கீடு குறித்த விவாதம் தொடங்கியதிலிருந்து, அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலிலும், பெண்களுக்கான இந்த உரிமையை எதிர்த்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை நாட்டின் பெண்கள் ஒருபோதும் மன்னித்ததில்லை.

பெண்களுக்கான இட ஒதுக்கீடு நாட்டின் ஜனநாயகத்துக்குச் சாதகமாக அமையும். நாட்டின் கூட்டு முடிவெடுக்கும் செயல்முறைக்கு வலுசேர்க்கும். மேலும், இதற்கான பெருமை நம் அனைவருக்கும் உரித்தானதாக இருக்கும்.

இதற்கான முழு உரிமையும் ஆளுங்கட்சிக்கோ அல்லது மோடிக்கோ மட்டும் உரியதல்ல. அதேபோல, இங்கு அமர்ந்திருக்கும் மற்றவர்களுக்கு மட்டும் உரியதல்ல. இதற்கு ஒரு அரசியல் சாயம் பூச வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்றே நான் கருதுகிறேன்" என்று பிரதமர் மோடி பேசினார்.

## நாடாளுமன்றம் கைப்பற்றப்படுவதை எதிர்க்கட்சிகள் ஒருபோதும் அனுமதிக்காது: கார்கே

நாடாளுமன்ற 3 நாள் சிறப்பு அமர்வு கூட்டம் நேற்று தொடங்கியுள்ள நிலையில், தொகுதி மறுவரையறை மசோதா, யூனியன் பிரதேச தொகுதிகள் மறுவரையறை திருத்த மசோதா, மகளிர் இடஒதுக்கீடு திருத்த மசோதா ஆகிய 3 மசோதாக்கள் நேற்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு விவாதம் நடைபெற்று வருகிறது. மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு தெரிவிப்பதாகவும் அதேநேரத்தில் தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் கூறி வருகின்றன.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தனது எக்ஸ் பக்கத்தில், "மகளிர் இடஒதுக்கீடு என்ற போர்வையில் கொண்டுவரப்படும் தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்ப்பதில் எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு நிற்கின்றன. மகளிர் இடஒதுக்கீடு என்ற பெயரில் குறைபாடுள்ள தொகுதி மறுவரையறை மசோதாக்களால் நாடாளுமன்றம் கைப்பற்றப்படுவதை எதிர்க்கட்சிகள் அனுமதிக்காது. நாங்கள் ஒன்றுபட்டு நிற்கிறோம். நமது ஜனநாயகத்தின் மீதான இந்த வஞ்சகமானத் தாக்குதலை எங்களின் முழு பலத்தையும் கொண்டு எதிர்த்துப் போராடுவோம்" என்று பதிவிட்டு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆலோசனை நடத்திய புகைப்படங்களையும் பகிர்ந்துள்ளார்.

## 18-ந் தேதி ராகுல் காந்தி தமிழகம் வருகை

**சென்னை, ஏப்.17:**

தமிழக சட்டமன்ற தேர்தல் வருகிற 23-ந் தேதி நடைபெற இருக்கிறது. மே 4-ந் தேதி வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டு அன்றைய தினமே தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட உள்ளன. திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு 28 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ள்ன.

தமிழகத்தில் பிரசாரத்தில் பங்கேற்பதற்காக 18-ந் தேதி மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி தமிழ்நாட்டிற்கு வருகிறார். காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்ய இருக்கிறார். காலையில் 11.30 மணிக்கு பொன்னேரி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் செய்கிறார். பின்பு அங்கிருந்து சோளிங்கர் மற்றும் துறையூர் தொகுதியில் பிரசாரத்தில் ஈடுபடுகிறார்.

இதன்பின்பு 20-ந் தேதி மீண்டும் தமிழ்நாட்டிற்கு ராகுல் காந்தி பிரசாரத்தில் பங்கேற்க வருகிறார். அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே 19மற்றும் 20-ந் தேதிகளில் பிரசாரத்திற்காக தமிழகத்திற்கு வருகை புரிகிறார். 19-ந் தேதி திருநெல்வேலியிலும், 20-ந் தேதி கன்னியாகுமரியிலும் கார்கே பிரசாரம் செய்ய இருக்கிறார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளது.

## மகளிருக்கு மாதம் ரூ.2,500; வேலையில்லாத பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.4,000 - தவெக தேர்தல் அறிக்கையில் உத்தரவாதம்

**சென்னை, ஏப்.17:**

சென்னைநுங்கம்பாக்கத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தவெக தலைவர் விஜய் 'மக்களின் தேர்தல் அறிக்கை 2026' என்ற பெயரில் முழு தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். அந்த தேர்தல் அறிக்கையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2,500; வேலையில்லாத பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.4,000 வழங்கப்படும் உள்ளிட்ட வாக்குறுதிகள்இடம்பெற்றுள்ளன. தவெக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள 10 உத்தரவாதங்கள் வருமாறு:-

மகளிர் மேம்பாடு: குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2,500; 6 விலையில்லா சிலிண்டர்கள்; மணப்பெண்களுக்கு 1 சவரன் தங்கம் + பட்டுச்சேலை; பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம்; மாணவர்களின் அம்மாக்களுக்கு ரூ.15,000 கல்வி உதவி; மகளிர் குழுக்களுக்கு ரூ.5 லட்சம் வட்டியில்லா கடன்.



இளைஞர் முன்னேற்றம்: வேலையில்லா பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.4,000 வரை உதவித்தொகை; ஊதியத்துடன் கூடிய 5 லட்சம் இன்டர்ன்ஷிப்; 5 லட்சம் புதிய அரசு வேலைவாய்ப்புகள்; தொழில் தொடங்க ரூ.25 லட்சம் கடன்; அரசுத் தேர்வுகளுக்குக் கால அட்டவணை.

உலகத்தரக் கல்வி: உறைவிட வசதியுடன் 100 காமராஜர் சிறப்புப் பள்ளிகள்; ரூ.20 லட்சம் வரை உயர்கல்விக் கடன்; நவீன கட்டமைப்புடன் அரசுப் பள்ளிகள்; ஏஐ (Artificial Intelligence) மூலம் கட்டணமில்லா போட்டித் தேர்வு பயிற்சிகள்.

விவசாயிகள் நலன்: நிலமுடைய விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.15,000 முதலீட்டு உதவி; பயிர்க் கடன்கள் தள்ளுபடி; MSP: நெல் குவிண்டால் ரூ.3,500, கரும்பு டன்னுக்கு ரூ.4,500; 5 லட்சம் சோலார் பம்புகள்; தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ரூ.10,000; 100 சதவீத பயிர்க் காப்பீடு. லஞ்சமில்லா நிர்வாகத்துடன் அரசுச் சேவைகள் அனைத்தும் வீட்டு வாசலில்; காலக்கெடுவுடன் கூடிய அரசு சேவைகள்; நிதி ஒதுக்கீட்டில் 10 சதவீதம் திட்டங்களை மக்களே தீர்மானிக்கும் அதிகாரம் உள்ளிட்ட பல வாக்குறுதிகள் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

## 3 மசோதாக்கள் மீது 12 மணி நேரம் விவாதம் - இன்று மாலை வாக்கெடுப்பு

**புதுடெல்லி, ஏப்.17:**

3 நாட்கள் சிறப்பு நாடாளுமன்ற கூட்டத் தொடர் நேற்று தொடங்கி உள்ளது. கூட்டம் தொடங்கியதும் மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் குறிப்பு வாசித்த பிறகு, அலுவல்கள் தொடங்கியது. இதனையடுத்து பெரும் எதிர்பார்ப்புக்கு இடையே இன்று மகளிர் இட ஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை மசோதா மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது.

முன்னதாக, இந்த மசோதாக்களை அறிமுகம் செய்வது மீதான வாக்கெடுப்பை, குரல் வாக்கெடுப்பாக நடத்த எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை அடுத்து டிவிஷன் வாக்கெடுப்பு நடத்த சபாநாயகர் அனுமதி அளித்தார். இதையடுத்து, நடைபெற்ற டிவிஷன் வாக்கெடுப்பில் மொத்தம் 333 எம்.பி.க்கள் வாக்களித்துள்ளனர். அதில் ஆதரவாக 207 பேரும், எதிராக 126 பேரும் வாக்களித்தனர்.

பகுதிவாரி வாக்கெடுப்பில் மக்களவையில் மொத்தம் 543 எம்.பிக்களில் 333 எம்.பி.க்கள் பட்டன் மூலமாக வாக்களித்துள்ளனர். மசோதாக்களை அறிமுகம் செய்ய தேவையான எம்.பிக்கள் ஆதரவு கிடைத்ததையடுத்து, மசோதாவை மத்திய அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் இந்த மசோதாவை அறிமுகம் செய்தார். மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை மசோதாக்களை இணைத்து அறிமுகம் செய்து விவாதிப்பதற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில், அரசியலமைப்பு சட்டத்திருத்தம், தொகுதி மறுவரையறை உள்ளிட்ட 3 மசோதாக்கள் மீது மக்களவையில் 12 மணி நேரம் விவாதம் நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரத்துறை மந்திரி கிரிண் ரிஜுஜு அறிவித்துள்ளார்.

தேவைப்பட்டால் விவாத நேரம் நீட்டிக்கப்படும் என்றும் திருத்தச் சட்டம் தவிர மற்ற 2 மசோதாக்களை ஒன்றாக விவாதிக்க அனுமதிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மசோதாக்கள் மீது இன்று (17ம் தேதி) மாலை 4 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.








## திருக்குறள் குறள்-592

**உள்ள முடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்**



ஒருவர்க்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும், மற்றப் பொருளுடைமையானது நிலைபேறு இல்லாமல் நீங்கிவிடுவதாகும்.


## சிந்திக்க ஒரு நொடி



கொஞ்சம் இடைவெளி விட்டு
தொடருங்கள்....
வாகனங்களில்
மட்டுமல்ல.....
உறவுகளுடனும்
கூடத்தான் வாழ்க்கையில்
எல்லா உறவுகளும்
நீடிக்க வேண்டுமெனில் சிறு
இடைவெளி அவசியம்....

**உஷா முத்துராமன்**

## ஸ்ரீ ஸ்வாமி பல்லக்கு புறப்பாடு



ஸ்ரீ உடையவர் திருவவதார உத்ஸவம் நாள்-4 ஸ்ரீ ஸ்வாமி பல்லக்கு புறப்பாடு

## முன்னாள் அமைச்சர் சிவி.சண்முகம் அமாவாசையில் இரட்டை இலையிக்கு வாக்கு சேகரிப்பு



விழுப்புரம் மாவட்டம் வல்லம் வடக்கு ஒன்றிய அதிமுக சார்பில் இன்று வெள்ளிக்கிழமை அமாவாசை தினத்தில் மயிலம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் முன்னாள் அமைச்சர் சிவி. சண்முகம் இரட்டை இலை சின்னத்திற்கு சின்னகரம், தாமனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் வாக்கு சேகரிக்க உள்ளார் இதனைத்தொடர்ந்து கிளைக்கழக நிர்வாகிகள் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர். அகரம் ராமதாஸ் செய்தியாளர்

## வந்தவாசி அதிமுக வேட்பாளர் ராணி அவர்கள் தோசை சுட்டு வாக்கு சேகரிப்பு



திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் ராணி அவர்கள் தோசை சுட்டு வந்தவாசி நகரத்தில் வாக்கு சேகரித்தார். வந்தவாசி சட்டமன்றத் தொகுதி அதிமுக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஜாகீர் உசேன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாஸ்கர் ரெட்டியார், மாவட்ட அவைத்தலைவர் டிகேபி. மணி, நகர செயலாளர் ஓட்டல் பாஷா , ஒன்றிய செயலாளர்கள் லோகேஸ்வரன், ராஜேஷ் , தனசேகர், முனுசாமி, பச்சையப்பன், வந்தவாசி நகர நிர்வாகிகள் மேகநாதன், லதா குமார், ஜல்லிகுமார், ஹைடெக் பாபு, ராஜசேகர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பாமக, பாஜக , அமமுக, ஐஜேகே, புரட்சி பாரதம், தமாக, புதிய நீதி கட்சி உட்பட அனைவரும் கலந்து கொண்டு இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் பச்சை பட்டு உடுத்தி சர்வ அலங்காரத்தில் அருள்பாலிப்பு!



**வேலூர்,ஏப்.17:** வேலூர் மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான்பட்டறையில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார்.

இந்த ஸ்ரீராகவேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை, ஸ்ரீ சத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது.

இதனை ஸ்ரீ க. மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. புதன் கிழமையை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது. பச்சை பட்டு உடுத்தி சர்வ அலங்காரத்தில் பக்தர்களுக்கு தரிசனம் தந்தார்.

இதைத் தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது. பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர். இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.

## துளிர் திறனறிதல் தேர்வில் தேவீர அள்ளி அரசு பள்ளி மாணவர்கள் சிறப்பிடம்



**தேவீரஅள்ளி, ஏப்.17:** தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் நடைபெற்ற துளிர் திறனறிதல் தேர்வில் தேவீரஅள்ளி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சிறப்பிடம் பிடித்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு துளிர் திறனறிதல் தேர்வு நடத்தப்படுகிறது.

அந்த தேர்வில் சிறப்பிடம் பிடிக்கும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் கேடயமும் வழங்கப்படுகிறது. அதன்படி தேவீரஅள்ளி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் அத்தேர்வில் சிறப்பிடம் பிடித்தமையை பாராட்டி தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் சான்றிதழ்களும் கேடயமும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. சிறப்பிடம் பெற்ற மாணவர்களையும், சிறப்பு பயிற்சி அளித்த அறிவியல் ஆசிரியை கவிதா அவர்களையும் பள்ளி தலைமை ஆசிரியர் முத்து லட்சுமணன் பாராட்டினார்.

## உதயசூரியன் சின்னத்திற்கு



திருவண்ணாமலை மாவட்டம் பவித்திரம் ஊராட்சியில் பொது மக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பில் திருவண்ணாமலை திமுக வேட்பாளர் எ.வ. வேலு அவர்கள் திமுகவிற்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். உடன் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தாமரை சின்னத்திற்கு வாக்குகள் சேகரிப்பு



**திருவண்ணாமலை ஏப்.17:** திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் C.ஏழுமலை அவர்கள் திருவண்ணாமலை நகரில் வீதி வீதியாக சென்று தாமரைச் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் பெருமாள் நகர் ராஜன் அவர்கள் மற்றும் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் தாமரை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## நான் யாரிடமாவது லஞ்சம் வாங்கினேன் என நிரூபித்தால் நெருப்பில் குதித்து விடுகிறேன்: தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் துரைமுருகன் பேச்சு



**வேலூர், ஏப்.17:** வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளராக அமைச்சர் துரைமுருகன் போட்டியிடுகிறார். அவர் காட்பாடி தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார் .தற்போது அவர் பொதுமக்களிடையே பேசுகையில்: நான் யாரிடமாவது ரூ.1 லஞ்சம் வாங்கினேன் என நிரூபித்தால் நெருப்பில் குதித்து விடுகிறேன். அதேபோன்று நான் ஒழுக்கம் இல்லாதவன் பெண்களுடன் சுற்றித்திரிந்தேன் என்று கூறினால் தூக்கில் தொங்கி விடுகிறேன் என்று கூறினார். இந்த முறை நீங்கள் வழக்கம் போல் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களியுங்கள் என்று கேட்டு பிரச்சாரம் செய்தார். இந்த பிரச்சாரத்தின் போது திமுகவின் கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உடன் சென்றனர்.

## சிதம்பரத்தில் வள்ளலார் கொள்கை பரப்பு மன்றம் சார்பில் 13 ஆம் ஆண்டு சித்திரை 1ல் வள்ளலார் முத்திரை மாநாடு



**சிதம்பரம் , ஏப் ,17:** வள்ளலார் கொள்கை பரப்பு மன்றம் சார்பில் 13 ஆம் ஆண்டு சித்திரை - 1 ல் வள்ளலார் முத்திரை மாநாடு காலை 5.30 மணி முதல் இரவு 9-00 மணி வரை கடலூர் மாவட்டம் சிதம்பரம் கீழ ரத வீதி ராசி திருமண மண்டபத்தில் நடை பெற்றது.

ஞான தீபம் ஏற்றுதல் , திரு அருட்பா ஆராதனை ஜோதி பாடல்கள் ஜோதி வழிபாடு , திரு அருட்பா அருட்பெருஞ்ஜோதி அகவல் ஓதுதல் , திரு அருட்பிரகாச வள்ளலார் திருவுருவ வரைப்படம் திறப்பு விழா, சன்மார்க்க நீதி கொடி கட்டுதல், பேருபதேசம் வாசித்தல், தொடர் அன்னதானம் துவக்கம், திரு அருட்பா இன்னிசை , வள்ளலார் முத்திரை மாநாடு துவக்கம் , சன்மார்க்க வில்லிசை அரங்கம், சன்மார்க்க பேருரை, திரு அருட்பா இன்னிசை , திரு அருட்பா இன்னிசை மழை , மகளிர் அரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளுடன் மாநாடு சுப நிறைவு பெற்று நடந்து முடிந்தது. நானே சன்மார்க்கம் நடத்துக்கின்றேன் என்ற தலைப்பில் குடியாத்தம் கோமதி பூபாலன் சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார். அகத்தியர் அறக்கட்டளை சிவபித்தன் டாக்டர் ஈஷ்வர் ராஜலிங்கம் ஐயா மாநாட்டிற்கு தலைமை வகித்தார். மாநாட்டு குழு தலைவராக பாரி வள்ளல், செயலாளராக வடிவேலு மற்றும் பொருளாளர் வழக்கறிஞர் தினேஷ்குமார், ஜோதி பிரசாத் , குருசாமி முன்னிலை வகித்தார்கள்.

சன்மார்க்க அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு மாநாட்டினை சிறப்பித்தார்கள். வள்ளலார் முத்திரை மாநாடு ஏற்பாடுகளை மாநாடு அமைப்பாளர் , வள்ளலார் கொள்கை பரப்பு மன்றம் தலைவர் கருணைமிகு க.கண்ணதாசன் செய்தார்.

## கோடை விடுமுறையில் மாணவர்கள் ஏரி, குளம், குட்டைகளில் தனியாக விளையாடாதீர்கள்: கல்வியாளர் பேச்சு



**வந்தவாசி, ஏப் 17:** திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் வட்டம், வந்தவாசி அடுத்த புதுவணக்கம்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு கோடை விடுமுறையை பயனுள்ள முறையில் கழிக்கும் வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியை மு.தமிழரசி தலைமை தாங்கினார். தெள்ளாறு புலவர் ந.பானு முன்னிலை வகித்தார். பள்ளி ஆசிரியை த.செந்தமிழ் செல்வி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் பங்கேற்று, கோடை விடுமுறையை மாணவர்கள் பயனுள்ள முறையில் கழிக்கும் வழிமுறைகள் பற்றிய கருத்துரைகளை வழங்கினார். மேலும் ஏரி, குளம் குட்டைகளில் மாணவர்கள் தனியாக சென்று குளிக்க கூடாது எனவும், ஆரோக்கியமான உணவு முறைகளை உட்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை பிழையில்லாமல் பாடியும், எழுதியும் காட்டிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திருவேங்கடம் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார். மேலும் பெற்றோர்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

பா. சீனிவாசன், வந்தவாசி.

# தேர்தல் கொண்டாட்டம் 2026



## தேர்தல் களப்பணியில்...

### திமுகவின் ரூ.8 ஆயிரம் மாதிரி கூப்பன் விநியோகம் தவறு: தலைமை தேர்தல் அதிகாரி விளக்கம்

திமுக-வின் ரூ.8 ஆயிரம் கூப்பன் மாதிரி விநியோகம் தவறு என்று தலைமைத் தேர்தல் அதிகாரி விளக்கம் அளித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, மார்ச் 30-ம் தேதி திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். அதில், "வருமான வரி செலுத்தாத குடும்பங்களைச் சேர்ந்த இல்லத்தரசிகள், ரூ.8 ஆயிரம் மதிப்பிலான கூப்பனை பயன்படுத்தி வாஷிங் மெஷின், டிவி. ஃபிரிட்ஜ், மிக்சி, 'மைக்ரோவேவ் அவன்' மற்றும் மின் அடுப்புகள் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை புதிதாக வாங்கிக்கொள்ள அல்லது ஏற்கெனவே பயன்படுத்தி வரும் பழைய பொருட்களுக்கு மாற்றாகவும் பெற்றுக்கொள்ள 'இல்லத்தரசி' திட்டம் செயல்படுத்தப்படும்" என்ற வாக்குறுதியும் இடம்பெற்றது. இந்த 'இல்லத்தரசி திட்டம்' குறித்து தமிழகம் முழுவதும் திமுக-வினர் பிரச்சாரம் செய்து வருகின்றனர். சில நிர்வாகிகள் ஒருபடி மேலே சென்று, ரூ.8 ஆயிரம் கூப்பனின் மாதிரியை தயாரித்து, வீடு வீடாக வழங்கி வாக்குச் சேகரித்து வருகின்றனர். இது தொடர்பாக படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள எதிர்க்கட்சிகள் இது தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரானது என குற்றஞ்சாட்டி வருகின்றன.

இதனிடையே, இவ்வாறு மாதிரி கூப்பன் வழங்க தலைமை தேர்தல் அதிகாரியிடம் அனுமதி பெற்றிருப்பதாக எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டு, ஊடக விளம்பரச் சான்றையும் இணைத்துள்ளனர். இது தொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி அலுவலக அதிகாரிகளிடம் கேட்டபோது, "துண்டுப் பிரசுரங்கள், கைப்பிரதிகளை அச்சிடுவதற்கு முன்பே தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டும். அனுமதி பெறாமல் அச்சிட்டு விநியோகிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. விதிகளை மீறி மாதிரி கூப்பன்களை விநியோகித்தவர்கள் மீது சில மாவட்டங்களில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது" என்றனர்.

### எனது கனவு திமுகவை ஆட்சியில் இருந்து வீழ்த்துவது தான்: சீமான் சீற்றம்

"தமிழகத்தில் பல்வேறு பிரச்சினைகள் உள்ள நிலையில், அதுகுறித்து கேட்காமல், உனது கனவு என்ன என்று கேட்கின்றனர். எனது கனவு திமுக-வை ஆட்சியில் இருந்து வீழ்த்துவதுதான்" என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் நாதக வேட்பாளர் எழிலரசியை ஆதரித்தும், ஆலங்குடியில் ஆர்.ராஜாராமை ஆதரித்தும் அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று பிரச்சாரம் செய்தார். முன்னதாக, புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தொகுதி மறுவரையறை, வாக்காளர் சிறப்பு திருத்தம் போன்ற செயல்களை அவசரமாக கொண்டுவந்து, மக்களை பதற்றமான நிலைமைக்கு வைத்திருப்பது பாஜக-வுக்கு வாடிக்கை. மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி எண்ணிக்கையை முடிவு செய்வதை ஏற்க முடியாது. திமுக-வுக்கும், தவெக-வுக்கும் தான் போட்டி என்று பேசும் தவெக தலைவர் விஜய், முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி மற்றும் பாஜக தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளில் பிரச்சாரத்துக்குச் செல்லாமல், நான் போட்டியிடும் காரைக்குடிக்குத் தான் பிரச்சாரம் செய்ய வந்துள்ளார். அப்படியென்றால் ஊழலை ஒழிப்பேன் என்று ஆவேசமாக பேசும் விஜய், யாரை போட்டியாளராக பார்க்கிறார்? தமிழினத்தை மற்ற கட்சியினர் ஆள நினைக்கிறார்கள். நான் அவர்கள் வாழ நினைக்கிறேன். இலவச திட்டங்கள் என்பது ஏமாற்று வேலை. அதனால் தான் இலவசங்களை ஒழிக்க வேண்டும் என்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

### "துரியோதன கும்பலிடம் போய் சேர்ந்த ஓபிஎஸ்" - போடியில் டிடிவி.தினகரன் காரசாரம்

தேனி மாவட்டம் போடி தொகுதியில் அதிமுக வேட்பாளர் வி.டி.நாராயணசாமியை ஆதரித்து அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் வாக்குச் சேகரித்தார். அப்போது அவர் பேசியதாவது; வரும் வழியில் ஒரு விளம்பர தட்டியைப் பார்த்தேன். அதில் உள்ள திமுக வேட்பாளரை (ஓபிஎஸ்) பார்த்ததும் திக்கென்று ஆகி விட்டது. அவரை நான் தாக்கிப் பேச இங்கு வரவில்லை. அரசியலில் உச்சப்பட்ச நிலையை அடைந்துவிட்டு இன்று, எம்ஜிஆர், ஜெயலலிதாவால் தீயசக்தி என்று கூறிய கட்சியில் போய் அவர் சேர்ந்திருக்கிறார். உயிருடன் இருந்த எம்ஜிஆரை இறந்துவிட்டதாக கூறி பொய் பிரச்சாரம் செய்தவர் கருணாநிதி. அவரை எல்லாம் ஓபிஎஸ் மிஞ்சிவிட்டார். பெரியகுளம் நகரச் செயலாளராக இருந்த ஓபிஎஸ்ஸை நான் சொன்ன ஒரு காரணத்துக்காக மாவட்ட செயலாளராக ஜெயலலிதா மாற்றினார். படிப்படியாக எம்எல்ஏ, அமைச்சர், எதிர்கட்சித் தலைவர் முதல்வர் என்று ஓபிஎஸ் அரசியலில் உச்சம் தொட்டது அதிமுக-வில் தான். இதை எல்லாம் மறந்து எப்படி திமுக-வில் இணைய முடிகிறது. எப்படி இவருக்கு தூக்கம் வருகிறது. மனச்சாட்சியே கிடையாதா? எப்படி வீட்டில் இவருக்கு சாப்பாடு போடுகிறார்கள் என்றே தெரியவில்லை. பதவி, பணம் இருந்தால் தான் ஓபிஎஸ்ஸை வீட்டிலேயே சேர்த்துக் கொள்வார்கள் போல. என்னிடமும் தான் திமுக தரப்பிலிருந்து பேசினார்கள். ஜெயலலிதா மீதான விசுவாசத்தால் நான் திமுக-வுக்கு டெப்பே கொடுத்துவிட்டேன்.

சட்டசபையில் ஜெயலலிதாவை தாக்கிய துரியோதன கும்பலிடம் போய் சேர்ந்திருக்கிறார் ஓபிஎஸ். அதிமுக-வில் சேர்த்துக் கொள்ளாததால் தான் திமுக-வில் சேர்ந்ததாக கபட நாடகம் ஆடுகிறார் என்றார்.

## சென்னையில் விஜய் சாலை வலம்: எழும்பூரில் பிரச்சாரம் ரத்தானதால் தொண்டர்கள் ஏமாற்றம்

சென்னையில் தி.நகர், ஆயிரம் விளக்கு, எழும்பூர் தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து தவெக தலைவர் விஜய் நேற்று சாலை வலம் நடத்தினார். தவெக தலைவர் விஜய் தமிழகம் முழுவதும் சூறாவளிப் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். அதன்படி நேற்று, சென்னையில் உள்ள தி.நகர், ஆயிரம் விளக்கு மற்றும் எழும்பூர் தொகுதிகளில் விஜய் நடத்திய பிரம்மாண்ட சாலை வலத்தில் தொண்டர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது.



நேற்று மதியம் 3 மணியளவில் நீலாங்கரையில் உள்ள தனது இல்லத்திலிருந்து பிரச்சார வாகனத்தில் விஜய் புறப்பட்டார். நந்தனம் சி.ஐ.டி நகரில் இருந்து சாலை வலத்தைத் தொடங்கிய அவர், தி.நகர் தொகுதி வேட்பாளர் என்.ஆனந்துடன் பிரச்சார வாகனத்தில் வலம் வந்தார். முத்துரங்கன் சாலையில் திரண்டிருந்த மக்கள் மத்தியில், ஆனந்துக்கு ஆதரவாக விஜய் வாக்கு சேகரித்தார். தொடர்ந்து அன்பழகன் மேம் பாலம், வடக்கு உஸ்மான் சாலை, பசுல்லா சாலை வழியாக ஆயிரம் விளக்கு தொகுதிக்குள் நுழைந்த விஜய்யுடன், அந்தத் தொகுதியின் வேட்பாளர் ஜே.சி.டி.பிரபாகர் இணைந்து கொண்டார். அவரது கையை உயர்த்திப் பிடித்து விஜய் வாக்குசேகரித்தபோது, தொண்டர் ஒருவர் எம்.ஜி.ஆரின் புகைப்படத்தை விஜய்யிடம் நீட்டினார். அந்தப் புகைப்படத்தைக் காண்பித்து, எம்.ஜி.ஆர் பாணியில் விஜய் வாக்கு சேகரித்தார்.

தொடர்ந்து, வள்ளுவர் கோட்டம் வழியாக எழும்பூர் தொகுதிக்கு வந்த விஜய் அங்கு வேட்பாளர் ராஜ்மோகனுடன் இணைந்து சாலை வலத்தைத் தொடர்ந்தார். பூந்தமல்லி நெடுஞ்சாலையின் இருபுறமும் திரண்டிருந்த மக்களை நோக்கி, 'விசில்' சின்னத்தைக் காண்பித்து உற்சாகமாக வாக்குச் சேகரித்தார்.

சேத்துப்பட்டு, கீழ்ப்பாக்கம், வேப்பேரி, பெரியமேடு வழியாகச் சென்ற சாலை வலம் இறுதியாகச் சென்னை சென்ட்ரல் ரிப்பன் மாளிகை அருகே நிறைவடைந்தது. எழும்பூர் தொகுதிக்கு உட்பட்ட வேப்பேரியில் பிரச்சாரம் செய்வதாக இருந்த விஜய், கட்டுக்கடங்காத கூட்டம் கூடியதால் கடைசி நேரத்தில் அங்கு தனது பிரச்சாரத்தை ரத்து செய்தார். இதனால் தொண்டர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

விஜய்யின் சாலை வலத்தை முன்னிட்டு சென்னை மாநகரக் காவல் துறை பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தது. மூன்று கூடுதல் ஆணையர்கள் தலைமையில் 2 ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## 'பா.ஜ.க. வெற்றி பெற்றால் புதிய நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்' திருவண்ணாமலையில் ஜே.பி.நட்டா பிரசாரம்



தமிழக சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் சூழலில், மாநிலம் முழுவதும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சுற்றுப்பயணம் செய்து தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தமிழக அரசியல் களம் சூடுபிடித்துள்ளது.

இந்நிலையில், திருவண்ணாமலையில் அண்ணாசிலை முன்பாக நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் சி.ஏழுமலையை ஆதரித்து மத்திய மந்திரி ஜே.பி. நட்டா உரையாற்றினார்.

அவர் பேசுகையில், திருவண்ணாமலை பா.ஜ.க. வேட்பாளர் ஏழுமலையை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என மக்களிடம் வாக்கு சேகரித்தார். தமிழகத்தில் போதைப்பொருள் கலாசாரம், குற்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், இதிலிருந்து விடுபட வேண்டும் என்றால் தாமரை சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மத்திய அரசின் நலத்திட்டங்கள், நிதி ஒதுக்கீடு, நெடுஞ்சாலை மற்றும் ரெயில்வே வளர்ச்சி திட்டங்களை பட்டியலிட்டு விளக்கிய அவர், மத்திய அரசின் வீடு கட்டும் திட்டம், வறுமை ஒழிப்பு, விவசாய உதவித்தொகை உள்ளிட்ட பல திட்டங்கள் கோடிக்கணக்கான மக்களை சென்றடைந்துள்ளதாக கூறினார்.

வரும் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றால் புதிய நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் எனவும் அவர் உறுதியளித்தார்.

## அண்ணாமலை என்ன சொன்னாலும் மக்கள் நம்பமாட்டார்கள்; செல்வப்பெருந்தகை



சிவகாசியில் நேற்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை நிருபர்களிடம் கூறியதாவது:- சீமான் சொல்வதை போல் நாங்கள் யாரையும் மிரட்டி தொகுதிகளை வாங்கவில்லை. நாங்கள் கேட்டது 41 தொகுதிகள். ஆனால் தி.மு.க. கூட்டணியில் கூடுதலாக சில கட்சிகள் சேர்ந்ததால் நாங்கள் கேட்ட தொகுதிகளை குறைத்துக்கொண்டோம். காரைக்குடியில் சீமான் வெற்றி பெற முடியாது.

அங்கு அவரை எதிர்த்து போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் மாங்குடிதான் வெற்றி பெறுவார். சீமான் கட்சியின் வேட்பாளர்கள் ஒரு இடத்தில்கூட வெற்றி பெற மாட்டார்கள். கட்சியை பற்றி விமர்சிப்பதை சீமான் நிறுத்தாவிட்டால், அவருக்கு சங்கடம் ஏற்படும் நிலை உருவாகும்.

அண்ணாமலை என்ன சொன்னாலும் தமிழ்நாட்டு மக்கள் நம்பமாட்டார்கள். அவர் இப்போது தொகுதி மறுவரையறை குறித்து பேசியதையும் யாரும் நம்பவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## அரசியலில் லாலிபாப் சாப்பிடுகின்ற சிறு குழந்தை: விஜய் மீது பிரேமலதா கடும் தாக்கு

சேலம் கோட்டை பகுதியில் நேற்று இரவு தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மதச்சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணி பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில், தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா கலந்து கொண்டு பேசியதாவது:-முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், பெண்களின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அவர் பெண் இனத்தின் பாதுகாவலராக திகழ்கிறார். தி.மு.க. கூட்டணி 200 இடங்களில் வெற்றி பெறும் என்று கூறினார்கள். நான் சொல்கிறேன். தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி தான் வெற்றி பெறும். 2-வது முறையாக மு.க.ஸ்டாலின் முதல்-அமைச்சர் ஆவது உறுதி. முதல்-அமைச்சர் அறிவித்துள்ள திட்டங்கள் அனைத்தும் பெண்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.



தொகுதி மறுசீரமைப்பு மூலம் தமிழகத்தை வஞ்சிக்க மத்திய அரசு திட்டமிடுகிறது. வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற நிலையை ஏற்படுத்த முயற்சிக்கிறது. தொகுதி மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து முதல்-அமைச்சர் போராடி வருகிறார். இதற்காக நாளை (அதாவது இன்று) அறிவித்துள்ள போராட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும்.

நடிகர் விஜய் முதல் தேர்தலிலேயே ஆட்சியை பிடிக்க போகிறேன் என்று கூறுகிறார். பெரிய நடிகர்கள் எல்லாம் அரசியலுக்கு வந்து என்ன ஆனார்கள்? என்பது அனைவருக்கும் தெரியும். விஜய் இரண்டு பேருக்கு தான் போட்டி என்று கூறுகிறார்.

முதலில் உங்கள் வாக்கு வங்கியை நிரூபித்துவிட்டு பேசுங்கள். 75 ஆண்டுகால பாரம்பரிய கட்சி இருக்கும்போது, தேர்தலில் நீங்கள் லாலிபாப் சாப்பிடும் லிட்டில் பாய்.

இவ்வாறு அவர் பேசினார்.

## "திமுக தோற்க வேண்டும் என ராகுல் காந்தி நினைக்கிறார்" - அண்ணாமலை அதிரடி பேச்சு

"திமுக கூட்டணியில் கூட்டணிக் கட்சிகளுக்கு முறையாக தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. தமிழகத்தில் திமுக தோற்க வேண்டும் என்று ராகுல் காந்தி நினைக்கிறார்" என பாஜக தேசிய பொதுக்குழு உறுப்பினர் அண்ணாமலை தெரிவித்தார்.

கோவை சிங்காநல்லூர் தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் கே.ஆர்.ஜெயராமை ஆதரித்து அண்ணாமலை ஆவாரம்பாளையம் பகுதியில் நேற்று பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது: இத்தொகுதியின் தேர்தல் களத்தை பார்க்கும்போது, களத்தில் கே.ஆர்.ஜெயராம் என்ற ஒரே ஒரு வேட்பாளர் தான் உள்ளார். காங்கிரஸ் வேட்பாளர் தற்போது தான் களத்திற்கு வந்துள்ளார். அவர் கடந்த முறை மநீம சார்பில், உடுமலையில் போட்டியிட்டார்.



அப்போது, அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் திமுக-வுக்கு எதிராக டிவி-யை எல்லாம் உடைத்தார். பின்னர் அவரது கட்சியே இல்லாமல் போய், இறுதியாக திமுக-வில் இணைந்துள்ளார். தமிழகத்தில் தேர்தல் முடிவு என்ன என்பது தெரியும் என்பதால், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி தமிழகத்துக்கு பிரச்சாரத்துக்கு வருவதற்கு தயாராக இல்லை.

மே 4-ம் தேதிக்கு பிறகு பழனிசாமி முதல்வராக ஆவார். ராகுல் காந்தி எங்காவது வரவேண்டும் என்றால் கடல் இருக்க வேண்டும் அல்லது குளம் இருக்க வேண்டும். கடல் இருந்தால் அதனை தாண்டி வருவார். குளம் இருந்தால் மீன்பிடிக்க வருவார். ஆனால், கோவையில் சிங்காநல்லூர், கவுண்டம்பாளையம் தொகுதியில் குளத்தை வெட்டி மீனை விடுவதற்குள் இங்குள்ள நம் வேட்பாளர்கள் வெற்றி பெற்று விடுவார்கள். தமிழகத்திற்கு ஆகாத கட்சி காங்கிரஸ். வரக்கூடாத கட்சி திமுக. இந்த இரண்டு கட்சிகளும் ஆமை புகுந்த வீடு மாதிரி.

1965-ல் பொள்ளாச்சியில் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை திமுக, காங்கிரஸுக்கு எதிராக நடத்தியது. அதன் பின்னர் காங்கிரஸ் உடனேயே திமுக கூட்டணி வைத்தது. தமிழகத்திற்கு ஒவ்வொரு பிரச்சினை வரும்போதும், மத்தியில் காங்கிரஸ் ஆட்சியும் மாநிலத்தில் திமுக ஆட்சியும் தான் இருந்தது. இவற்றையெல்லாம் பார்த்துத்தான் வாக்காளர்கள், மத்தியில் காங்கிரஸ் கட்சி வேண்டாம் என்று முடிவுக்கு வந்துள்ளனர். திமுக ஆட்சியில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள், வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு குற்றங்கள் அரங்கேறி உள்ளன. முதல்வர் ஸ்டாலின் ரிப்பன் வெட்டுவதற்காக மட்டும் தான் இங்கு வருகிறார். ஆனால், திட்டங்கள் எல்லாம் அதிமுக ஆட்சியில் தான் தொடங்கப்படுகிறது.

திமுக-வை ஒரு இடத்திலும் கூட வர விடக்கூடாது. திமுக ஆட்சிக்கு வந்தால் திருடன் கையில் சாவி கொடுத்தது போல் ஆகும். அதிமுக - பாஜக குறித்து கனிமொழி பேசுகிறார்.

## விவசாயி சின்னத்தை நாதக பயன்படுத்த தடை கோரிய வழக்கு தள்ளுபடி

**சென்னை, ஏப்.17:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி, நாம் தமிழர் கட்சிக்கு விவசாயி சின்னம் ஒதுக்கி, தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில், ஏர் உழவன் சின்னம் போல காட்சியளிக்கும் விவசாயி சின்னத்தை பயன்படுத்த நாம் தமிழர் கட்சிக்கு தடை விதிக்கக் கோரி ஜனதா கட்சி சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, தேசிய கட்சியான ஜனதா கட்சி, 1977 ம் ஆண்டு முதல் ஏர் உழவன் சின்னத்தை பயன்படுத்தி வந்துள்ளது.

தங்கள் சின்னத்தைப் போல நாம் தமிழர் கட்சிக்கு விவசாயி சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக தேர்தல் ஆணையத்துக்கு அளித்த விண்ணப்பம் பரிசீலிக்கப்படவில்லை என மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

தேர்தல் ஆணையம் தரப்பில், ஜனதா கட்சி தற்போது அங்கீகாரத்தை இழந்து விட்டதால், ஏர் உழவன் சின்னத்தை தக்க வைத்துக் கொள்ள எந்த உரிமையும் இல்லை. உச்ச நீதிமன்றமும் இதை வலியுறுத்தி உத்தரவு பிறபித்துள்ளது என வாதிடப்பட்டது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், ஜனதா கட்சிக்கு ஏர் உழவன் சின்னத்தையும், நாம் தமிழர் கட்சிக்கு விவசாயி சின்னத்தையும் ஒதுக்கி தேர்தல் ஆணையம் பிறப்பித்த உத்தரவுகளை மனுதாரர் கட்சி தரப்பில் தாக்கல் செய்யவில்லை எனவும், ஏற்கனவே அங்கீகாரத்தை இழந்த கட்சிக்கு சின்னத்தை தக்க வைக்க உரிமையில்லை என்ற உச்ச நீதிமன்ற உத்தரவையும் சுட்டிக்காட்டி, வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## “தொகுதி மறுவரையறையால் தமிழகத்துக்கு பாதிப்பு இருக்காது; மத்திய அரசு உறுதியளித்துள்ளது” - இபிஎஸ்

**சென்னை, ஏப்.17:**

“தொகுதிமறுவரையறையால் தமிழகம் உட்பட எந்த மாநிலமும் பாதிக்கப்படாது என மத்திய அரசு உறுதியளித்துள்ளது” என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் தெற்கு சட்டப்பேரவைத் தொகுதியில் எடப்பாடி கே. பழனிசாமி சித்தாபுதூர் வி.கே.கே மேனன் சாலை அருகில் சாலை வலம் வந்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசும்போது, “தொகுதி மறுவரையறையால் பாதிப்பு இருக்காது என மத்திய அரசு உறுதியளித்துள்ளது. தமிழகம் உட்பட எந்த மாநிலமும் பாதிக்கப்படாது என உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார். மக்கள் மகிழ்ச்சியடையும் வகையில் தொகுதி மறுவரையறை இருக்கும்.

மகளிருக்கு 33 % இட ஒதுக்கீடு கிடைக்காமல் தடுக்கவே ஸ்டாலின் தொகுதி மறுவரையறையை எதிர்க்கிறார். பெண்கள் மத்தியில் மத்திய அரசுக்கு நல்ல பெயர் கிடைத்துவிடும் என நினைக்கிறார். தொகுதி மறுவரையறை விவகாரத்தில் ஸ்டாலின் டபுள் கேம் ஆடுகிறார் என்றார்.

# ஏழுமலையான் கோயிலில் மே 1 முதல் விஐபி பிரேக் தரிசனத்தை ரத்து செய்ய ஆலோசனை



**திருமலை, ஏப்.17:**

கோடை காலத்தில் திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பக்தர்களின் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதனால் வரும் மே 1ம் தேதி முதல் ஜூன் மாதம் 30ம் தேதி வரை தொடர்ந்து 2 மாதங்களுக்கு விஐபி பிரேக் தரிசனம் மற்றும் ஸ்லாட்டட் சர்வ தரிசனம் (எஸ்எஸ்டி) அதாவது சர்வ தரிசனத்திற்கு திருப்பதியில் டோக்கன் வழங்குதலை நிறுத்த தேவஸ்தானம் திட்டமிட்டுள்ளது. இதனால் முன்கூட்டியே சர்வ தரிசன டோக்கன்கள் வழங்காமல், நேரடியாக சர்வ தரிசன முறையை அமல்படுத்த உள்ளது. இதனால் கடந்த 3 ஆண்டுகளில் கோடை விடுமுறையில் அமல்படுத்திய முறைகளை தேவஸ்தானம் ஆய்வு செய்து வருகிறது.

அதன்படி கடந்த 3 ஆண்டுகளில் கோடை விடுறையில், அதாவது மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மட்டும் சராசரியாக 23- 24 லட்சம் பக்தர்கள் சுவாமியை தரிசித்துள்ளனர்.

தற்போது விஐபி பிரேக் தரிசனத்திற்காக தினமும் 2 முதல் 3 மணி நேரம் ஒதுக்கப்படுகிறது. இதன் மூலம் 3,800 பக்தர்கள் சுவாமியை தரிசிக்கின்றனர். இதை ரத்து செய்வதன் மூலம் 15 ஆயிரம் பக்தர்கள் தர்ம தரிசனம் மூலம் சுவாமியை தரிசனம் செய்யலாம்.

இதனால் கோடையில் விஐபி பிரேக் தரிசனத்தை ரத்து செய்வது பற்றி தேவஸ்தானம் ஆலோசித்து வருகிறது.

# தஞ்சாவூர் பெரிய கோயிலில் சித்திரை பெருவிழா தொடக்கம்: ஏப்.27-ம் தேதி தேரோட்டம்

**தஞ்சாவூர், ஏப்.17:**

தஞ்சாவூர் பெரிய கோயிலில் சித்திரை பெருவிழா, கொடியேற்றத்துடன் நேற்று தொடங்கியது. உலக பிரசித்திப் பெற்ற தஞ்சாவூர் பெரிய கோயிலில் சதய விழா, ஆஷாட நவராத்திரி விழா, சித்திரைப் பெருவிழா உட்பட பல்வேறு விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன.



இதில் சித்திரை பெருவிழா 18 நாட்கள் நடைபெறும். இதன்படி, நிகழாண்டுக்கான சித்திரை பெருவிழா பந்தல்கால் முகூர்த்தம் மார்ச் 6-ம் தேதி நடைபெற்று நேற்று கொடியேற்றம் நடைபெற்றது.

முன்னதாக, பஞ்சமூர்த்திகளுடன் உற்சவர் சந்திரசேகரர் கோயிலுக்குள் புறப்பாடாகி கொடிமரம் அருகே சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளினார். பின்னர், கொடிமரத்துக்கு மஞ்சள், சந்தனம், பால், தயிர் உள்ளிட்ட பல்வேறு திரவியங்களால் சிறப்பு அபிஷேகங்கள் செய்யப்பட்டன.

இதையடுத்து, மங்கள வாத்தியங்கள் முழங்க கொடிமரத்தில் கொடியேற்றம் நடைபெற்றது. இதில் பக்தர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர். இதை தொடர்ந்து, நேற்று மாலை 6.30 மணியளவில் பஞ்சமூர்த்திகள் படிச்சட்டத்தில் புறப்பாடு நடைபெற்றது. விழா நாட்களில் தினமும் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. விழா நாட்களில் நாள்தோறும் பல்லக்கிலும், பல்வேறு வாகனங்களிலும் சுவாமி புறப்பாடு நடைபெறும். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் ஏப்.27-ம் தேதி காலை 5.30 மணிக்கு மேல் 6.30 மணிக்குள் நடைபெறுகிறது. அப்போது நான்கு ராஜ வீதிகளிலும் தேர் வலம் வரும். அன்று அதிகாலை 5 மணிக்குள் முத்துமணி அலங்கார சப்பரத்தில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு நடைபெறுகிறது.

18-ம் நாளான ஏப்.30-ம் தேதி தியாகராஜர் ருத்திர பாத தரிசனத்துடன் யதாஸ்தான பிரவேசம், அன்று பிற்பகல் நடராஜர் 4 ராஜவீதிகள் புறப்பாடு, சிவகங்கை குளத்தில் தீர்த்தவாரி ஆகியவை நடைபெறும். தொடர்ந்து, அன்று மாலை கொடியிறக்கத்துடன் சித்திரை பெருவிழா நிறைவடைகிறது. விழா ஏற்பாடுகளை தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம் மற்றும் அறநிலையத் துறை பணியாளர்கள், உபயதாரர்களுடன் இணைந்து செய்து வருகின்றனர்.

# தமிழ்ப் புத்தாண்டையொட்டி கோயில்களில் சிறப்பு வழிபாடு: ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம்

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு கோயில்களில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை தரிசனம் செய்தனர்.

சித்திரை மாதப் பிறப்பான நேற்று, தமிழ் புத்தாண்டு தமிழகம் முழுவதும் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. சென்னையின் முக்கிய கோயில்களில் சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் மற்றும் பஞ்சாங்கம் வாசித்தல் என ஆன்மிக நிகழ்வுகள் களைகட்டின.

வடபழனி முருகன் கோயிலில், அதிகாலை 4 மணிக்கே நடை திறக்கப்பட்டு, பள்ளியறை பூஜையுடன் வழிபாடுகள் தொடங்கின. மூலவர் முருகப்பெருமான் காலையில் தங்க நாணயக் கவசம் மற்றும் தங்கவேலுடன் ஜொலித்தார். உச்சிக்கால பூஜையில்ராஜ அலங்காரமும், மாலையில் புஷ்ப அங்கியும் சாத்தப்பட்டு பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இரவு 10 மணி வரை ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று தரிசனம் செய்தனர்.

பெசன்ட் நகர் அஷ்டலட்சுமி கோயிலில், அஷ்டலட்சுமி சந்நிதிகளில் சிறப்பு திருமஞ்சனம் மற்றும் அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. காலை மற்றும் மாலை வேளைகளில் திரளான பக்தர்கள் வருகை தந்து அன்னை அஷ்டலட்சுமியை வழிபட்டனர்.

‘வடசபரி’ என்று அழைக்கப்படும் ராஜா அண்ணாமலைபுரம் ஐயப்பன் கோயிலில் விஷு கனி தரிசனம் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. கோயில் முழுவதும் வண்ணமயமான பழங்கள் மற்றும் காய்கறிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. புத்தாண்டை முன்னிட்டு 18-ம் படி திறக்கப்பட்டு, நெய் அபிஷேகம் நடைபெற்றது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

### 3000 வருடம் ஆனாலும் கெட்டுப்போகாத அமிர்தம்... தேனைப் பற்றிய அதிர்ச்சி உண்மைகள்!

இயற்கை நமக்கு அளித்த ஆகச்சிறந்த வரங்களில் ஒன்றுதான் தேன். இதன் சுவைக்கு ஈடு இணையே இல்லை என்பது நமக்குத் தெரியும்; ஆனால் அதில் ஒளிந்துள்ள மருத்துவ குணங்களும், வியக்க வைக்கும் உண்மைகளும் பலருக்கும் தெரிவதில்லை.

1. தேன் உலகிலேயே கெட்டுப்போகாத ஒரே இயற்கை உணவுப் பொருளாகும். எகிப்திய பிரமிடுகளில் கண்டெடுக்கப்பட்ட 3000 ஆண்டுகள் பழமையான தேன் கூட இன்றும் உண்ணும் நிலையில் உள்ளது.

2. ஒரு கிலோ தேனை உருவாக்க, தேனீக்கள் சுமார் 40 லட்சம் பூக்களில் இருந்து தேனைச் சேகரிக்க வேண்டும். இதற்காக அவை பல ஆயிரம் கிலோமீட்டர்கள் ஓய்வில்லாமல் பறந்து உழைக்கின்றன.

3. இருமல் மற்றும் சளி தொல்லைக்குத் தேன் ஒரு சிறந்த இயற்கை மருந்தாகச் செயல்படுகிறது. இரவில் தூங்குவதற்கு முன் ஒரு ஸ்பூன் தேன் சாப்பிட்டால் தொண்டை கரகரப்பு நீங்கி நிம்மதியான தூக்கம் வரும்.

4. தேனில் இயற்கையாகவே பாக்டீரியாக்களை அழிக்கும் சக்தி அதிக அளவில் உள்ளது. சிறிய காயங்கள் மற்றும் தீக்காயங்கள் மீது தேனைத் தடவினால் அவை சீக்கிரமாகவே ஆறிவிடும்.

5. தேன் உடனடியாக உடலுக்கு ஆற்றலைத் தரும் ஒரு சிறப்பான இயற்கை ‘எனர்ஜி பூஸ்டர்’ ஆகும். விளையாட்டு வீரர்களும், உடற்பயிற்சி செய்பவர்களும் உடல் சோர்வை நீக்க தேனைப் பயன்படுத்தலாம்.

6. தினமும் காலையில் வெதுவெதுப்பான நீரில் தேன் கலந்து குடிப்பது உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுவாக்கும். இது ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களைத் தூண்டி நோய்களில் இருந்து நம்மைக் பாதுகாக்கிறது.

7. முகப்பரு மற்றும் வறண்ட சருமப் பிரச்சனைகளுக்குத் தேன் ஒரு அற்புதமான தீர்வாகும். தேனை முகத்தில் தடவி லேசாக மசாஜ் செய்தால் சருமம் மென்மையாகி நல்ல பளபளப்பைப் பெறும்.

8. மனிதர்கள் உயிர்வாழத் தேவையான என்சைம்கள், வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் அடங்கிய ஒரே உணவு தேன் மட்டுமே. மேலும், இதில் உடலுக்குத் தேவையான நீர்ச்சத்தும் கணிசமான அளவில் நிறைந்துள்ளது.

9. செரிமானக் கோளாறுகளைச் சரிசெய்வதில் தேன் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. அதிக உணவு உண்ட பிறகு சிறிதளவு தேன் சாப்பிட்டால் வயிறு சம்பந்தமான பிரச்சனைகள் வரவே வராது.

10. உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்களுக்குத் தேன் ஒரு மிகச்சிறந்த நண்பன் என்று சொல்லலாம். வெள்ளைச் சர்க்கரைக்குப் பதிலாகத் தேனைப் பயன்படுத்துவது உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் கரைக்க உதவும்.

# 170 ஆண்டுகால தேடலில் கிடைத்த சூரிய குடும்பத்தில் ஒளிந்திருக்கும் 9-வது கோள்?...

நமது சூரிய குடும்பத்தின் தொலைதூர எல்லைகளில் ஒரு ராட்சதக் கோள் மறைந்திருக்கலாம் என்ற பல சந்தேகம், 2025 மற்றும் 2026-ஆம் ஆண்டுகளில் கிடைத்துள்ள புதிய ஆதாரங்களால் வலுப்பெற்றுள்ளது.

சூரிய குடும்பத்தில் ஒளிந்திருக்கும் 9-வது கோள்?... 170 ஆண்டுகால தேடலில் கிடைத்த ‘பிளானட் 9’ கோள்?

நமது சூரிய குடும்பத்தில் புதன் முதல் நெப்டியூன் வரை 8 கோள்கள் இருப்பதாகத்தான் இதுவரை படித்துள்ளோம். ஆனால், நெப்டியூனுக்கும் அப்பால், கும்மிருட்டில் ராட்சதக் கோள் ஒளிந்திருப்பதாகக் கூறப்படும் ‘பிளானட் 9’ குறித்த தேடல் இப்போது உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், இதற்கான ஆதாரங்கள் நவீன தொலைநோக்கிகளில் கிடைக்கவில்லை.

1980-களில் ஏவப்பட்ட ஐ.ஆர்.ஏ.எஸ், 2006-ல் செயல்பட்ட ஏ.கே.ஏ.ஆர்.ஐ ஆகிய தொலைநோக்கிகள் சேகரித்து வைத்திருந்த பழையதரவுகளை, தைவான் விஞ்ஞானிகள் மீண்டும் ஆய்வு செய்தபோதுதான் 13 மர்மப் பொருட்கள் சிக்கியுள்ளன.



பூமியை விட 7 முதல் 17 மடங்கு பெரியது, சூரியனிடம் இருந்து சுமார் 105 பில்லியன் கி.மீ தொலைவில் உள்ளது. (நெப்டியூனை விட இது 16 மடங்கு அதிக தொலைவு) அங்கு நிலவும் வெப்பநிலை சுமார் -223°C. கதை இத்துடன் முடியவில்லை. 2025 ஆகஸ்டில் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அமீர் சிராஜ் ஒரு புதிய குண்டைத் தூக்கிப் போட்டார். ‘பிளானட் 9’ மட்டுமல்ல, அதற்கு அருகிலேயே ‘பிளானட் Y’ என்ற இன்னொரு சிறிய கோளும் இருக்கலாம் என்கிறார் அவர்.

இது பூமியின் அளவு கொண்டதாகவும், சூரியனிடமிருந்து 15 முதல் 30 பில்லியன் கி.மீ தொலைவில் இருக்கலாம் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

நெப்டியூனுக்கு அப்பால் உள்ள பாறைகளும் பனிக்கட்டிகளும் குறிப்பிட்ட திசையில் சாய்ந்தபடி சுற்றுகின்றன.

ஒரு பெரிய கோளின் ஈர்ப்பு விசை இல்லாமல் இவை இப்படி ஒழுங்காக அணிவகுக்க வாய்ப்பே இல்லை.

உதாரணத்திற்கு, 2017 OF201 என்ற குள்ளக்கோள் ப்ளூட்டோவை விட 2 மடங்கு தொலைவில் சுற்றுகிறது.

இது போன்ற பொருட்கள் ஏதோ ஒரு கண்ணுக்குத் தெரியாத ராட்சதக் கோளினால் ஈர்க்கப்படுவதை இந்த ஆய்வுகள் காட்டுகின்றன. தற்போது வரை இவை அனைத்தும் கணித ரீதியிலான கணக்கீடுகளே தவிர, யாரும் அந்தக் கோளை நேரில் பார்க்கவில்லை. ஆனால், சிலியில் உள்ள வேரா சி. ரூபின் ஆய்வுமையம் விரைவில் தனது தேடலைத் தொடங்கவுள்ளது.

இந்தத் தொலைநோக்கி அந்தக் கோளைக் கண்டுபிடித்துவிட்டால், 170 ஆண்டுகளுக்கு முன்பு நெப்டியூன் கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பிறகு, மனித இனம் கண்டுபிடிக்கும் முதல் புதிய உலகம் இதுவாகத்தான் இருக்கும். சூரிய குடும்பத்தின் வரைபடம் மாற்றி எழுதப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை.

# மழலையர் பள்ளி.... அ..ம்..மா....ம்..ஹீ..ம்..

பாப்பா....அழக் கூடாது இங்கே பாரு தம்பி சமத்தா இருக்கான்ல... ஆசிரியர் சொல்ல
சின்னச்சின்ன குழந்தைகள் எச்சில் வழிந்த நிலையில் பொம்மைகளை ஆ....ஆ....ம்மா....
வாயில் வைத்து கடிப்பதும் தரையில் அடிப்பதும் கைகளை ஆட்டிக் கொண்டு இருந்தன
ஒரு குழந்தை கண்களில் காணும் பொருட்களின் உருவங்களை பார்த்தபடி கைகளை நீட்டி எடுத்து அழுது கொண்டு இருந்த குழந்தைக்கு எடுத்து நீட்டியது குழந்தை அழுதபடி சுற்றி இருந்தவர்களைப் பார்த்து மிரண்டு வாசலைப் பார்த்து ம்மா......என குரல் கொடுத்தது



ஆசிரியர் டப்பாக்களில் சாக்லெட்,ஆரஞ்சு மிட்டாய், பிஸ்கட் இருந்ததில் பாப்பா இந்த மிட்டாய்... கொடுத்தும் வாங்க மறுத்து ம்மா....எனச் சொல்லிக் கொண்டு இருந்த போது சிறுவனொருவன் மெதுவா நடந்து வந்து ப்பா...
என சொன்னவன் கீழே இருந்த பொம்மையை எடுத்து கொடுக்க அவனையே பார்த்தது
"தம்பி பாப்பா அழுற அவள் கிட்டே போகாதே" என்று ஆசிரியர் சொல்ல கைகளை நீட்டி வா என அழைத்தான் அப்போது

சன்னல் கம்பிகளில் க்யூகி...க்யூகி...என்று சிட்டுக்குருவி ஒன்று இங்கும் அங்குமாக தலையை திருப்பி திருப்பி சத்தம் போட்டது எல்லாக் குழந்தைகளும் அந்தக் குருவியையே பார்க்க அது உள்ளே வந்து அங்கும் இங்கும் பல்டி அடித்து சுவரோரமாய் இருந்த குழந்தை படத்தின் மேல் அமர்ந்து சத்தம் போட,அழுத குழந்தை அமைதியாய் குருவியை பார்த்தது சிறுவன் கைதட்டி சிரித்தான் சிட்டுக்குருவி விருட்டென சன்னல் கம்பியில் நுழைந்து வெளியே பறந்து சென்றது அதன் பின் பட்டாம் பூச்சி இரண்டு ஒன்றின் ஒன்றாக பறந்து பிள்ளைகள் சுற்றி மேலும் சுற்றுப் பக்கமும் பறந்து குழந்தைகளுக்கு விளையாட்டு காட்டியபடி குழந்தை படத்தில் அமர்ந்து இறகுகளை அடித்தபடி பின் சன்னல் வழியே பறந்து சென்றது
ஆசிரியர் எல்லாக் குழந்தைகளுக்கும் பிஸ்கட் கொடுக்க வாங்கிய பிள்ளைகள் வாயில் வைத்து சப்பிக் கொண்டபடி

ஆ..ஆ.ஆ..என தலையாட்டின சில்வர் டம்ளரில் தண்ணீர் கொடுக்க வாங்கி சாப்பிட்ட குழந்தைகள்
ஆசிரியர் அம்மா எங்க, ம்மா... எனச் சொல்லி வாசலைப் பார்த்தது ஒரு குழந்தை முகத்தில் எல்லாம் பிஸ்கட்டை அப்பி வைத்திருக்க துண்டை எடுத்து துடைத்தாள் சிறுவன் சிறுநீர் கழிக்க அடடே எனச் சொல்லிக் கொண்டே

இங்கே "வாங்க என்ன உச்சா போயிட்டிங்களா....
வரும் போது சொன்னா டவுசர் ஈரமாகாமல் இருக்கும்ல "இப்போ டவுசரைக் கழட்டி சுத்தம் செய்தால் பிளாஸ்டிக் சேரில் உட்கார வைக்க அழுது கொண்டு இருந்த பாப்பா தூங்கி தூங்கி தலையை ஆட்ட "பாப்பா தூக்கம் வருதா இங்கே படுங்க"என விரிப்பில் படுக்க வைத்தாள்
இருபது குழந்தைக்கு மேல் பராமரிப்பு பேச கற்றுக் கொடுப்பதற்காக பெற்றோர்கள் வந்து விட்டுச் செல்கிறார்கள் குழந்தைகள் தாயோட நினைப்பே இன்னும் மாறல எப்படி பேசக் கற்றுக் கொடுப்பது தாயன்பிற்கு இணை எதுவும் இல்லை சின்னக் குழந்தைகள் அன்பாய் ஆதரவு காட்டி அவர்கள் மொழியில் உறவுகளை அறிந்த பின் தான் அடுத்தவர்கள் சொல்வதை கேட்கும் எண்ணம் வளரும் கல்யாணம் ஆகாத எனக்கு இருபது குழந்தைகள் சமத்தான குழந்தைகள் பெண்ணும்,ஆணும் ஒவ்வொன்றும் தனித்தனி குணங்களுடையதாய் இருக்கிறார்கள்
குழந்தையோடு குழந்தையா மாறி அவர்களுக்கு நல்வழியை காட்டிடனும் என்றெண்ணிய அமுதா குழந்தைகளுக்கு பாடல் பாடினால்
"பாப்பா பாப்பா ஓடிவா
பாடும் பறவையாய் பாடிவா
மிட்டாய் சுவைத்திடலாம் வா
துள்ளிவா...வா "என கைகளை காட்டி அழைத்தாள் அமுதா
ஏதோ துர்நாற்றம் வீசுவதை உணர்ந்து யாரு ஆயி போனீங்க என்றெழுந்து ஒவ்வொரு குழந்தையாய் பார்த்தாள்
"
ம்மா....என அழைத்தவன் அருகில் சென்றாள் பக்கத்தில் படுத்திருந்த குழந்தைதான் அணிந்திருந்த உடை எல்லாம் பரவி இருந்ததைப் பார்த்தாள் உடைகளை கழட்டி குழாயருகே தூக்கிச் சென்று சுத்தம் செய்து வேறு விரிப்பில் குழந்தையை படுக்க வைத்து விட்டு உடைகளை எல்லாம் சுத்தம் செய்து காயவைத்தாள்
அமுதா "பெத்தவங்கட்ட சொல்லக்கூடாதா காலையிலேயே பிள்ளைகளை கவனித்து அனுப்ப மாட்டார்களா.."என்று சமையல் செய்த ஆயாம்மாள் கேட்க,
"அம்மா...காலையில் எழுந்த அவங்களுக்கு எவ்வளவு வேலை இருக்குமோ கவனிக்காமல் கொண்டு வந்து விட்டுறாங்க இங்கே வந்த பின்னாடி தான் குழந்தைகள் பிஸ்கட்,மிட்டாய்ன்னு சாப்பிடுதுக சில பிள்ளைகள் பசியோட இருக்கும் போலிருக்கு பிஸ்கட் பால் கொடுக்கவும் அழுத பிள்ளை அமைதியா பொம்மையை வச்சு விளையாடுகிறது"
"உனக்கு இருக்கும் பொறுமை எனக்கு இல்லமா "என்று சொல்லிக் கொண்டே உணவு சமையல் வேலையை செய்யப் போனாள்
"என் பிள்ளை என்றால் செய்ய மாட்டேனா"
என்று அமுதா சொன்னதை கேட்காமல் சென்றாள் ஆயாம்மா.



-நல.ஞானபண்டிதன்,
திருப்புவனம் புதூர்

# செவிலித்தாய்...

அன்று இரவு என் தந்தை இடதுபுற சிறுநீரகப்பகுதியில் மிகவும் வலிக்கிறது என்று துடியாய் துடித்தார்... வீட்டில் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்த நேரம் எல்லோரும் தடாலடியாக எழுந்து என்னஆயிற்று ஏதாயிற்று என்று அப்பாவை சுற்றி நின்றோம் அப்பாவோ வலி பொறக்க முடியாமல் மிகவும் சங்கடத்தில் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார். இந்த நள்ளிரவில் என்ன செய்வது என்று நாங்கள் புலம்பி கொண்டு இருந்த போது... எங்கள் வீட்டின் சத்தம் கேட்டு பக்கத்து வீட்டு அண்ணா எழந்து வந்து விட்டார்."எல்லோரும் இப்படி சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம் அவர் வலி தாங்க முடியாமல் துடித்துக் கொண்டிருக்கிறார் சட்டென வெளியே அழைத்து வாருங்கள் என்னுடைய ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்கு சென்று விடலாம்" என்று கூறினார் பக்கத்து வீட்டு அண்ணா. ஆட்டோவில் அப்பாவை ஏற்றிய போது இரவு மணி ஒன்று.

எங்கள் வீட்டிலிருந்து கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இரண்டு கிலோமீட்டர் மட்டுமே, என்பதால் மிகவும் விரைவாக கொண்டு வந்து அவசர பிரிவில் அப்பாவை அனுமதித்தோம். அந்நேரத்தில் பல செவிலியர்களும் சில மருத்துவர்களும் இருந்தார்கள் அவர்கள் அப்பாவின் வலியை நிறுத்துவதற்காக மட்டுமே சில ஊசியையும் மருந்துகளையும் கொடுத்து அமரச் சொன்னார்கள். பிறகு அப்பாவை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அப்பாவின் சிறுநீரக ப்பகுதியில் பெரிய அளவில் இரண்டு கல் இருக்கிறது என்றும், அதை அறுவை சிகிச்சை செய்துதான் அகற்ற வேண்டும் என்றும் கூறினார்கள். எனவே உடனடியாக கிட்னி சம்பந்தப்பட்ட நோயாளிகள் பிரிவில் அனுமதிக்கும்படி கூறினார்கள். நோயாளிகள் பிரிவுக்கு கொண்டு வந்து அப்பாவை படுக்க வைத்த போது பின்னிரவு நான்கு மணி ஆகிவிட்டது. அந்நேரத்தில் அங்கிருந்த ஒரு பெண்செவிலியர் "இந்நேரத்தில் வந்து ஏன் இப்படி தொந்தரவு செய்கிறீர்கள் உங்களுக்கெல்லாம் நேரம் காலமே கிடையாதா" என்று முகத்தில் அடித்தார் போல் எங்களிடம் பேசியது எங்களுக்கு மிகவும் சங்கடமாகவும் அவமானமாகவும் கூட இருந்தது.



ஒரு செவிலிப்பெண் நோயாளிகளிடம் எப்படியெல்லாம் நடந்து கொள்ளக்கூடாதோ எப்படி எல்லாம் பேசக்கூடாதோ அப்படி யெல்லாம் நடந்து கொண்டும் பேசிக் கொண்டும் இருந்தார் அந்த செவிலிப்பெண்... அதே சமயம் தன்னுடைய வேலையில் இம்மிய ளவும் பிசறாமல் தன் வேலை உண்டு தன் கடமையை உண்டு என்று விடிய விடிய வேலை செய்து கொண்டிருந்தார் அந்த செவிலிப் பெண். உடலை முழுவதுமாக மறைத்த வெள்ளுடுப்பும், தலையில் வெள்ளை நிற துணியும், முகத்தில் முகமூடியும், அணிந்திருந்ததால் அந்த செவிலி பெண் சரியாக அடையாளம் கூட தெரியவில்லை காலை ஏழு மணிக்கெல்லாம் அவருடைய வேலை நேரம் முடிந்து , வேறொரு செவிலிப்பெண் அந்த இடத்திற்கு வந்தார் அவரோடு மற்றும் சில மருத்துவர் மாணவ மாணவிகள் இருந்தார்கள்.

நோயாளிகளின் ஒவ்வொரு கட்டிலாக வந்து அவரவர் பெயரை சொல்லி அன்றைய பதிவேட்டை நிரப்பிக் கொண்டிருந்தார் அந்த செவிலிப்பெண்.எங்கள் முறை வந்ததும்,"ஓ நீங்க தான் இரவில் வந்த புதிய உடல் நலக் குறைவாளரா..?"என்று கேட்டபடி என் அப்பாவை மிகவும் கருணை மிதந்து முகத்தோடு கவனித்தார் அந்த செவிலி. அதே வெள்ளுடுப்பு,
தலையில் வெண்ணிற துணி முகமூடி அணிந்திருந்தாலும் கூட கொஞ்சம் சிவந்த நிறம்... என்பது நன்றாக தெரிந்தது அவருடைய குணமும் அணுகுமுறையும் எல்லோரிடமும் அன்பாய் பழகுகின்ற விதமும் மிகவும் பிடித்திருந்தது. காலை ஒன்பது மணிக்கெல்லாம் பெரிய டாக்டர் வந்தார்... அப்பாவை பார்த்துவிட்டு உடனடியாக பல பரிசோதனைகள் செய்ய வேண்டும் எனக் கூறி எழுதி கொடுத்துவிட்டு சென்றார் அவர் சொன்ன அத்தனை பரிசோதணைகளையும் அன்று மதியத்திற்குள் முடித்து மீண்டும் கிட்னி நோயாளிகள் பிரிவுக்கு வரும் பொழுது மதியம் மணி இரண்டு. அன்றைய பொழுது அப்பாவுக்கான முதலுதவி போன்ற சம்பவங்களால் நகர்ந்து போனது. மீண்டும் மாலை 6 மணிக்கு மேல் நேற்றிருந்த அதே செவிலிப்பெண் பணிக்கு வந்திருந்தார். நேர பணியில் இருக்கும் போது அப்படி கடுகடுப்பாகவும் சிடுசிடுப்பாகவும் கண்டிப்பாகவும்,... இல்லாமல் போனேனென்று சொன்னால் இங்கே இருக்கிற நோயாளிகளும், நோயாளிகளோடு வந்திருக்கிற காப்பாளர்களும், ஆண்களில் பலர் தவறான வேலைகளுக்கு மருத்துவமனையை விட்டு வெளியே சென்று விடுவார்கள். இங்கே வந்திருக்கிற ஆண்களில் பல பேருக்கு புகைப்பழக்கமும், குடிப்பழக்கமும் இருக்கிறது என்பது எனக்கு நன்றாக தெரியும். நான் கண்டிப்பாகவும்,காராராகவும் இல்லாமல் போனேனென்றால் அவர்கள் புகைப்பதற்க்கும், குடிப்பதற்கும், மருத்துவமனையை விட்டு வெளியே சென்று தேவையில்லாமல் சிக்கலில் மாட்டி அவர்களும் தங்களுடைய உடலில் இருக்கின்ற குறைகளை மறந்து, நோய்களை மறந்து... மேலும் மேலும் நோய்வாய்ப்பட்டு போக வாய்ப்பிருக்கிறது. அதனால்தான் இரவு நேரங்களில் நான் ஒரு ராட்சசையை போல உங்களிடம் பேசுகிறேன்"

என்று அவர் பேசி முடித்ததும், நோயாளிகள் பிரிவில் இருந்த அத்தனை பேரும்... அந்த கருணை தெய்வத்தின் உண்மையான குணம் அறியாமல் இத்தனை நாள் இருந்ததை எண்ணி வெட்கமாய் இருந்தது. ஒருபெண் சேவகியின் உண்மையான முகம் அறியாமல் அவரை ராட்சசியென்றும், கொடுமைக்காரர் என்றும், அரக்கி யென்றும், பேசியும் யோசித்தும், அவர் இல்லாத போது அவரைப் பற்றி எல்லோரும் கூடி கூடி தவறாக பேசியது எல்லாம் நினைத்து நினைத்து அன்று இரவு முழுவதும் என்னால் தூங்கவே முடியவில்லை.

மறுநாள் காலையில் சாலை ஓரங்களில் மீண்டும் அதே பணிப்பெண் ஏழை பாழைகளுக்கு உணவு பொட்டலங்களை வழங்கிக் கொண்டிருக்க நானும் என் பங்கிற்கு நான்கு உணவு பொட்டலங்களை கொண்டு சென்று அந்தப் பணிப்பெண்ணிடம் கொடுத்து "இதையும் எல்லோருக்கும் கொடுத்து விடுங்கள்"என்று கூறியபடி, அந்த செவிலித்தாயிடம் மனப்பூர்வமாக மனதிற்குள் மன்னிப்பு கேட்டபடி நின்று கொண்டிருந்தேன்.



-முத்தையா மோகன்
கோயம்புத்தூர் 18.

# மாயக்கண்ணன் லீலை (பாகம் -7)





- எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம்.
சென்னை 88

வத்சாசுரன்'

பிருந்தாவனத்தில் வாசமுள்ள மலர்கள் பூத்துக் குலுங்கியது. வண்டுகள் ரீங்காரமிட்டு சுற்றியது. பூக்களில் உள்ள தேனை தேனீக்கள் உறிஞ்சியது. பறவைகளின் இனிமையான கீச்.. கீச்.. என்ற சத்தம் கேட்டது. இயற்கை எங்கும் கொஞ்சி விளையாடியது. கிருஷ்ணன், பலராமன் மற்ற இடை சிறுவர்களுடன் கொம்பு, புல்லாங்குழல் முதலியவற்றை எடுத்துக் கொண்டும், கன்றுகளையும், பசுக்களையும் மேய்த்துக்கொண்டு வனம் முழுவதும் சுற்றித்திரிந்தார்கள். கிருஷ்ணனின் குழலோசை கேட்டதும் அங்கு உள்ள சிறுவர்கள் ஆனந்தம் அடைந்தனர். பசுக்களின் குழலின் ஓசையை கேட்டு மயங்கியது. அவனுடைய பிஞ்சு பாதங்கள் அந்த வனத்தில் பட்டதால் அங்குள்ள செடிகள், மரங்கள், வயல்கள் யாவும் 'பச்சை பசேல்' என்று செழித்து விளங்கியது. இவ்வாறு தினமும் யமுனை ஆற்றங்கரையில் பலராமனும், கிருஷ்ணனும் தன் நண்பர்களுடன் சென்று கன்றுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் கன்றுகள் யாவும் கூட்டமாக நின்று கொண்டு புற்களை மேய்ந்து கொண்டும் ,சில பசுக்கள் ஆற்றில் தண்ணீர் குடித்துக் கொண்டும் இருந்தன. சிறுவர்கள் எப்பொழுதும் போல் விளையாடிக் கொண்டிருந்தனர். யாரும் அறியாத பொழுது கம்சனால் அனுப்பப்பட்ட அரக்கர்களில் ஒருவனான வத்ஸா சுரன் வந்தான் . 'வத்ஸா' என்றால் பசுங்கன்று என்று பொருள்.



அவன் கிருஷ்ணனை கொல்வதற்காக வந்தவன் .யாரும் தன்னை கவனிக்காத போது கன்றின் வடிவில் வந்து மற்ற கன்றுகளுடன் சேர்ந்து கொண்டான். தன்னை யாரும் கண்டு பிடிக்க முடியாது என எண்ணினான். சிறுவர்கள் யாருக்கும் அந்த கன்றினை அடையாளம் காண முடியவில்லை .ஆனால் கிருஷ்ணன் அதை கவனித்து விட்டான். அந்த அசுரன் வேகமாக தன் வாலை அசைத்துக் கொண்டு, முகத்தை திருப்பிக் கொண்டு, கிருஷ்ணனை நெருங்கி வந்து கொண்டிருந்தார். அப்பொழுது கிருஷ்ணன் பலராமரிடம் அந்த கன்றினை விரலால் சுட்டிக்காட்டினார் .அந்த பசுகன்று கிருஷ்ணனை கொல்லுவதற்காக வேகமாய் வந்த போது கிருஷ்ணன் அந்த கன்றின் பின் கால்களையும், வாலையும் சேர்த்து பிடித்து வேகமாக சுழற்றி அந்த வத்ஸா சுரனை அருகிலிருந்த விளா மரத்தின் மீது தூக்கி எறிந்தான். கிருஷ்ணனின் பலத்தையும், வீரத்தையும் தாங்க முடியாத அந்த அசுரன் விளாமரத்தின் மீது மோதியதால் அவன் இறந்து போய் கீழே விழுந்தான் .விளாமரத்தின் மீது தூக்கி எறியும் போது அந்த விளாமரமும் கீழே விழுந்தது. அந்த விளாமரத்திலும் ஒரு அசுரன் ஒளிந்து கொண்டிருந்தான்.அவன் பெயர் 'கபித்தா சுரன்' .கிருஷ்ணன் கன்றுகளை மேய்த்துக்கொண்டு மரத்தின் அருகில் வரும் பொழுது அவன் மேல் விழுந்து அவனை கொன்று விடலாம் என எண்ணியிருந்தான். ஆனால், இப்போது இரு அரக்கர்களையும் ஒரே சமயத்தில் கிருஷ்ணன் வதம் செய்தான். இதைப் பார்த்த சிறுவர்கள் கிருஷ்ணனை கொண்டாடினார்கள். தேவர்கள் மேலோகத்தில் இருந்து பூமாரி பொழிந்தார்கள். இடைச்சிறுவர்கள் கண்ணனின் தலையில் விழுந்த பூக்களை பார்த்து இந்த மலர்கள் எங்கிருந்து விழுகிறது? என்று ஆச்சரியத்துடன் பார்த்தனர் !! கிருஷ்ணன் அதற்கு 'இந்த அசுரனை மரத்தில் எறிந்த போது அந்த மரத்தின் உள்ள பூக்கள் வேகமாக மேலே சென்று மெதுவாக கீழே விழுகிறது என்று சொன்னார். இந்த சம்பவம் கிருஷ்ணனின் பால லீலைகளில் ஒன்று.

தொடரும்..

# அனுமனுக்கு சாத்தப்படும் வெற்றிலை மாலையின் அற்புத சக்தி : இதன் ரகசியம் தெரியுமா?

பக்தி என்றால் பல வழிகள் இருக்கலாம்... ஆனால் சில வழிபாடுகள் — நேரடியாக பலனை தரும்! அப்படிப்பட்ட அதிசயமான ஒரு வழிபாடு தான் ஆஞ்சனேயருக்கு வெற்றிலை மாலை சாத்துவது.

★ இது ஒரு சாதாரண பூஜை அல்ல...

★ இது சீதையின் ஆசீர்வாதத்தை நினைவூட்டும் ஒரு தெய்வீக வழிபாடு!

★வெற்றிலை மாலையின் தோற்றம் — ஒரு புனிதக் கதை

இலங்கையின் அசோக வனத்தில் சிறைப்பட்டிருந்த சீதாதேவியை தேடி அனுமன் புறப்பட்டார். அவன் பயணம் எளிதானது அல்ல...

★கடல் கடந்து சென்றான்

★அசுரர்களை வென்றான்

★ பல தடைகளை தாண்டி இறுதியில் சீதையை கண்டான்



அந்த தருணம் — ஒரு பக்தனின் வெற்றி! ஒரு தூதனின் கடமை நிறைவு! அப்போது, ஸ்ரீராமர் கொடுத்த மோதிரத்தை அனுமன் சீதையிடம் கொடுத்தான்.

அதைப் பார்த்த சீதாதேவி:

★ பேரானந்தத்தில் மூழ்கினார்

★ அனுமனை ஆசீர்வதிக்க விரும்பினார்

ஆனால்... அந்த நேரத்தில் அட்சதை இல்லை!

★உடனே அருகிலிருந்த வெற்றிலைகளைப் பறித்து அனுமன் மீது தூவி ஆசீர்வதித்தார்

★பின்னர், அந்த வெற்றிலைகளை மாலையாக கட்டி அனுமனுக்கு அணிவித்தார்! அந்த தருணமே — வெற்றிலை மாலை வழிபாட்டின் தொடக்கம்!

★ஏன் அனுமனுக்கே வெற்றிலை மாலை?

★இந்த மாலை — சீதையின் ஆசீர்வாதத்தின் சின்னம்

★அதனால், அனுமனுக்கே இது மிகச் சிறப்பு

★மற்ற தெய்வங்களுக்கு:

வெற்றிலை மாலை சாத்தக்கூடாது தாம்பூலமாக மட்டும் சமர்ப்பிக்கலாம்

★மாலை கட்டும் விதிமுறை

வெற்றிலை மாலை கட்டும் போது:

★ஒற்றைப்படை எண்ணிக்கை மட்டுமே

★காம்பு பகுதியை நீக்க வேண்டும்

★நடுவில் பாக்கு வைத்து கட்ட வேண்டும்

★வெறும் வெற்றிலை மட்டும் கட்டக்கூடாது

★எத்தனை வெற்றிலை? — தேவைக்கு ஏற்ற பலன்

★9 வெற்றிலை மாணவர்களுக்கு படிப்பில் கவனம், நினைவாற்றல்

★11 வெற்றிலை குடும்ப பிரச்சனை வேலை சிக்கல் தீர

★21 வெற்றிலை பணவரவு திருமணம், சுபகாரியம்

★108 வெற்றிலை பெரிய பிரச்சனைகள் அனைத்து தடைகளும் நீங்க

★எந்த நாளில் சாத்தலாம்?

★ சனிக்கிழமை

★செவ்வாய்க்கிழமை

★அமாவாசை

★மூலம் நட்சத்திரம்

★தொடர்ந்து 9 வாரம் சாத்தினால்: மிகுந்த பலன் கிடைக்கும்!

★நைவேத்யம் — சிறப்பு

★தயிர் சாதம் வைத்து நைவேத்யம் செய்தால் அனுமனுக்கு மிகவும் பிரியம்!

★கிடைக்கும் பலன்கள்

வெற்றிலை மாலை சாத்தி வேண்டினால்:

வீட்டில் மகிழ்ச்சி பெருகும்
குழந்தைகளுக்கு புத்தி கூர்மை
நினைவாற்றல் அதிகரிக்கும்
தம்பதியர் ஒற்றுமை
தொழில் வளர்ச்சி
பயம் நீங்கும்
தன்னம்பிக்கை உயரும்

★மேலும்:

நவகிரக தோஷங்கள் விலகும்
சனி பகவானின் பாதிப்பு குறையும்

★இறுதி உணர்வு

அனுமனை மனதார நம்பி வெற்றிலை மாலை சாத்தினால்:

★ "அசாத்யம்" கூட "சாத்யம்" ஆகும்!

★ஒரு உண்மையான பக்தனின் பிரார்த்தனை எப்போதும் வெற்றியே தரும்!

தகவல்:
முனைவர்
**இராம.வேதநாயகம்.**

## தினம் ஒரு தலைவர்கள்

# பாஷ்யம் (எ) ஆர்யா வரலாறு

பாஷ்யம் எனும் இயற்பெயர் கொண்ட ஆர்யா (1907 - 1999) இந்திய விடுதலைப் போராட்ட வீரர். 1932-ல் இன்று சென்னை தலைமைச் செயலகம் இருக்கும் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள கொடிக்கம்பத்தின் உச்சியில் ஒருவரும் அறியாமல் ஏறி, பிரித்தானிய கொடியான யூனியன் ஜாக்கை இறக்கிவிட்டு, இந்திய தேசியக் கொடியை ஏற்றிய மாவீரர் பாஷ்யம் எனும் ஆர்யா. சிறந்த ஓவியர்; சிற்பி; தற்காலத்தில் புழக்கத்தில் இருக்கும் மகாகவி பாரதியாரின் படத்தினை வரைந்தவர்.

இளமையும் கல்வியும்

சென்னை மாகாணத்தின் தஞ்சாவூர் மாவட்டத்தின், மன்னார்குடி வட்டத்தில் உள்ள சேரங்குளம் கிராமத்தில் 1907-ஆம் ஆண்டில் பிறந்தார் பாஷ்யம். 'சுதேசமித்திரன்' ஆசிரியராக இருந்த தேசபக்தர் ஏ. ரங்கசாமி ஐயங்கார் இவரது உறவினர். மன்னார்குடியில் கல்வி பயின்றார். தன் 11ஆம் வயதில் பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ் நகரத்தில் நடைபெற்ற ஜாலியன்வாலாபாக்கில் படுகொலையினால் ஆவேசம் கொண்டார். நீடாமங்கலம் சென்று அங்கு நடந்த காந்திஜியின் சொற்பொழிவைக் கேட்டார். அந்த இளம் வயதிலேயே தேச சேவைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள உறுதி பூண்டார்.

மன்னார்குடியில் உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்தபின் திருச்சி தேசியக் கல்லூரியில் பயின்றார். அங்கு படித்த காலத்தில் இவர் பாடப்புத்தகங்களைக் காட்டிலும் தேசபக்தி நூல்களையே அதிகம் படித்தார். லாலாலஜபதிராயின் 'துரதிர்ஷ்ட இந்தியா' வீர சாவர்க்காரின் '1857- இந்திய சுதந்திரப்போர்' விவேகானந்தரின் சொற்பொழிவுகள் அரவிந்தர் வரலாறு வ. வே. சு. அய்யர் வரலாறு இந்துஸ்தான் ஜிட்டர் புரட்சியாளர் கட்சித்தலைவர் லாலா ஹர்தயாள் வரலாறு வங்காளப் புரட்சியாளர்கள் திட்டங்கள்ஆ கிய நூல்களை பாஷ்யம் தேடிப்படித்தார். இதனால் இளைஞர் பாஷ்யம், இந்திய விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடவும் தயாராகத் தன்னை உறுதிப்படுத்திக்கொண்டார்.

சைமன் கமிசன் போராட்டம்

இங்கிலாந்திலிருந்து 'சைமன்' என்பவர் தலைமையில் சைமன் குழு இந்தியா வந்தது. காங்கிரசார் மற்றும் இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ் விடுத்த அறைகூவல்களை ஏற்று இந்தியாவெங்கும் அதனை கருப்புக்கொடி காட்டி திரும்பிப்போ என்ற முழக்கத்தோடு போராட்டங்கள் வெடித்தன. சைமன் கமிஷன் திருச்சி வந்தது. அங்கும் தேசியக் கல்லூரி மாணவர்கள் பாஷ்யம் தலைமையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் கல்லூரி திரும்பிய மாணவர்களுக்கு 2 உரூபாய் அபராதமும் தலைமை தாங்கிய பாஷ்யத்திற்கு 5 உரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. பணத்தைக் கட்ட மறுத்தார் பாஷ்யம். முதல்வர் சாரநாதன் 5 ரூபாய் தானே கொடுத்து கட்டச் சொன்னதால் அபராதம் கட்டினார். ஆனால் இது தனது தேசபக்திக்கு அவமானம் எனக் கூறி கல்லூரியை விட்டு வெளியேறினார்.

புரட்சி நடவடிக்கைகள்

எனினும் தேசவிடுதலை இவரை அழைத்துக் கொண்டது. புரட்சி அமைப்புகள் இவரை கைநீட்டி வரவேற்றன. அய்யலூர் ரயில்வே நிலையத்துக்கு 7 மைல் தூரமுள்ள பஞ்சந்தாங்கிப் பள்ளத்தாக்குப் பகுதியில் துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றார். இதற்காக மகாகவி பாரதியாரின் நெருங்கிய நண்பர் முத்துக்குமாரசாமிப் பிள்ளை மூலம் துப்பாக்கிகள் வாங்கிக்கொண்டார். இங்கு புதுவை விடுதலை வீரர் வ. சுப்பையாவைச் சந்தித்தார். "யுனிவர்சிட்டி டிரைனிங் கோர்" படையில் துப்பாக்கி சுடும் போட்டியில் வெற்றி பெற்ற பாஷ்யம் தனது நண்பர்களுக்கும் இப்பயிற்சியை அளித்தார். புரட்சியாளர் சங்கத்தில் உறுப்பினராகி, காளி படத்தின் முன் ரத்தக் கையெழுத்திட்டு உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.

கொலை முயற்சி

சேரங்குளத்துக்குத் திரும்பிய பாஷ்யம் தேசத்திற்காக ஏதாவது செய்யவேண்டும் எனத் துடித்தார். அப்போது கவர்னர் மார்ஷ் பாங்ஸ் என்பவர் சிதம்பரம் நடராஜர் பூங்காவிற்கு அடிக்கல் நாட்ட வருவதாக செய்தி கிடைத்தது. எனவே பாஷ்யம் சிதம்பரம் சென்றார். சட்டைப்பையில் மறைத்து வைத்துக்கொண்ட துப்பாக்கியுடன் கவர்னர் கலந்து கொண்ட கூட்டத்திற்குச் சென்று அவரைச் சுட முயன்று, முடியாமல் போனது. தஞ்சை திரும்பி தனது நண்பர் கோபாலகிருஷ்ணனிடம் சொல்லி வருத்தப்பட்டார். அவர் பாஷ்யத்தின் செயலை ஏற்றுக் கொள்ளவில்லை. இனி இதுபோன்ற செயல்களை விடுத்து மகாத்மாவைப் பின்பற்றும்படி அறிவுரை கூறினார்.



வங்கிக்கொள்ளை

விடுதலைப் புரட்சிக்காகப் பணம் தேவைப்பட்டது. எனவே மதுரை இம்பீரியல் வங்கியைக் கொள்ளை அடிக்கத் திட்டம் தீட்டினார். ஆனால் ராமசாமி, மாரியப்பன் என்ற இரு நண்பர்கள் அவசரப்பட்டு முயற்சியில் இறங்கி தோல்வியடைந்து காவலர்களிடம் சிக்குண்டனர். சித்திரவதைக்கு உள்ளானதில் மாரியப்பன் என்பவர் பாஷ்யத்தின் பெயரைக் காட்டிக்கொடுத்தார். ஆனால் பாஷ்யம் இரவோடு இரவாக தடயங்களை எல்லாம் அழித்துவிட்டு தனது அறைக்குச் சென்றார். விடிந்ததும் இவரைக் கைது செய்த காவலர்கள், இரண்டு மாதங்கள் சித்திரவதை செய்துவிட்டு இவர் மீது எந்த ஆதாரமும் இல்லையென விடுதலை செய்தனர். ஆனால் சதிகாரக் கேடி என்ற பட்டியலில் இவர் பெயர் சேர்க்கப்பட்டது.

சுதேசி இயக்கமும் சேவாதளமும்

1931இல் சென்னை சென்று தமையனார் வீட்டில் தங்கினார். போலீஸ் கண்காணிப்பு இருந்தும், இவர் கதர் அணிந்து கதர் துணி விற்பனை செய்தார். அந்நிய துணிகளை வாங்காதீர்கள் என்று வேண்டுகோள் விடுத்தார். அதன் பயனாய் துணிக்கடைக்காரர்கள் இவர் மீது வெற்றிலைப் பாக்கு எச்சிலை உமிழ்ந்தார்கள், சிகரெட் துண்டுகளை நெருப்புடன் வீசினார்கள். ஐஸ் ஹவுஸ் பகுதியில் கள்ளுக்கடை முன்பு மறியல் செய்த போது கடைக்காரர் பாஷ்யத்தின் தலையில் கள்ளுப்பானையைப் போட்டு உடைத்தார். இந்துஸ்தான் சேவாதளத்தின் தலைவர் டாக்டர் ஹார்டிகார் சென்னைக்கு வந்த போது சேவாதளத் தொண்டராக பாஷ்யத்தைச் சேர்த்துகொண்டார். பகல்கோட் நகரில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபோது, லண்டன் வட்டமேசை மாநாடு தோல்வி, தாயகம் திரும்பிய காந்தி கைது ஆகியவை நடைபெற்றன. வைசிராய் வெல்லிங்டன் நாடு முழுவதும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டார். இதனால் அரசியல் இயக்கங்கள், கூட்டங்கள் தடை செய்யப்பட்டன. எனவே சேவாதளத்தைக் கலைத்த ஹார்டிகார், தொண்டர்கள் அவரவர் பகுதிக்குச் சென்று தடை உத்தரவுகளை மீறிச் சிறைபுக வேண்டும் எனக் கூறி தொண்டர்களை அனுப்பினார். பாஷ்யம் சென்னை திரும்பினார்.

கோட்டையில் தேசிய மூவண்ணக் கொடியை ஏற்றுதல்

ஜவஹர்லால் நேரு ஜனவரி 26-ஆம் தேதியை நாட்டு மக்கள் சுதந்திர தினமாகக் கொண்டாடுமாறு அறைகூவல் விடுத்தார். அதனை ஏற்று பாஷ்யம் ஒரு சாகசத்துக்கு தயாரானார். பெரிய தேசிய மூவண்ணக் கொடியொன்றை இவரே தைத்துக் கொண்டார். நடுவில் மையினால் ராட்டை வரைந்து கொண்டார். அதன் கீழ் "இன்று முதல் இந்தியா சுதந்திரம் அடைகிறது" என்று எழுதினார். ஜனவரி 25, மாலை 7 மணிக்கு கொடியைத் தன் உடைக்குள் மறைத்துக் கொண்டு, தன்னுடன் தியாகி சுப்பிரமணிய சிவாவின் மருமகன் வேணுகோபாலனைத் தன்னைப் பின் தொடரும்படி சொல்லிவிட்டுச் சென்றார். ஒரு திரைப்படக் கொட்டகை சென்று சினிமா பார்த்துவிட்டு நள்ளிரவு 12 மணிக்கு காவலர் உடையில் ரகசியமாக தென்புற வாயில் வழியாகக் கோட்டைக்குள் நுழைந்தார். அங்கு 140 அடி உயரமும் 3 அடி குறுக்களவும் உள்ள கம்பத்தில் ஏறினார். அப்போது சென்னைக் கலங்கரை விளக்கில் உள்ள சுழலும் விளக்கின் வெளிச்சம் இக்கம்பத்தின் மீது பட்டது. அதுபடும் நேரத்தைக் கணக்கிட்டுத் திட்டமிட்டு, ஒளி படும்போதெல்லாம், கம்பத்தின் மறுபுறம் ஒளிந்து ஏறி யூனியன் ஜாக் என்ற பிரித்தானியரின் கொடியை இறக்கிவிட்டு அதில் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவிட்டு இறங்கி ஓடி தப்பிவிட்டார். காலையில் இக்கொடியினைக் கண்ட கோட்டை ராணுவ வீரர்கள் பதட்டமடைந்தனர். கவர்னருக்குச் செய்தி போயிற்று. இதனைச் செய்தவரைக் கண்டுபிடிக்க போலீஸ் தலைகீழாக நின்றும் பயனில்லை. இன்று வரை அந்த செயலைச் செய்தவர் கண்டுபிடிக்கப்படவில்லை என்றுதான் அரசாங்க ஆவணங்கள் கூறுகின்றன.

துணிக்கடைகளில் தீ விபத்து

அதுமட்டுமல்ல சென்னை ஜார்ஜ் டவுன் பகுதிகளில் அந்நிய துணிகளை விற்கும் பிரம்மாண்டமான கடைகளில் பாஷ்யமும் அவரது நண்பர்களும் துணிகள் வாங்குவது போல் சென்று ஆடைகளுக்குள் செல்லுலாய்டு பெட்டி எனப்படும் ஒரு சிறிய பெட்டியை திணித்துவிடுவார்கள். எனவே இவர்கள் வெளிவந்த சிறிது நேரம் கழித்து அக்கடைகள் அடிக்கடி தீப்பற்றி எரிந்தன. ஆனால் இதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

வெள்ளையனே வெளியேறு இயக்கம்

பாஷ்யம் அப்போது கம்யூனிஸ்டுகளாக இருந்த அமீர்ஹைதர் கான், சி.எஸ். சுப்பிரமணியம், புதுச்சேரி சுப்பையா ஆகியோரோடு தொடர்பு வைத்திருந்தார். இந்த நிலையில் 1942இல் ஆகஸ்ட் புரட்சி தொடங்கியது. பாஷ்யம் துப்பாக்கிகளைக் கடத்துதல், தண்டவாளங்களைத் தகர்த்தல், பாலங்களை வெடிவைத்துத் தகர்த்தல் ஆகிய புரட்சிகளில் ஈடுபட்டார்.


# ஜி.வி.பிரகாஷ், சைந்தவி இணைந்து பாடிய காதல் பாடல்



'பனையேறி' குறும்படத்தின் மூலம் தென் மாவட்ட பனையேறும் மக்களின் வாழ்க்கையை பதிவு செய்த இந்த படக்குழு, 'தமிழினி' திரைப்படத்தில் மீனவ மக்களின் வாழ்க்கையை தத்ரூபமாக படமாக்கியுள்ளது. இப்படம் தென்மாவட்ட கடலோர பகுதிகளான முட்டம், உவரி, கடியப்பட்டிணம், குளச்சல், திசையன்விளை, கூட்டப்பனை, பெரிய தாழை, மணப்பாடு போன்ற இடங்களில் படமாக்கப்பட்டுள்ளது.

இந்த திரைப்படத்தின் கதை மற்றும் வசனத்தை இயக்குநர் கணேஷ் மூர்த்தி மற்றும் தேவா இணைந்து எழுதியுள்ளனர். கணேஷ் மூர்த்தி இப்படத்திற்கு திரைக்கதை அமைத்து இயக்கியுள்ளார்.

படத்திற்கு சந்தோஷ் பாலாஜி இசை அமைத்துள்ளார். தேசிய விருது பெற்ற இசை அமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் குமார் மற்றும் சைந்தவி இணைந்து ஒரு மென்மையான காதல் பாடலை பாடியுள்ளனர். மேலும் சிவாங்கி, சந்தோஷ் பாலாஜி மற்றும் சம் விஷால் ஆகியோரும் பாடல்கள் பாடியுள்ளனர். தற்போது இறுதிக்கட்ட பணிகள் வேகமாக நடைபெற்று வரும் நிலையில், "தமிழினி" திரைப்படத்தின் முதல் தோற்றத்தை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர்.



பேச்சுலர் படத்தின் மூலம் திரையுலகில் கதாநாயகியாக அறிமுகமானவர் திவ்யபாரதி. இதன்பின் கிங்ஸ்டன் படத்தில் நடித்திருந்தார். மேலும் தற்போது 'மதில் மேல் பூனை, ஆசை மற்றும் தெலுங்கில் உருவாகி வரும் G.O.A.T ஆகிய படங்களில் நடித்து வருகிறார். திவ்ய பாரதி இன்ஸ்டாகிராமில் தனது போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்வதை வழக்கமாக கொண்டுள்ளார்.

இந்த நிலையில், தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை தனது இன்ஸ்டா பக்கத்தில் பதிவு செய்துள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது வைரலாகி வருகின்றன.

# ஹீரோயினாக அறிமுகமாகும் நடிகை வனிதா மகள் ஜோவிகா




நடிகர் விஜயகுமார்-மஞ்சுளா தம்பதிகளின் மகளும், நடிகையுமான வனிதா தமிழ் திரை உலகில் பிரபல நடிகையாக இருந்து வருகிறார். கடந்த ஆண்டு வெளியான 'மிஸஸ் அண்ட் மிஸ்டர்' படத்தின் மூலம் இயக்குனராக உருவெடுத்தார். படத்தை அவரது மகள் ஜோவிகா தயாரித்திருந்தார். இதை தொடர்ந்து ஜோவிகா விரைவில் கதாநாயகியாக அறிமுகமாக இருக்கிறார் என்ற தகவல்கள் கடந்தசில மாதங்களாக வெளியாகி வந்தது.

ஏற்கனவே இதற்கான பேச்சுவார்த்தையில் அவரது தாயாரான வனிதா ஈடுபட்டு வந்தார். இந்நிலையில் தெலுங்கு திரையுலகில் கதாநாயகியாக அறிமுகமாக இருக்கிறார் ஜோவிகா.

இந்த தகவலை படத்தில் தன்னுடைய தோற்றம் இடம் பெற்ற போஸ்டரை தனது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்து தெரிவித்துள்ளார் ஜோவிகா. தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், 'எனது முதல் திரைப்படம் அதுவும் தெலுங்கில். எம்.எஸ். ராஜுவுடன் நேரடியாக பணியாற்றுவது நான் வாழ்நாள் முழுவதும் பொக்கிஷமாக போற்றும் ஒரு அனுபவமாகும். குறிப்பாக தேவி, வர்ஷம் ஒக்கடு உள்பட இன்னும் பல படங்களை தொலைக்காட்சியில் திரும்பத் திரும்ப பார்த்து வளர்ந்தவள் நான். எனக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டதை பெருமையாக நினைக்கிறேன். என்னை நீங்கள் நம்பி என் மீது நம்பிக்கை வைத்ததற்கு நன்றி' என பதிவிட்டுள்ளார்.

# நீண்ட இடைவெளிக்கு பிறகு இசையுலகில் மடோனா மறுபிரவேசம்!



அமெரிக்காவின் பிரபல பாப் இசை நட்சத்திரம் மடோனா. தற்போது அவருக்கு வயது 67.

2019 இல் Madame X பாடல் ஆல்பத்தை வெளியிட்ட அவர் அதன் பின் இசை உலகில் இருந்து ஓய்வில் இருந்தார்.

2023 இல் செப்சிஸ் நோயால் பாதிக்கப்பட்ட அவர் சிகிச்சைக்கு பின் உயிருக்கு ஆபத்தான நிலையிலிருந்து மீண்டார். அதன் பிறகு 2024 இல் அவரது இளைய சகோதரர் கிறிஸ்டோபரை உயிரிழப்பு அவரை சோகத்தில் ஆழ்த்தியது.

இசையுலகிற்கு மீள்வருகை

இந்நிலையில் 7 ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு மடோனா மீண்டும் இசையுலகிற்கு திரும்பியுள்ளார்.

மடோனா, தனது 15-வது ஸ்டூடியோ ஆல்பம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

2005இல் வெளியாகி ஹிட் ஆன Confessions On A Dance floor ஆல்பத்தின் 2ஆம் பாகமாக இது அமைய உள்ளது. ஆல்பத்தை தயாரித்த தயாரிப்பாளர் ஸ்டூவர்ட் பிரைஸ் உடன் மடோனா மீண்டும் இந்த ஆல்பத்திற்கு இணைந்துள்ளார்.

நேற்று இந்த ஆல்பத்தின் அட்டைப்படம் வெளியிடப்பட்டது. ஆல்பம் ஜூலை 3 ஆம் தேதி ரிலீஸ் ஆகிறது. மேலும் ஆல்பத்தின் 1 நிமிட வீடியோவையும் மடோனா வெளியிட்டுள்ளார்.

மேலும் இந்த ஆல்பத்தில் மற்றொரு பிரபல பாப் பாடகியான பிரிட்னி ஸ்பியர்ஸ் உடன் மடோனா பணியாற்ற முயற்சித்து வருவதாக கூறப்படுகிறது.

முன்னதாக 2003 ஆம் ஆண்டு Me Against the Music என்ற பாடல் மூலம் மடோனா - பிரிட்னி ஸ்பியர்ஸ் உலகையே அதிர வைத்தது.



இந்திய அளவில் பிரபலமான நடிகைகளில் ஒருவர் ஜோதிகா. இவர் சமீபத்தில் தனது உடல் எடையை குறைத்து ஆளே மாறினார். அந்த புகைப்படங்கள் கூட வெளிவந்து ரசிகர்கள் மத்தியில் வைரலானது.

இந்த நிலையில், தற்போது மஞ்சள் நிற சேலையில் எடுத்துக்கொண்ட தன்னுடைய லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார். ஜோதிகா வெளியிட்டுள்ள இந்த புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகின்றன.

# ஜன நாயகன் படத்தை தியேட்டரில் முதல் ஷோ பார்க்க காத்திருக்கிறோம்



புதுச்சேரி காட்டேரிகுப்பம் கிராமத்தில் இயங்கும் தனியார் பள்ளியின் ஆண்டு விழாவில் நடிகரும், சமூக ஆர்வலருமான கேபிஒய் பாலா பங்கேற்று பேசியதாவது:

10-ம் வகுப்பு படித்த ஒரு மாணவன் விளையாட்டில் மீது கொண்ட ஆர்வத்தால் 200 மதிப்பெண் மட்டுமே பெற்றார். தாயார் கேட்டு கொண்டதால் சில மணி நேரம் மட்டுமே அவர் ஆர்வத்துடன் படித்து 490 மதிப்பெண் எடுத்தார். அந்த நபர் நான்தான்.

படிக்கும் நேரம் தான் முக்கியம். பைத்தியக்காரன் பேச்சை கூட கேட்கலாம். நம்பால் முடியாது என கூறும் சொந்தக்காரன் பேச்சை கேட்க வேண்டாம். பிடித்ததை படியுங்கள, பிடித்த மாதிரி படியுங்கங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறும்போது, நடிகர் விஜய்யின் ஜனநாயகம் திருட்டு பதிவில் வெளியானது மிகப்பெரிய தப்பு. இது மிகப்பெரிய இழப்பு. திரையரங்குகளில் படம் வெளிவர வேண்டும். விஜய்யின் படத்தை முதல் நாள், முதல் ஷோவில் பார்ப்பதுதான் திருவிழா. அதற்காக காத்திருக்கிறோம் என்றார்.

# Jana Nayagan படம் லீக் விவகாரம்: LIK இயக்குநர் விக்னேஷ் சிவன் புதிய விளக்கம்



பிரதீப் ரங்கநாதன் மற்றும் இயக்குநர் விக்னேஷ் சிவன் கூட்டணியில் உருவான 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி' (LIK) திரைப்படம், கடந்த ஏப்ரல் 10-ஆம் தேதி உலகமெங்கும் வெளியாகி, ரசிகர்கள் மற்றும் திரை ஆர்வலர்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்று வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்தப் படம் தொடர்பக இயக்குநர் விக்னேஷ் சிவன் தனியார் ஊடகத்திற்கு அளித்த பேட்டியில் ஜன நாயகன் திரைப்படம் லீக் ஆனது குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேசிய அவர், "எல்.ஐ.கே. படத்தில் பணியாற்றிய படத்தொகுப்பாளர் பிரதீப் ராகவ் தான் ஜன நாயகன் படத்திற்கும் படத்தொகுப்பாளராக பணியாற்றினார். நான் அவரிடம் பேசினேன். ஆனால், ஜன நாயகன் கசிவுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பது யாருக்குமே தெரியவில்லை. பிரதீப் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயல்படுபவர்.

அவர் எனக்கு எல்.ஐ.கே. படத்தின் சில காட்சிகளை அனுப்ப விரும்பினால்கூட, அவற்றில் முறையாக 'வாட்டர்மார்க்' (water-mark) இட்டு, கடவுச்சொல் (password) மூலம் பாதுகாக்கப்பட்ட நிலையிலேயே அனுப்புவார்.

நான் சில மணிநேரங்களுக்குப் பிறகு அதைத் திறந்து பார்த்தால், அதன் அணுகல் காலாவதியாகிவிடும். எனவே, படத்தொகுப்பாளர் தரப்பில் ஏதேனும் தவறு நடந்திருக்கும் என்று நான் கருதவில்லை," என்றார்.

# "ராமாயணம் முதல் பாகத்தில் எனக்கும் ரன்பீர் கபூருக்கும் நேரடி காட்சிகள் இல்லை"



இந்தி திரைப்பட இயக்குநர் நிதேஷ் திவாரி, ராமாயணக் கதையை படமாக்கி இருக்கிறார். இதில் ரன்பீர் கபூர் ராமராகவும் சாய் பல்லவி சீதையாகவும் ராவணனாக யாஷும் நடித்துள்ளனர். மேலும் அனுமனாக சன்னி தியோல், லட்சுமணனாக ரவி துபே என பலர் நடித்துள்ளனர்.

ஆங்கிலம், இந்தி, தமிழ், தெலுங்கு உட்பட பல்வேறு மொழிகளில் இந்தப் படம் 2 பாகமாக உருவாகி இருக்கிறது. பிரைம் ஃபோகஸ் ஸ்டுடியோஸ் சார்பில் நமித் மல்ஹோத்ரா தயாரித்துள்ளார். இதன் முதல் பாகம் இந்த ஆண்டு தீபாவளிக்கும் 2-வது பாகம் 2027ம் ஆண்டு தீபாவளிக்கும் வெளியாக இருக்கிறது. இந்நிலையில் இப்படத்தின் புரமோஷன் நிகழ்ச்சி அமெரிக்காவில் நடைபெறும் 'சினிமாகான் 26' விழாவில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்ட நடிகர் யாஷ் 'ராமாயணம்' படம் பற்றி கூறும்போது, "இப்படத்தின் முதல் பாகத்தில் ராமராக நடிக்கும் ரன்பீர் கபூருக்கும், ராவணனாக நடிக்கும் எனக்கும் காட்சிகள் இருக்காது. இது 2 பாகங்களாக உருவாகும் படம் என்பதால், முதல் பாகத்தில் ராவணனாக எனக்கு ஒரு தனி ராஜ்ஜியமும், ராமருக்குத் தனி ராஜ்ஜியமும் உள்ளது.

ரன்பீர் கபூர் மிகச் சிறந்த நடிகர். இருவரின் நேரடி மோதல் 2-ம் பாகத்தில் மட்டுமே இடம்பெறும். 'ராமாயணம்' போன்ற லட்சியமான மற்றும் அசாதாரணமான ஒன்றைச் செய்ய முற்படும்போது, எங்கள் அனைவருக்கும் ஒரே குறிக்கோள்தான், அது எங்களால் முடிந்த சிறந்ததைக் கொடுப்பது.

எங்களின் சிந்தனை ஒரே மாதிரியாக உள்ளது. அதனால் எங்களுக்குள் எந்தத் தயக்கமும் இல்லை. இந்தப் படம் நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான ஒரு கதை மட்டுமல்ல. நாம் இந்தக் கதைகளைக் கேட்டு வளர்ந்தவர்கள். இது நமது கலாச்சாரத்தின் ஒரு பகுதி. ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் ஒரு நியாயம் இருக்கும். தான் செய்வதைச் சரி என்று நம்பும் பலமிக்க ஆளுமையாக ராவணன் சித்தரிக்கப்பட்டுள்ளார்" என்றார்.

தான் நடித்துள்ள 'டாக்ஸிக்' படம் பற்றி பேசிய அவர், "இந்தப் படத்தை முதன்முறையாக ஆங்கிலத்திலும் எடுத்துள்ளோம். இது சாதாரண கேங்ஸ்டர் ஆக் ஷன் படம் அல்ல. வெளிப்படையாகப் பார்த்தால் இது அப்படித் தோன்றும். ஆனால் ஆழமான சைக்கலாஜிகல் அம்சங்களும், மனித வாழ்க்கையின் சுவாரஸ்யமான கோணங்களும் உள்ளன" என்று கூறியுள்ளார்.



குக் வித் கோமாளி 5ம் சீசனில் கோமாளியாக கலந்துகொண்டவர் கெமி. அவர் அதன் பிறகு பிக் பாஸ் 9ம் சீசனிலும் போட்டியாளராக கலந்துகொண்டார். அதில் அவர் 49 நாட்கள் இருந்தார்.

கெமி தற்போது தாய்லாந்துக்கு ட்ரிப் சென்று இருக்கும் நிலையில் அங்கு நீச்சல் உடையில் இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார்.

# தமிழில் அபிமன்யு திலகன் அறிமுகம்

ஆர்.பன்னீர் செல்வம் இயக்குநராக அறிமுகமான திரைப்படம், 'ரேனிகுண்டா'. ஜானி, சனுஷா, நிஷாந்த், சந்தீப், தமிழ், தீப்பெட்டி கணேசன் உள்பட பலர் நடித்த இந்தப் படத்துக்கு கணேஷ் ராகவேந்திரா இசை அமைத்தார். கடந்த 2009-ம் ஆண்டு வெளியான இப்படம் வரவேற்பைப் பெற்றது.

இதையடுத்து இதன் 2-ம் பாகம் 'ரேனிகுண்டா 2' என்ற பெயரில் உருவாகி வருகிறது.

பன்னீர்செல்வம் இயக்கும் இப்படத்தில் முதல் பாகத்தில் நடித்தவர்கள், இதிலும் நடிக்கின்றனர். ஷாலினி நிவாஸ் கதாநாயகியாக அறிமுகமாகிறார். மறைந்த மலையாள நடிகர் திலகனின் பேரன் அபிமன்யு திலகன் இப்படம் மூலம் தமிழில் அறிமுகமாகிறார்.



இது பற்றி அபிமன்யு திலகன் கூறும்போது, "மார்கோ படத்தில் என் நடிப்பைப் பார்த்துவிட்டு இந்த வாய்ப்பு வந்தது. இதில் 20 நாட்கள் என் காட்சிகள் படமாக்கப்பட்டன. 95 சதவிகித படப்பிடிப்பு முடிவடைந்துவிட்டது. இதில் நான் கேங்ஸ்டர் கதாபாத்திரத்தில் வில்லனாக நடிக்கிறேன். தமிழ் வசனங்களைப் பேசி நடிக்க இயக்குநர் பன்னீர்செல்வம் உதவினார்" என்றார்.

# சர்வதேச திரைப்பட விழாக்களில் 'குற்றம் கடிதல் 2'


பிரம்மா இயக்கத்தில் ராதிகா பிரசிதா, மாஸ்டர் விஜய், பாவெல் நவகீதன் உள்பட பலர் நடித்து 2014-ல் வெளியான திரைப்படம், 'குற்றம் கடிதல்'. இந்தப் படத்தின் அடுத்த பாகம் இப்போது 'குற்றம் கடிதல் 2' என்ற பெயரில் உருவாகியுள்ளது. ஜீவா இயக்கியுள்ளார்.

இதில் பாண்டியராஜன், அப்புக்குட்டி, பாலாஜி முருகதாஸ், தீபக், பாவல், பத்மன், பி.எல்.தேனப்பன், சாந்தினி தமிழரசன், கீர்த்தி சாவ்லா, விஜி சந்திரசேகர், லவ்லின், ஜோவிதா லிவிங்ஸ்டன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். சதிஷ் ஜி ஒளிப்பதிவு செய்துள்ளார். ஜேஎஸ்கே ஃபிலிம் கார்ப்பரேஷன் சார்பில் ஜே.எஸ்.கே.சதீஷ்குமார் தயாரித்து நடித்துள்ளார்.

'குற்றம் கடிதல்' படம் சமூக அவலம் பற்றிப் பேசியது. பள்ளிக்கூடப் பின்னணியில் சமூக த்ரில்லராக உருவாகியுள்ள இந்தப் படம் சர்வதேச திரைப்பட விழாக்களிலும் திரையிடப்பட உள்ளது என்றது படக்குழு.



# சினிமாவில் நடித்துக் கொண்டே மருத்துவம் படித்தது எப்படி?



தெலுங்கு நடிகை ஸ்ரீலீலா, சிவகார்த்திகேயனின் 'பராசக்தி' படம் மூலம் தமிழுக்கு வந்தார். இப்போது ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் படத்தில் நாயகியாக நடிக்க இருக்கிறார். இந்தி படங்களிலும் நடித்து வரும் அவர், புனேவில் உள்ள மருத்துவக் கல்லூரி ஒன்றில் சமீபத்தில் மருத்துவப் படிப்பை முடித்து பட்டம் பெற்றுள்ளார்.

2020ம் ஆண்டு மருத்துவப் படிப்பைத் தொடங்கிய அவர் நடிப்பின் மீதான ஆர்வம் காரணமாக நடித்துக்கொண்டே படித்ததாகக் கூறியிருந்தார். இந்நிலையில் அவரிடம் நடித்துக்கொண்டே மருத்துவம் படித்தது எப்படி ? என்று கேட்கப்பட்டது.

அதற்கு அவர் கூறும்போது, "இது போன்ற விஷயங்களுக்கு மன வலிமையும் பொறுமையும் தேவை. விஷயங்களுக்கு இடையில் உங்கள் மனதை 'ஆன்' மற்றும் 'ஆஃப்' செய்யும் திறனும் வேண்டும். நடிப்பிலும் படிப்பிலும் கவனம் செலுத்தியதில் மகிழ்ச்சியடைந்தேன். நான் மருத்துவராக இருப்பதை விரும்புகிறேன். மருத்துவப் பாடங்களையும் விரும்பினேன். என் நேரத்தின் பெரும்பகுதியை மருத்துவம் படிப்பதிலேயே செலவிட்டேன்" என்றார்.



ரசிகர்களை கவரும் வகையில் திரையுலக பிரபலங்கள் போட்டோஷூட் புகைப்படங்களை வெளியிடுவார்கள். அதுவும் ரசிகர்களின் மனம் கவர்ந்த பிரபலங்கள் என்றால் சொல்லவே தேவையில்லை, அந்த புகைப்படங்கள் உடனடியாக இணையத்தில் வைரலாகும்.

அந்த வகையில், தற்போது இளைஞர்களின் மனதில் இடம்பிடித்துள்ள நடிகை மீனாட்சி சவுத்ரி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தன்னுடைய சமீபத்திய போட்டோஷூட் புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.



நடிகை ரகுல் ப்ரீத் சிங் சமீபத்தில் பகிர்ந்த போட்டோஷூட் க்ளிக்ஸ் அனைத்தும் ரசிகர்களை வெகுவாக ஈர்த்துள்ளது. அவற்றின் அணிவகுப்பு இங்கே...



# புதுக் கவிதை பகுதிகள்

தன்னம்பிக்கை கவிதைகள் !

## நெஞ்சில் நிறுத்து !

வென்றவர்களின் வரலாறு
படித்திடு !
வென்று நீயும் வரலாறு
படைத்திடு !
சாதித்தவர்களின் சாதனை
அறிந்திடு !
சாதித்து சாதனை புரிந்திடு !
உண்டு உறங்கி வாழ்வதல்ல
வாழ்க்கை !
கண்டு இறங்கி சாதித்து
வாழ்ந்திடு !
எதிர்மறை சிந்தனைகளை
அகராதியிலிருந்து அகற்று !
நேர் மறை சிந்தனைகளை
நெஞ்சில் நிறுத்து !

## வெற்றி வசமாகும் !

வெந்த சோறு தின்று !
விதி வந்தால் சாவேன் !
என்று சொல்வதை நிறுத்து!
மதியால் சாதித்து வாழ் !
மண்ணுலகம் போற்றிட வாழ் !
சராசரியாக காலம்
கழிக்காதே !
சாதிக்கப் பிறந்தவன் நீ !
வித்தியாசமாக சிந்தித்து !
விவேகமாக செயல்படு !
வெற்றி வசமாகும் !

## உலகம் வரவேற்கும் !

தாழ்வு மனப்பான்மை
உன்னை தாழ்த்தி விடும் !
உயர்வாக எண்ணு !
உன்னை நீ உயர்வாக
எண்ணு !
உன்னுள் திறமைகள்
ஓராயிரம் உண்டு !



இருக்கும்
திறமைகளை
இனிதே
பயன்படுத்து !
உன்னை என்றும்
உலகம்
வரவேற்கும் !

**கவிஞர் இரா .இரவி !**

1. மனிதர்களுக்கு எதில்
ஆர்வம் இருக்கிறதோ அதற்கு
அவர்களுக்கு நேரம் இருக்கும்
எதில் ஆர்வம் இல்லையோ
அதில் நேரம் இருக்காது

2. கோவிலுக்கு வெளியே
இருக்கும் ஏழையும்
கோவிலுக்கு உள்ளே
இருக்கும் பணக்காரனும்
இருவரும் கடவுளிடம்
கேட்பது பிச்சை தான்

3. விறகு விற்பவன்
கண்ணுக்கு வீணை கூட
கிலோ கணக்கில் தான்
தெரியும்

4. அன்று அடிப்படை வசதிகள்
இல்லாமல் இருந்தோம் மனசு
சந்தோசமாக இருந்தது
இன்று எல்லா வசதியும்
இருந்தும் மனசு நிம்மதி
இல்லாமல் தான் இருக்கிறது

5. வசதிகளும் ஆசைகளும்
குறைவாக இருக்கும்
இடத்தில் வாழ்வதற்கான
வாய்ப்புகள் அதிகம்

**நடேஷ் கன்னா**



## உலகக் கலை தினம்.!

பரதக் கலை.. நடனக்கலை..
பாடும் கலை.. நாடகக்
கலை பாரினிலே பிறந்தது
நம் தமிழகம்! பாருக்குள்ளே
கலை வளர்த்த அருளகம்.!

சிற்பக் கலை.. சிலம்புக்
கலை.. மணக்கின்ற சமையல்
கலை.. தற்காப்புக் கலை
என தழைத்தோங்கி செழித்த
நிலம் தமிழர் நிலம்.. அதை
தமிழ் கொண்டு பாடுவது
நமது உளம்!

குடவோலை.. குடைவரைக்
கோவில் ஓவியங்கள்..
காவியங்கள்.. தேவாரத்
திருவாசகப் பாசுரங்களன
எதிரொலித்த கலை
விளையும் அகம்
எங்கள் தமிழகம்! இதை
நினைத்ததுமே பொங்கியது
எனது அகம்.!

உயிர் காக்கும்மருத்துவமும்..
உணர்வூட்டும் கவிதைகளும்
பயிர் வளர்த்த உழவர்களும்
பசிபோக்கும் ஆலயமும்
பரந்திருந்த பூமியிந்த
தமிழகமே.. இதில்
பிறந்ததுவே நாம் செய்த
புண்ணியமே.!

நாகரீகம் பண்பாடு நாதஸ்வர
ஓசையென அறுபத்து
மூன்று கலை அழகான
கட்டிடக்கலை ஆற்றில்
அணைக் கட்டியதும் நமது
இனம்! இங்கு அழியாத
கலை வளர்த்த தமிழர்இனம்!

**வே.கல்யாண்குமார்.**

## கோபந்தான் வேண்டாமே கொல்!

நேரிசை வெண்பா!

சேர்ந்தாரைக்கொல்லி
சினமன்றோ எந்நாளும்

மூர்க்கத்தனமாக
முட்டிடும்... சார்ந்தவரை

பாபமும் பார்க்காத
பண்பாடு நோக்காத

கோபந்தான் வேண்டாமே
கொல்!

மனிதரில் தோன்றிடும்
மாண்பில் உணர்ச்சி

புனிதமாக மாறிட
பூக்கும்.. மனிதர்க்கே

ஆபத்தைக்கொண்டே
அருளின்றி தோன்றிடும்

கோபந்தான்
வேண்டாமே கொல்!

**முனைவர்
இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## குய்யோ முறையோ கூச்சல்

குய்யோ முறையோ கூச்சல்,
கொடிகள் பறக்குது
தெருவில், குய்யோ
முறையோ கூச்சல்,
தொலைக்காட்சி விவாதத்
தொடரில், குய்யோ முறையோ
கூச்சல்
அடிதடி இலவச நெரிசல்,

குய்யோ முறையோ கூச்சல்
அடங்கிப் போனது தேர்தல் ,
குய்யோ முறையே கூச்சல்
தொடரும் மன்றப் பேச்சில் ...

**திருமதி. இரா .
இராஜாமணி**
ஈரோடு.

மறக்க நினைத்தாலும் மறக்க
முடியாத அளவிற்கு ஆழமாய்
பதிந்து விடுகிறது சில
நினைவுகள்....



எத்தனை
காலங்கள்
கடந்தாலும்
நினைவுகளால்
கடக்க
முடியாது

**கவிஞர்
பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## "கண்ணீர் பூக்கள்:"

துன்பத்தின் மெல்லிய
வெளிப்பாடு

மனம் மறைக்க
நினைத்தாலும்..

குமிழியிட்டு வழிந்து
விழுகையிலே

கொஞ்சம் போல் ஆறுதலாய்
ஒரு வலி நிவாரணி!

கருப்பு வெள்ளை கண்கள்
பொழியும் நிறமற்ற உதிரிப்
பூக்கள்!

இன்பத்திலும் இனிக்கும்
உப்பு நீர் மலரும்
நினைவுகளின் , மௌன

ராகத்தில் மகிழ்ச்சி
ஊர்வலம்.
செடியில்லாமல் பூக்கும்

நிறமற்ற நீர் பூக்களின்
சுவடுகள். கன்னங்களில்



காய்ந்து
போகும்!

எண்ணங்களில்
ஈரம் காக்கும்.!

**மீனா சேகர்**

## கயிறுதனைத் திரிக்கின்றார்

தூங்குகின்ற சமுதாய அமைதி யாலே
தொடைகளிலே கயிறுதனைத் திரிக்கும் வேலை
பாங்காக அரசியலார் செய்கின் றார்கள்
பார்த்திருந்தும் கேட்கின்ற துணிவு யின்றி
மூங்கையராய் இருப்பதாலே முனைந்து யிங்கே
முட்டாள்கள் நாமென்றே சுரண்டு கின்றார்
ஏங்கிநிதம் நாம்பார்க்க நம்கண் முன்னே
எடுக்கின்றார் நம்பணத்தை ஏய்க்கின் றார்கள் !



வன்முறையை வளர்க்கின்றார் ; வலிமையாலே
வாக்களித்த மக்களினை மிரட்டுகின்றார்
தன்சொத்தாய்ப் பிறர்சொத்தைப் பேணுகின்ற
தாராள மனம்படைத்தார் ; தீட்டும் திட்டம்
தன்வீடு அடைதற்கே வழிச்மைத்தார்
தடையின்றி அடியாட்கள் அதிகாரத்தால்
தன்னாட்சி தொகுதியிலே நடத்துகின்றார்
தடுக்காத அமைதியாலே தழைக்கின்றார்கள் !

எங்கெங்கும் கையூட்டே ஏற்றம் பெற்று
ஏளனமாய் நேர்மையினை ஏய்க்கும் காட்சி
தங்குதடை இல்லாமல் ஊழ லாறு
தரித்திரத்தை வளர்த்தபடி பாயும் மாட்சி
கங்குலிலே நடக்கின்ற வணிகம் ; நாட்டைக்
காசுக்கு விற்கின்ற கயமை கண்டும்
பொங்காமல் அமைதியாகப் போவ தோநாம்
பொறுமையினை விட்டெழுந்தே செய்வோம் மாற்றம் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**





## "ழ" கரம் தமிழுக்குச் சிகரம்.!

அழகான தமிழாம்.!
அமிழ்தானத் தமிழாம்.!
மழலை வாய் மொழிகின்ற
மொழியாம்.!. பொழிகின்ற
மழையாம்! ஆழியின்
முத்தாம்.!. ஊழியின்
நெருப்பாம்! நாழிகைப்
பொழுதும் நாம் மறவாது..
வாழி வாழி என்று வாழ்த்தி
வணங்குகின்ற என் தாய்த்
தமிழ் மொழியாம்!

ஏழிசை இராகத்தில் யாழிசை
ஒலியாம்.. ஆழிசூழ் வையகம்
அதில் மெய்மறந்த தாம்
வீழும் என நினைத்தோர்
வியந்து பார்க்கும்
விதம் தாழாது நிமிர்ந்து
தழைத்தோங்கும் தமிழாம்.!
பகைச் சூழினும் வீரத்தை



நினைத்தே மார்பில்
வேலேந்தும்
ஆழிக்கடலின்
ஆழத்தை வென்ற
அருந்தமிழ் மொழியே
வாழி வாழி.!

**வே.கல்யாண்குமார்.**

# நூல் விமர்சனம்

முத்தையா மோகனின்
நூல் சுவை....
கூட்டுச்சாலை
கவிதை தொகுப்பு
ஆசிரியர்
நாகை ஆசைத்தம்பி
நண்பர்கள் பதிப்பகம்.
விலை நூறு. பக்கம் 100.





நாகை ஆசைத்தம்பியின் கூட்டுச்சாலை... கவிதை தொகுப்பு,

சில கவிதைத்தொகுப்புகளை கையில் எடுக்கும் பொழுதே அதனுடைய பரிமாணங்கள் தெரிந்து விடும்... இந்த கூட்டுச்சாலை கவிதை தொகுப்பு படிக்க ஆரம்பிக்கும் பொழுதே இந்த தொகுப்பிற்குள் வேறு ஏதோ ஒளிந்திருக்கிறது என்பதை நமக்கு அடையாளம் காட்டத்தொடங்கி விடுகிறது... இந்நூலுக்குள் ஒளிந்து கிடக்கின்ற விடயங்களை தேடி கண்டுபிடிக்க முனையும் பொழுது தான் நம்மை நாமே இழந்து போக வேண்டிய சூழலுக்கு ஆளாகின்றோம். கவிதைகளை படிப்போம் என்று கையில் எடுத்துவிட்டு எழுதப்பட்டு இருக்கின்ற கவிதைகளின் சாராசங்களை அதன் என்ன ஓட்டங்களை அடிக்கோடு ஒவ்வொன்றாக அலசி ஆராயும் பொழுது நாகை ஆசை தம்பி என்கிற ஒரு கவிஞன், நம்மையும் நம்மைச் சார்ந்த சூழலையும் எங்கோ அழைத்துக் கொண்டு செல்ல முயல்கிறார் என்பது தெரிய வருகிறது. சரி கவிஞரின் அழைத்த அழைப்புகளுக கெல்லாம், அவருடைய போக்குக்கு சென்று விடலாமா இன்நூலுக்குள் என்று நாம் யோசிக்கும்போது...,பல இடங்களில் பல தருணங்களில் நம்மை நாமே நின்று யோசிக்க வைத்து விடுகிறார் கவிஞர்.

நாகை ஆசைத்தம்பியின் பல நூல்களை படித்துவிட்டு இந்த நூலை படிப்பதனாலேயே நமக்குள் அப்படி தோன்றுகிறதா என்று கூட என்ன வைக்கிறது சில இடங்களில் சில கவிதைகள்.

"ஏகாதசி அன்று இறந்து போனால் சொர்க்கத்திற்கு வழி கிடைக்குமாம்...
இங்கே பல கிராமங்களில் சுடுகாட்டுக்கே வழி இல்லை..."
மிக மிக அதிரடியாய் நம்மை இடை நிறுத்துகிறது இந்த கவிதை. சாதாரணமாய் பிறந்துவிட்ட மனிதர்கள் எல்லோரும் ஏகாதேசியில் இறக்கும்போது சொர்க்கத்திற்கு செல்வதற்கு வழி கிடைக்கும் என்று சொன்னால், இங்கு புதைப்பதற்கு சுடுகாடுகள் இல்லையே அதற்கு என்ன செய்வது என்று ஓராயிரம் கேள்விகளை நம் முன்னே நிறுத்துகிறது இந்த கவிதை. நான் சமீபத்தில் திருவாரூரை அடுத்த புதுக்குடி எனும் கிராமத்திற்கு ஒரு இறப்பு நிகழ்வுக்காக சென்றிருந்தேன் அங்கு சபத்தை எடுத்துக்கொண்டு இடுகாட்டிற்கு செல்கின்ற வழியெங்கும்... நடப்பதற்கு அருகதையற்று அந்த ஈடுகாட்டுப் பாதை இருந்தது. அங்கு எல்லோரும் சொன்னார்கள் இந்த சாலை புதிதாக அமைக்கப்பட்டு மூன்று மாதங்கள் மட்டுமே ஆகிறது என்று. ஆனால் தார் சாலையாக அமைக்கப்பட்டிருந்த போதும் அந்த தார்ச்சாலை முழுவதும் அவர்கள் வெறும் ஜல்லிகளை மட்டுமே கொட்டி விட்டு போயிருக்கிறார்கள் என்பது அப்பட்டமாய் தெரிந்தது. இது மனிதர்களின் தவறா...? அல்லது மனிதனை ஆட்டு விக்கின்ற அரசியல்வாதிகளின் தவறா...? செத்துப்போன பிறகு மனிதன் சொர்க்கத்திற்கு போகிறானா இல்லையா...? என்பதெல்லாம் வேறு கதை. முதலில் இறந்து போனவனை நிம்மதியாக அடக்கம் செய்வதற்கு சுடுகாட்டிற்கான வழியை சரியாக அமைத்துத் தாரலாமில்லையா...?

"பிரேத பரிசோனையில் புலப்படவே இல்லை சாதிக் கலவரத்தில் இறந்து போன அந்த அனாதை சிறுவனின் சாதி என்னவென்று..."? சாதி சாதி என்று சேற்றை அள்ளி தங்களுடைய தலைகளில் இரைத்துக் கொள்கின்ற, சாதி வெறி பிடித்த மனித பதர்களுக்கு இந்த கவிதை எத்தனை பெரிய அணுகுண்டு தெரியுமா..? மனிதன் காடுகளிலும் மேடுகளிலும் அலைந்து திரிகின்ற குரங்கிலிருந்து வந்தான் என்பது அறிவியல் பூர்வமான உண்மை என்றாலும் அந்த மனிதன் காலங்களை தன்னுடைய கைகளில் இழுத்துக் கொண்டு அதன் பரிமாண வளர்ச்சி ...அறிவு என்கிற ஒற்றை நூலை பற்றி இந்த உலகை வழி நடத்த ஆரம்பித்தான் என்பது உண்மையிலும் உண்மை. இதில் மனிதனின் வளர்ச்சி என்பது சாதி என்கிற பிரிவினையை ஏற்படுத்தி மனிதன் தன்னைத்தானே பிரித்தாலும் புத்தியை கைக்கொண்டான் என்பது இன்றைக்கு எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான் என்றாலும் கூட அந்த சாதியை தலையில் வைத்துக்கொண்டு சதிராடி திரிவது மனித இயல்புக்கு முற்றிலும் இழுக்க ஏற்படுத்தும் என்று பல கவிதைகளில் வாதிடுகிறார் கவிஞர் நாகை ஆசைத்தம்பி.

"மண்ணை சர்க்கரை யாக மாற்றும் மந்திரவாதியின் மனைவி மணிக் கணக்கில் வரிசையில் காத்திருந்தாள் ஒரு கிலோ சர்க்கரை வாங்க ரேஷன் கடையில்..."

இந்த கவிதை ஏதோ மந்திரவாதியின் குடும்பத்திற்கு ஆனது ...என்று நாம் நினைத்து விட்டோம் என்று சொன்னால் நம்மை விட முட்டாள்கள் வேறு யாரும் இல்லை. காலமெல்லாம் கரும்பை பயிர் செய்து வெட்டி எடுத்து அதை ஆளைக்கு கொண்டு செல்லும்போது விதைத்த விவசாயி கோ அறுவடை செய்த கூலிக்கு கூட அதன் விலை கிடைப்பதில்லை. என்கிற கரும்பு விவசாயிகளின் கதறும் கதறல்கள் தான் இந்த கவிதை. இங்கே ஏக்கர் கணக்கில் கரும்பு விவசாயம் செய்து அதன் விதைத்த கூலியை கூட விலையாக பெர முடியாத கரும்பு விவசாயி கூட ஒரு கிலோ சர்க்கரைக்கு ரேஷன் கடையில் தான் வரிசையில் காத்திருக்க வேண்டி இருக்கிறது, என்கிற மனக்குமுறல்கள்கூடத்தான் இந்த கவிதை.

"மண்பானை செய்யும் குயவன் கூட தன் தொழிலை சரியாகத்தான் செய்கிறான்... பிறகு மனிதனை படைப்பதாக கூறும் கடவுள் மட்டும் ஏன் கூன்,குருடு,செவிடு... என தன் வேலையை தவறாக செய்கிறார்...? கடவுள் என்பவன் எல்லாம் அறிந்தவன் என்றால்... கடவுள் என்பவன் எல்லாம் புரிந்தவன் என்றால்... கடவுள் என்பவன் எல்லாவற்றிற்கும் பொதுவானவன் என்றால்... கடவுள் என்பவன் கடமையை செய்வதிலும் கடமையோடு இருக்க வேண்டியவன் என்பதுதானே பொருள்...? அப்படி இருக்க ஏன் இப்படி கடமை தவறி செயல்படுகிறான் கடவுள்... என்று கடவுள் இருப்பதாக கூறிக் கொள்கின்ற, கடவுளின் பெயரால் கடமை தவறி நடக்கின்ற, கண்களை கட்டிக் கண்டு ஏதேதோ பேசித் திரிகின்ற, கடவுள் மட்டும் தான் எல்லாமும் என்று ஊறித்திரின்ற, மனிதர்களாகிய மனிதர்கள் தங்கள் மீது நம்பிக்கை இல்லாமல் கற்களின் மீது நம்பிக்கை வைக்கின்ற, அனைவரையும் பார்த்து கவிஞர் எழுப்புகிற கேள்வி தான் இந்த கவிதை.

"வேரோடு சாய்ந்தாலும் பரவாயில்லை புயலோடு போராடும் மரம்..." என் நூலின்சொந்தக்காரர், நாகை மண்ணின் சொந்தக்காரரர் என்பதாலோ என்னவோ... ஆண்டுகள் தோறும் நாகையில் நடக்கும் புயலின் போராட்டங்களின் உச்சங்களையும் தொட்டு எழுதி இருக்கிறார்... அங்கு ஒவ்வொரு பருவங்களிலும் விவசாயங்கள் செழித்து செம்மை பெற்று வருகின்ற அந்த காலகட்டத்தில் வருடம் தவறாமல் ஏற்படுகின்ற புயல் வெள்ள காற்றின் சீற்றங்கள் காரணமாக உருவாகின்ற பொது மக்களின் வாழ்க்கை சீரழிவை தனது கவிதைகளில் வாயிலாக கண்ணீர் சிந்த வைக்கிறார் கவிஞர். "சோறு உடைத்த சோழ நாடு சோற்றுக்கு கையேந்தி நிற்கிறது நெற்களஞ்சியம் தீச்சிவாலைகள் ஆகலாமா...?

என்கிற மிக சவால் மிகுந்த ஒரு கேள்வியை நம் முன்ன வைக்கிறார் நூலாசிரியர் நெற்களஞ்சியத்தை பற்றிய தன்னுடைய கவலைகளை அதோடு அவர் நிறுத்திக் கொள்ளவில்லை மேலும் தொடர்கிறார்...

"பாட்டன் ஏர்பூட்டி நிலத்தை உழுது கம்பும் கேழ்வரகும் விதைத்தான் ... அப்பன் டிராக்டர் விட்டு சீர்படுத்தி நெல்லும் கரும்பும் விதைத்தார்... மகனோ புல்டோசர் வைத்து சமன்படித்தி கற்கள் விதைக்கிறார்...

நாளை பேரனுக்கு சோறு ஊட்ட நிலா இருக்கும் சோறு...? கவிஞரின் இந்த கேள்விக்கு யாருக்காவது பதில் தெரியுமா...? சொல்லுங்கள் தோழர்களே... இப்போதெல்லாம் எந்த விவசாயின் மகனும் ,விவசாயத்தில் நின்று நிலைப்பதில்லை காரணம், படித்து பட்டங்கள் வாங்கி பட்டணங்கள் நோக்கியே.... அவருடைய வாழ்க்கைகள் நகர்ந்து விடுகின்றன. இந்நிலையில் தான் இனி சோறுடைத்த சோழர் நிலம் என்ன ஆகும் என்று கலங்குகிறார் கவிஞர். "நீயும் நானும் காதல் கல்யாணம் செய்ததால் நாதியற்று போனாலும் கஷ்டம் உணர்ந்தாலும் சாதியற்று போனதில் சந்தோஷமே..."

இது வெறும் கவிதை அல்ல , இந்த நூல் ஆசிரியரின் வாழ்வின் பிரதிபலிப்பு அவருடைய காதல் திருமணத்தால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை இன்னல் மிகுந்த வாழ்வியல் பின்னூட்டங்களை பல கவிதைகளில் பல வடிவங்கள் அவர் தந்திருந்தாலும் இந்த கவிதை சாதி என்கிற சதியை உடைத்த ஒரு செயலின் சாட்சி. இவர் வெறுமனே இந்த சமூகம்சார்ந்த முற்போக்குகளை பேசிவிட்டு போகிற மனிதர் அல்ல, சமூக முற்போக்கு என்னவென்றால் தன் வாழ்வியல் மூலம் இந்த சமுதாயத்திற்கு சொல்ல முனைபவர் முனைந்தவர் என்று கூறலாம். "பல மூட்டை சிமெண்டின் உழைப்பை ஒரு மூட்டை சுண்ணாம்பு மறைத்து விடுகிறது..."

நண்பர்களே இந்த கவிதையில் அப்படி என்னதான் இருக்கிறது என்று பலருக்கும் பலவிதமான சந்தேகங்கள் எழக்கூடும். பல நூறு ஏழை மக்களின் உழைப்பை ஒரு முதலாளி சுரண்டி விடுவதில்லையா அப்படித்தான் இந்த கவிதை கூற வருகின்ற பொருளும் ஆகும். கிராமங்களில் கிராமப்புற வேலைகள் என்கிற பொறுமையில் பல ஏழைப் பொதுமக்கள் ஒன்று கூடி செய்கின்ற ஒரு வேலையை தனி ஒரு முதலாளி முன்னே வந்து தான்தான் இவை அத்தனைக்கும் காரணம் என்று சொல்வதைப் போலத்தான். பல மூட்ட சிமெண்ட் இன் உழைப்பை ஒரு மூட்டை சுண்ணாம்பு மறைத்து விடுகிறது என்கிற கதையும் ஆகும். "எங்கள் ஊர் அம்மன் மிகவும் சக்தி வாய்ந்தது பூசாரியின் பொஞ்சாதி பொன்னம்மா மீது சாமி வந்தாடும்... என் கோவிலுக்கு கோபுரம் கட்டுங்கடா பாலாபிஷேகம் செய்யுங்கடா மஞ்ச பட்டு சாத்துங்கடா...

அப்போதுதான் ஊரு உறுப்பிடும் என்று தன் தேவைகளை எல்லாம் சரியாக சொல்லிவிட்டு சாமி மலையேறிவிடும்... அன்று இரவு திருடர்களால் கோவில் உண்டியல் உடைக்கும் போது மட்டும் ஊமை ஆகிவிடும் எங்கள் சாமி..." இந்த கவிதை ஏதோ மேம்போக்காக விளையாட்டாக எழுதப்பட்டிருப்பதாக எல்லோரும் நினைக்கலாம். எல்லா விடயங்களிலும் எல்லா நேரங்களிலும் சாமி என்கிற பெயரால் சகலத்தையும் கோரி நிற்கிற சகலமும் தன்னால் மட்டுமே நடந்து கொண்டிருக்கிறது என்கிற சாமி ஆடுகளின் கூச்சல்... கோவிலுக்குள்ளேயே புகுந்து சாமியையே திருடும்போது மட்டும் ஏன் சும்மா இருந்து விடுகிறது என்கிற கேள்வி, அந்த காலத்தில் இருந்து இந்த காலம் வரை கேட்கப்பட்டு கொண்டே இருக்கிறது யாருடைய காதிலும் விழுந்த பாடாக இல்லை... இதிலிருந்து ஒன்று மட்டும் புரிகிறது எந்த சாமிக்கும் காது என்பது இல்லை. "புத்தியை மட்டும் தீட்டி என்ன செய்ய கத்தியையும் தீட்டினால் தான் வாழ முடியும் சானை பிடிக்கும் தொழிலாளி..."

தீர்த்த வேண்டிய இடத்தில் தீட்ட வேண்டியது தீட்டினால் தான் வாழ முடியும் அது கத்தியானாலும் சரி ...புத்தியானலும் சரி... சரியான இடத்தில் சரியான விதத்தில் தீட்டித்தான் ஆக வேண்டும் அது எதை தீட்ட வேண்டும் என்பது இடம் பொருளை சார்ந்ததே... தொழிலாளர்களின் புத்தி கூர்மைக்கு இந்த கவிதையும் ஒரு எடுத்துக்காட்டு. "மகனும் மருமகளும் வேலைக்கு போய்விடுவார்கள் பேரனும் பேத்தியும் பள்ளிக்கூடம் போய்விடுவார்கள்... நானும் என் மனைவியும் மட்டுமே வீட்டில் இருப்போம் அவள் போட்டோவிலும் நான் வராண்டாவிலும்..."

நூலாசிரியரின் காதல் மனைவியின் நினைவுகளோடு இந்த கவிதை நூலை முற்றுப்பெறச் செய்தாலும், படிக்கின்ற நம்முடைய நெஞ்சங்களை ஒரு நிமிடம் கணக்கச் செய்து விடுகிறது. நூலாசிரியர் நகை ஆசை தம்பியின் இந்த கூட்டுச்சாலை கவிதை தொப்பில், இந்த சமூகம் குறித்த பல்வேறு கேள்விகளும் சாதி மதங்கள் அடங்கிய விடை காண முடியாத பல்வேறு கேள்விகளை நம் முன்னே வைத்திருக்கிறார். இந்த நூலாசிரியரின் எழுத்துப் பயணம் என்பது அகன்று விரிந்த இந்த பூமி பந்தின் அத்தனை கோரங்களையும் நம் முன்னே கடை விரிக்கிறது. இந்த கூட்டுச்சாலை தேடிப் பயணிக்கும் தூரங்கள் இன்னும் இன்னும் விரிவடைய வாழ்த்துவோம்.

**முத்தையா மோகன்
கோவை.**




## பயணம்

நகரும் பூக்கள் மரங்களுடன்
மலையடிவாரம், சிற்றோடை,
வயல்வெளிகளை
ரசித்தவண்ணம்
இந்த ஜன்னல் பார்வையுடன்
இருப்புப் பாதையில் நீந்திச்
செல்லும் இந்த ரயிலில்
இடைவிடாது பயணம்
தொடருமானால்
இகத்தில்
வேறென்ன
வேண்டும்அக
மகிழ்வுக்கு?



**கே. பி. ஜனார்த்தனன்**

1. எவ்வளவு சம்பாதித்தாய்
என்பதை விட எவ்வளவு
சந்தோஷமாக வாழ்கிறோம்
என்பதே முக்கியம்

2. ஒழுக்கத்தின் மீது
அக்கறை இல்லாதவன்
குற்றவாளி உடலின் மீது
அக்கறை இல்லாதவன்
நோயாளி தன்மீது அக்கறை
இல்லாதவன் ஏமாளி

3. தத்தளிக்கும் எறும்புக்கு
எங்கிருந்தோ இலையை
அனுப்புகிறது ஒரு மரம்

4.பரோல் இல்லாத ஒரு சிறை
திருமணம்

5. நம்ப கூடாதவனை நம்பிக்
கொள்வதும் தவறு
நம்பக்கூடியவனை நம்பாமல்
கெடுவதும் தவறு

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## நிர்க்கதி....

உன் பேரன் பின்
சுழலுக்குள்... திசைகள்
மறந்து போயின...

பார்வையில் நீதான்
பள்ளிகொண்டு விட்டாய்...

விழிகளில் எங்கும்
தென்படவில்லை...
வழி ஒன்றும்...

விரும்பியே சிக்கிக்
கொண்டதால்...வெளியேறத்
தெரியவில்லை...

வெளியேற்றம் அவ்வளவு...
எளிதும் அல்ல...

நான் மட்டும்
காந்தமாயிருத்தலில்பயன்
ஏதும் இல்லை...

எதிர் முனையில் இரும்பு
இன்றி... வெறுப்பு எனில் என்
செய்வேன்...

பேரண்டம் இது..
எல்லைகள் பெரிது...

காதலில் குறுக்கிக்
கொள்ளாதே.... உன்னை..



உலகம்
உனதே...

எனும் ஆற்றுப்
படுத்துதல்
... அறிவுரை
யாவும்...

வெளிக்கொணரப்
போதுமானதாக இல்லை....
என் காதலைத் தவிர...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## சாதிப்போம்

தீண்டாமை ஒரு
பாவச்செயல்,
தீண்டாமை ஒரு
பெருங்குற்றம்,
தீண்டாமை ஒரு
மனித தன்மையற்ற செயல்
இவையெல்லாம்
பாடப்புத்தகத்தில்
முதற்பக்கத்தில்
அச்சிடதானா?

காலையில் எழுந்தவுடன்
கழிப்பறைச்சென்று
மலத்தை
ஜலத்தைக்கொண்டு
கையால்தானே
கழுவியாகனும் எல்லோரும்

இதிலென்ன,,,,,
கீழ்சாதி,மேல்சாதி
சாதியை மறப்போம்
சாதிக்க துடிப்போம்,

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## போராடு

நாம் பிறக்கும்போது
பணிக்குடம் உடைகிறது,
இறக்கும்போது
மண்குடம் உடைகிறது,
இடையில்தான்
வாழ்க்கை நடக்கிறது,
இதில் ஏன் ?
சிறுப்பிரச்சனைகளுக்கும்
மனசு உடைகிறோம்
நம்பிக்கையோடு
போராடுவோம்
நாளைய
வெற்றிகள்
நம்மோடு,,,



**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## சுயநேசிப்பு

பொன்னி சற்றே முன்னும் பின்னும் நகர்ந்து தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். "நீ அழகி தான்" என்று சொல்லிக் கொண்டாள். அவள் கழுத்தில் பல்கலை கழகத்தில் முதலிடம் பெற்றதற்கான தங்க மெடல். சிறந்த சமூக ஆர்வலராாக அரிமா சங்கத்தின் பாராட்டு விழாவில் ஷீல்டுடன் பொன்னி புன்சிரிப்புடன் நின்றிருந்தாள். கணினியில் சற்று முன் .பணியில் சேர்வதற்கான ஆணை வந்தது, அவளுக்குப் பெருமையாக இருந்தது அலைபேசி ஒலிக்க; அவளை தடகளப் போட்டிகளில் பல்கலை கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டதாக தகவல் வந்ததும்; இன்னும் உற்சாகமாக உணர்ந்தாள். வறுத்த கோதுமை நிறம், நெட்டை கொக்கு என்று பட்டப் பெயருக்கு ஏற்ப சராசரிக்கும் மேலே உயரத்துடன், ஒல்லியான உடல்வாகு. முன் பற்கள் மூஞ்சூறு போல், காதுகள் விடைத்து நின்றன; முயலைப் போல; சிறிய கண்கள்; சப்பிய மாங்கொட்டை போல் கன்ன கதுப்புகள்; ஆயினும் பொன்னி அறிந்திருந்தாள்; தான் பேரழகி என. அழகு என்பது 'தான் எவர்;' என்று உணர்வதில்தான் உள்ளது. எல்லோரும் ஊடகங்களில் சமூக சுயவிவரத்தை பார்த்து'ஹௌ வெரி க்ரேண்ட்' என்று வியப்பதால் அல்ல; தன்னைத் தானே உயர்வாக கவனமுடன் கணித்துக் கொண்டதால் வந்த இந்த அக அழகு; அவளுடைய முகத்திலும் எதிரொளித்தது. 'தான் ஒரு அக அழகி' என்பதை அவளே அறிந்து கொண்டது, அவள் முக அழகை மேம்படுத்தியது, அவளது சுய நேசிப்பு அவளது சுய மரியாதையையும் கூட்டியது. அவள் அழகிதானே!



## நதிக்கரையின் நினைவலைகள்

நதிக்கரையில் நாகரிகம் பிறந்தது என்றார்கள்
நதிப்பங்கீட்டில் நாகரிகம் இல்லை இன்று!

இருவேறு நாடுகள் ஆறுகளை நாளும்
இனிதே பகிர்ந்து கொள்கின்றனர் வெளியே !

அண்டை மாநிலமோ அடாவடி செய்கின்றது
உச்சநீதிமன்றம் உரைத்தும் அடங்க மறுக்கின்றது !

நடுவணரசோ நையாண்டி செய்து வருகின்றது
நாடுகின்றது நீதிமன்றத்தை கடைசி நாளில் சந்தேகமாம்!

அரை நூற்றாண்டுகளாக நடந்து வரும் சண்டைக்கு
அடித்துச் சொன்னது தீர்ப்பு மேலாண்மை வாரியமே தீர்வென்று!

தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளும் விதமாக
தமிழ்நாட்டிற்கும் கர்னாடகத்திற்கும் போக்குக் காட்டுகின்றனர்!

பாய்ந்து வரும் தண்ணீர் எல்லோருக்கும் பொதுவானது
பாய்ந்து வந்து தடுக்கின்றனர் இரக்கமின்றியே!

விவசாயி இங்கே செத்து மடிகின்றான் நாளும்
வேடிக்கை பார்ப்பது விடுத்து விடிவிற்கு வழி காணுங்கள்!

முயன்றால் முடியாதது எதுவுமில்லை உலகில்
முயலுங்கள் மேலாண்மை வாரியம் அமைத்திடுங்கள்!

வாக்கு வங்கி அரசியலுக்காக விவசாயிகளுக்கு
வாக்கரிசி போடுவது முறையா? சிந்தியுங்கள்!

கீழ்தரமான அரசியலுக்கு முடிவு கட்டுங்கள்
காவிரித்தாயின் கால்விலங்கை கழற்றி எரியுங்கள்!

பகைநாட்டில் கூட பகிர்தலில் சண்டை இல்லை
பக்கத்து மாநிலத்தில் பகிர்தலில் சண்டை சரியோ?

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை துச்சமென நிலைக்கின்றனர்
உச்சநீதிமன்றத்தின் மாண்பை சிதைத்து வருகின்றனர் !

யாருடைய அப்பன் வீட்டு சொத்தல்ல காவேரி
யாவருக்கும் பொதுவான நதி தான் காவேரி !



குடிக்கத் தண்ணீரின்றி
தாகத்தில் தவிக்கிறான் தமிழன்
குடியானவனும் வேதனையில் மூழ்கி வெந்து
நொந்து விட்டான்!

நதிக்கரையின் நினைவலைகள்
நினைத்தால் சோகம்!

**கவிஞர் இரா. இரவி!**



## பள்ளிக்கூடம்

அறிவின் வாசல்
பள்ளிக்கூடம்!

அறிவு விளையும் அன்புத்
தோட்டம்!

வெற்றிப் படிகளின்
முதல் பக்கம்!
நண்பர்கள் கூடும் நந்தவனம்!

நாளைய உலகின்
நுழைவுவாயில்!

வெள்ளை உடையும்
துள்ளும் நடையுமாய்
வெற்றிப்பயணத்தின்
தொடக்கம் இங்கே!

கரும்பலகை காட்டும்
திசையிலே காலம் நம்மைச்
செதுக்கும்!

கனிவான ஆசிரியரின்
கைப்பிடித்து நடந்தால்
அகிலம் நம்மைப் புகழும்!

பாடம் படிக்கும் வகுப்பறை
அது பண்பு வளர்க்கும்
கருவறை!

விளையாடி திரியும் மைதானம்
நம் வியர்வை சிந்தும்
சிங்காரம்!

மறக்க முடியாத மழலைப்
பருவம் மறந்து போகாது
இனிய கனவு!

வாழ்வின் அஸ்திவாரம்
இந்த பள்ளிக்கூடம்
பிரபஞ்சம்!

காலை மணி ஓசை
காதில் விழ நம் கவலைகள்
யாவும் பறந்தோடும்!

தோளில் சுமக்கும் புத்தகப்பை
அது சுமையல்ல நாம்
அறிவின் சொத்து!
ஆசியுடன் கண்டிப்பு அங்கே
நம் ஆளுமை செதுக்கும்
ஒளியாகும்!

மதிய உணவைப் பகிர்ந்து
உண்ணும் அந்த மகிழ்ச்சிக்கு
நிகரேதும் இல்லை!

அன்பால் அறிவை ஊட்டும்
ஆசிரியர்கள் அங்கே
நடமாடும் தெய்வங்கள்!

ஒவ்வொரு வகுப்பறையும்
ஒரு கலைக்கூடம்!

ஒவ்வொரு பெஞ்சும்
ஒரு நட்பின் காவியம்!


கரும்பலகை கறைகள்,
துடைக்கப்படலாம்!

ஆனால் கற்ற பாடங்கள்
என்று அழியாது!

பள்ளி என்பது ஒரு நான்கு
சுவர் கட்டிடம் அல்ல;

அது உன்னை பட்டை தீட்டி
வைரமாக்கும் பட்டறை!

புத்தகப் பையில் சுமப்பது
வெறும் காகிதங்கள்
அல்ல;



நாம் பெற்றோரின் பல
ஆண்டு கால நம்பிக்கை!

**பெ.திருமுகம்,**
மணமேல்குடி

## கட்டாய மௌனம்

வாயிருந்தும் பேச
இயலாத நிலை

அது ஏழ்மையல்ல,
கட்டாய மௌனம்

உண்மைக் குரல்
எழுப்பத் தயங்கி

"அமைதியாக இரு"வென
அழுத்தும் கைகளோடு

நெஞ்சம் கொதிக்க,
நேர்மை மௌனமாக

உண்மை உறைந்ததே
உலகின் விதியாக

ஏனென்று, கேள்வி கேட்க
வேண்டியவன்

தட்டுத் தடுமாறிய
வேளையில்

மதிப்பான நாணயங்களே
நியாயம் பேச



மனிதன்
சொல்லுக்கு
சில்லறையின்
சலசலப்பு

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

## உண்டியல்

சிறு மண் குடுவையிலே
சிந்தனை

விதைகளாகச் செல்வம்
சேர்க்கும் பழக்கத்தில்

சிறிது சிறிதாகச் சேரும்
நாணயங்கள்

தூரத்துக் கனவுகளை
வளர்த்து நெருக்கமாக்கும்

சிக்கன வாழ்வின்
சிறப்பைப்புகட்டும்.

குழந்தையின் கண்களில்
நாளைய நம்பிக்கையை

நாள்தோறும் விதைத்து
காத்திருக்கும் தோழன்.

"உண்டு" எனும்
பொருளைச் சேர்த்து

"இயல்" எனும் வடிவில்
நிறைந்து,

வாழ்க்கையின்
வழிகாட்டியாக
வளர்ந்ததே – உண்டியல்!

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

இமைத் தூளியில் உயிரைத்
தாலாட்டுகின்ற தாய்
தூக்கம்!

கனவுகளை ஒளிபரப்பும்
தணிக்கை ஊடகம்.

மாயாஜாலத்தின் மாய
மாளிகை.

செரிமானமாகாத வலிகளை
தற்காலிகமாக
ஆற்றுகின்ற
அற்புத
மூலிகை.



உடல்
சோருகின்றபோது
தூக்கமெனும் தோளில்தான்
சாய்ந்து கொள்கிறது.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை

மிதமிஞ்சிய அன்புக்குடம்
தளும்பிக்கொண்டிருக்கிறது
வரும் வழியெல்லாம்.
சிதறிய பக்கத்தில்
துளிர்த்துப் பூக்கிறது
புன்னகைப் பூக்கள்.
பறித்து மாளவில்லை
என்கிறாய் கேலியாய்.
சொல்லும்போது தெரிகிறது
உன் பார்வையிலும்
இரு மலர்கள்.

வனத்தினூடே திசை தப்பிய
பறவையாய்.. ஒரே முகம்
அறிந்த பிள்ளை போல்
மனது.. தடாக நீர் தளும்பும்
ஆயினும் ஒரு சொட்டு
உன் கையால் என
ஏங்கும் இதயம்.. எல்லா
மேகங்களும் பொழியட்டும்
எங்கு வேண்டுமானாலும்..
இந்த சாதகப் பறவைக்கு
வேண்டும் ஒரு சொட்டு.

**ரிஷபன்**

## ஓடுமாம் ஓடம்.!

ஓடும் நதியினிலே..
ஒருத்தன் மட்டும்ஓடத்திலே..
ஓய்வுயின்றி துடுப்பசைய..
ஓடுதம்மா நீரினிலே..

ஆடும் அலையினிலே
அசைந்துயெழும்
ஆட்டத்திலே..
அமைதியினை தேடியொரு
வாலிபனோ படகினிலே.!

தேடும் மனதுடனே..
தேகமெனும் ஓடத்திலே
தேங்காது நகருகின்ற
காலமெனும் தேயத்திலே..
மாயமாம் திசையினிலே
மனம் அலை பாய்கயிலே..
நேயமெனும் கரம் வந்து
தாங்குதம்மா கரையினிலே.!

ஓடம் போல் வாழ்வினிலே..
ஓயாது கடக்கயிலே..
பாடங்கள் படிக்கயிலே..
படித்துறைகள் தெரிகயிலே..
வேடுவன் குகன் போல
இன்று கங்கை நதியினிலே..
ஓடத்தை ஓட்டுகிறேன்..
ஒருவனாக உலகத்திலே.!

**வே.கல்யாண்குமார்.**

கடிகாரத்தை நிறுத்தி
வைப்பதால் காலத்தை
சிறைபிடிக்க முடியாது
கவலைகளை சுமந்து
நிற்பதால் காலத்தை வெல்ல
முடியாது ஓடிக்கொண்டு
இருப்பது தன் வாழ்க்கை

2. அனுபவம் என்பது
தவறுகளை திருத்திக்
கொள்வது ஆணவம் என்பது
தவறுகளை
நியாயப்படுத்துவது

3.கனவுகளுடன் கட்டிய
வீட்டில் காவல்காரன் போல்
நிற்கிறான் கடன்காரன்

4. நல்லதை செய்யும் எந்த
நேரமும் கெட்டதாக இருக்க
வாய்ப்பில்லை

5. அரசியலை நாம்
தவிர்ப்போமே
ஆனால்
நம்மால்
தவிர்க்கப்பட
வேண்டியவர்கள்
நம்மை ஆள
நேரிடும்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## ராஜநடை

என் உயிர் சிநேகிதி நீ
என் கா த லி யா ன பிறகு
என் அன்பு ராஜநடை போட
ஆரம்பித்து விட்டது!
நீ எனக்குள் விதைத்த
அழகான சிநேகம்
கா த லா ன பின்
செடியாகி மரமாகி
இப்பொழுது நான்
வணங்கி மகிழும் தல
விருட்சமாகி விட்டது!
இப்படியொரு சிநேகிதி
யாருக்கு வாய்க்குமென்று
என்னில் எழுதிப் பதிய வை
என்று கனவில் மட்டுமல்ல
நினைவிலும் கூட
உத்தரவிடுகிறது என்
தினசரி நாட்குறிப்பேடு!
உன் வருகை எனக்குத்
தீபாவளியென்றால்
உன் அணைப்பு எனக்குத்
தைப்பொங்கல்!
உன் மு த் த
ம் எனக்கு
விளையாட்டு
என்றால்
உன்
விளையாட்டோ
எனக்குக்
காதல் உலகம்!



**முத்து ஆனந்த்.** வேலூர்



இப்போதெல்லாம்
மழை பிடிப்பதே இல்லை
நீ நனையாததால்!

படிக்க ஆசைப்படுகிறேன்
உன் மனப் புத்தகத்தை!

காதல் பெறாதவனின்
டைரி முழுதும்
ஆயிரக்கணக்கான
தேவதை கவிதைகள்!

ஏன்டா இப்படி பார்க்குற
என்கிறாய்? எப்படி சொல்ல?
உலக அதிசயங்களை
யெல்லாம் பிரமித்து தானே
பார்க்க வேண்டும்!

கனவுகளில் கூட
பலவிதமாய் தான் வருகிறாய்
என் ஆயுளை மட்டுமல்ல
ஆண்மையையும் பறிக்கும்
வன இராட்சசி நீ!

கவிதையெழுத
கற்பனை வேண்டுமாம்
யார் சொன்னது?
உன்னை பார்த்தாலே போதும்
அருவியாய் கொட்டும்
கோடான கோடி
காதல் கவிதைகள்!

காதல் பிடிக்குமா என
கேள்வி கேட்கிறாய்?
உன்னை பிடிப்பதும்
காதலாகுமா என்ன?!

உன்னை பிடித்து போனதால்
என்னவோ அந்த காதலும்
பிடித்து தான் போனது!

வண்ண மயிலே
எண்ணமெல்லாம் நீ தானடி!
உள்ளம் திறந்து பாரடி–அந்த
பள்ளத்தில் நீ மட்டுமே
என்னுள் நிறைந்திருப்பாய்!



என்ன வேண்டு
மென்கிறாய்?
நீ மட்டுமே
போதுமென
எப்படி
சொல்ல?!

**லி.நௌஷாத் கான்**



## வீரம் பட்டும் போதாது

விழுந்த மலர் எழுவதில்லை....
வாடிய மலர் மலர்வதில்லை....
விலையில்லாத
பொருட்களுக்கு
மதிப்பில்லை... ஏழை
சொல்லுக்கு அதிகாரம்
இல்லை... கோழைகளுக்கு
வெற்றி கிடைப்பதில்லை...
படித்தவர் பாமரனுக்கு
வேலை கொடுப்பதில்லை...
படிக்காதவர் பட்டதாரிக்கு
வேலை கொடுக்க
மறுப்பதில்லை....
தேவைக்கு மேல்
அதிக செலவு பயன்
பெறுவதில்லை...
தேவைக்கு மட்டும் பழகுவது
உறவு நீடிப்பதில்லை....
உண்மையாக
இருந்தால் இறைவன்
கைவிடுவதில்லை...
உறங்காத கண் சோர்வுற்று
போகும்... உழைக்காத உடம்பு
வீரமற்று போகும்...
வீரம் மட்டுமே உன் வாழ்வு
என்றால்
தோல்வியுற்று
போகும்.....!!



**பொன். கருணா**
நவி மும்பை


GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹1.80
லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN
சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118


WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF
(Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD
(Male & Female)
ELECTRICIAN & HELPERS
(Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


குன்னத்தோழம்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெனிமுக்கு வரூன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379


ADVERTSE
WITH US
7789941009


WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
Salary: ₹10,000 – ₹15,000
Attractive Incentives
Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935


WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families


Manjal Mart
SOMETHING FOR EVERY FAMILY
எந்தவித கலப்படமும் இல்லாத தரமான மஞ்சள், குங்குமம், விபூதி, சந்தனம், ஜவ்வாது, விற்பனைக்கு உள்ளது
www.manjalmart.com


ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.



SHRI RAGHAVENDRA SCAN CENTRE
We Are HIRING
PRO
PUBLIC RELATION OFFICER
DIAGNOSTIC ULTRASOUND & COLOUR DOPPLER STUDIES
TIMING : 9AM-8PM
Attractive salary package
@TONDIARPET
+91 8189997221
+91 9094337745
ADDRESS:THAI APARTMENTS 618 T.H.ROAD (NEAR) TONDIARPET METRO STATION CHENNAI-81


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Channel Real Choice Channel Real Choice Channel


THANIGAI
WANTED ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
☑ Flexible work ☑ No Age Limit /No Investment
☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
• Location: (Nr Mylapore Jn)
• Direction: N/ Face
• Total Area: 2400 sft
• Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com


Special Invitation
To Retired Senior Housewives Businessmen Bankers CAs NRIs Age.30 to 70.Qualification. SSLC/Graduate
★ To Restart Your Second Innings With A Career Business Opportunity
• Flexible Timing Unlimited Incentive.
• No Target Work From Home Training Provided
• For Successful Business.
Contact Mr.Irudaya Raj
Ph.9486634780


SMART PROMOTERS
BUSINESS VIDEOS
IN ALL INDIAN LANGUAGES
SUCCESS
GROWTH
MULTIPLE LANGUAGES
PROMOTE WITH US
PROMOTE YOUR BUSINESS THROUGH OUR CHANNEL
1. Promote your Business
2. In Multiple Languages
3. We Promote in Social Media
4. Find Innovation & New Techniques
5. With Less Budget
HIGHLY PROFESSIONAL & ATTRACTIVE CONTENT
ENGLISH TAMIL TELUGU HINDI ODIA BENGALI KANNADA
CALL NOW: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Low Cost Matrimony Website
MATRIMONY
WEBSITE
RS.15000
Call/Whatsapp - +91 97155 39521


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


அருள்தரும் தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
ஸ்ரீ அகத்தியர் சொன்ன ரகசிய மந்திரங்கள்
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


உ
ஸ்ரீ வாசவி சகாயம்
கரூர் ஸ்ரீ வாசவி
கன்னிகாபரமேஸ்வரி அம்மன்
ஜெயந்தி தின விழா
அழைப்பிதழ்
26.04.2026 ஞாயிற்றுக்கிழமை
(15.04.2026 முதல் 27.04.2026 முடிய)


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

## WANTED
MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED

**Managers:** Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

**Telecaller** -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000

Call/wapp: 9438610756

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

WANTED:
FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

## ! WANTED !
Muslim Lady Accounts Assistant
**Qualification:** B.Com / Tally Knowledge Required
**Company:** Perfume Manufacturing Company
**Location:** Chrompet



Contact: 99401 46318

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம் முகக் குறிப்பு கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
- குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
- இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
- எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship: Clinical Training, Counseling Practice, Case Work
Jobs: Social Worker, Jr Psychologist, Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

## WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact 9790979539

WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House Call/Whatsapp 94386 10756

WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
- வானகரம் பைபாஸ் ரோடு
- முகப்பேர்
- அம்பத்தூர்
- பட்ரவாக்கம்
- பெரம்பூர்
- மாதவரம்
- திருமுல்லைவாயல்

Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash, Teflon Coating, Ceramic Wax Treatment, Under Chassis Painting, Interior Foam Wash / Stain Remover, Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆருடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

அருள்தரும் தெய்வம்
தமிழ் மாதமிருமுறை இதழ்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

## WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்










# ஏஐ மனிதனை மீறினால் முடக்கும் 'கில் சுவிட்ச்' அவசியம் என டிரம்ப்



கூகுள்(ஜெமினி), ஓபன்ஏஐ (சாட்ஜிபிடி), எக்ஸ் (குரோக்) மற்றும் ஆந்த்ரோபிக்(கிளாட்) போன்ற முன்னணி நிறுவனங்களின் ஏஐ சாட்போட்கள் சாமானிய மக்களிடமும் புழக்கத்தில் உள்ளன.

வேலையிடம் தொடங்கி தனிப்பட்ட தேவைகள் வரை ஏஐ மயமாக்கப்பட்டு வருகிறது. அதே நேரம் இந்த ஏஐகள் மனிதனை மீறி தன்னிச்சையாக செயல்படத் தொடங்கினால் என்னவாகும் என்ற அச்சம் நிபுணர்கள் முதல் சாமானியர்கள் வரையிலும் இருக்கவே செய்கிறது.

இந்நிலையில் செயற்கை நுண்ணறிவின் செல்வாக்கு அதிகரித்து வருவதால், தேவைப்படும்போது அதனை முடக்குவதற்கு ஒரு வழிமுறை இருக்க வேண்டும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

ஃபாக்ஸ் பிசினஸ் நெட்வொர்க்கிற்கு அளித்த பேட்டியில் பேசிய டிரம்ப், செயற்கை நுண்ணறிவு வங்கி அமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்க முடியுமா என்று கேட்கப்பட்டபோது, அவர், "ஆம், அது முற்றிலும் சாத்தியம். வங்கி அமைப்பைச் சிறந்ததாகவும், மேலும் பாதுகாப்பானதாகவும், வலிமையானதாகவும் வைத்திருக்கக்கூடிய தொழில்நுட்பமாக அது இருக்கலாம்" என்று பதிலளித்தார்.

செயற்கை நுண்ணறிவு வங்கித் துறை போன்ற துறைகளை மிகவும் பாதுகாப்பானதாகவும் திறமையானதாகவும் மாற்றக்கூடும், ஆனால் அது குறிப்பிடத்தக்க அபாயங்களையும் கொண்டுள்ளது என்று கூறினார்.

ஆனால் எதிர்காலத்தில் அது மனிதர்களுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும் என்பதால் செயற்கை நுண்ணறிவு கடுமையான அரசாங்கக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று டிரம்ப் மேலும் குறிப்பிட்டார்.

எல்லாம் கைமீறி செல்லும்போது அதை செயலிழக்க செய்ய கூடிய கில் சுவிட்ச் (Kill switch) போன்ற ஒரு அமைப்பை உருவாக்குவதை கருத்தில் கொள்ள வேண்டும் என்று டிரம்ப் தெரிவித்துள்ளார்.

கில் சுவிட்ச் எவ்வாறு செயல்படும், அதை யார் கட்டுப்படுத்துவார்கள் என்பது உள்ளிட்ட விவரங்களை அவர் விளக்கவில்லை.

அண்மையில் ஆந்திரோபிக் நிறுவனம் உருவாகியுள்ள கிளாட் மிதோஸ் ஏஐ மிகவும் சக்திவாய்ந்த ஒன்று என்றும் எந்த இணையத்தையும் ஊடுருவ கூடியது என்றும் கூறப்பட்டது. இதனால் சைபர் தாக்குதல்களுக்கு அது பயன்படுத்தப்படும் என்ற அச்சம் நிலவுகிறது.

ஆந்திரோபிக் நிறுவனமே அந்த அச்சகத்தில் அதை வெளியிட தயங்குவதாக கூறப்படுகிறது. முதலில் சைபர் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு அந்த மாடலை வழங்கி ஆய்வு செய்ய அந்நிறுவனம் முடிவெடுத்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த சூழலில் தான் டிரம்ப் உடைய கருத்து விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.



## விடுகதை



| | |
|---|---|
| ஆலமரம் தூங்க அவனியெல்லாம் தூங்க, சீரங்கம் தூங்க திருப்பாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை அவன் யார்? | மூச்சு |
| கொதிக்கும் கிணற்றில் குதித்துக் குண்டாகி வருவான். அவன் யார்? | பூரி |
| கருப்பு நிறமுடையவன், கபடம் அதிகம் கொண்டவன், கூவி அழைத்தால் வந்திடுவான், கூட்டம் சேர்த்தும் வந்திடுவான் அவன் யார்? | காகம் |
| பச்சை பொட்டிக்குள் வெள்ளை முத்துகள்? | வெண்டைக்காய் |
| சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது அது என்ன? | கண் |
| வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி? அவள் யார்? | முட்டை |

# உடல் நலத்தை மேம்படுத்தும் பழக்கங்கள்



* சாப்பிடும் முன்பு ஒரு டம்ளர் வெந்நீர் குடிக்கவும். செரிமானத்தை மேம்படுத்த உதவும்.

* இரவு 10 மணிக்குள் உறங்கவும். மூளையின் ஆரோக்கியத்தையும், ஹார்மோன் சமநிலையையும் பாதுகாக்கும்.

* தினமும் 30 நிமிடங்கள் நடைப்பயிற்சி செய்யவும். இதயம், மனம் மற்றும் எலும்புகள் பலப்படும்.


* தினமும் 15 நிமிடங்கள் சூரிய ஒளியில் நில்லுங்கள். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். மனநிலை மேம்படும்.

* நடைப்பயிற்சிக்கு பிறகு பழங்கள் சாப்பிடுங்கள். மன அமைதி கிடைக்கும்.

* 5 நிமிடங்கள் ஆழ்ந்த மூச்சுப் பயிற்சி செய்யுங்கள். மன அழுத்தம் மற்றும் பதற்றம் குறையும்.

* குடல் ஆரோக்கியத்தை பராமரியுங்கள். மனநிலை, சருமம் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி மேம்படும்.

இந்த சிறிய தினசரி பழக்கங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றங்களை உருவாக்கும்.



# ஜோக்ஸ்

மயிலாப்பூர்-க்கும், மந்தவெளி-க்கும் சண்டை வந்த எது வெற்றி-

பண்ணும்?மைலாபோர், யென்னாஅவனங்கிட்டா டேங்க் இருக்கு.


=======================

Russia-la yen kosu-ve illai?ஒய் என்னா, அங்க கொசுக்கு வேற பெயர் .

=======================

ஒய் என், சினிமா தியேட்டர்ல ஏ-ரோ ல இருக்கற-வங்களுக்கு சினிமாozhungave theri-yalai?என்னா, A-row-kku முன்னால B-row (Bero) irukku.

=======================



யென், டெசர்ட்-ல இருக்கற போஸ்ட் ஆபீஸ்-ல எல்லாரும் லெட்டர் எழுதிட்டு, ஸ்டாம்ப் வாங்கிட்டு, வெளிய போறாங்க?என்னா, வெளிய தான் ஒட்ட-கம் இருக்கு.

=======================

ராமர் ( புராணக் கதாபாத்திரம்) சித்தியா தேடிண்டுலங்கைகலம்பும்போது கடல்-ஐதாண்டரத்துக்கு வரார். அப்போ என்ன ஆச்சார்யம்! காதல் அவருக்கு அப்படியே வழி விட்டுடுது.யேன்? என்ன, மனமிருந்தால் மார்க்கமுண்டு.

=======================

ராஜா ஹரிச்சந்திரா யூஸ் பண்ணா பேஸ்ட் என்னா?வாக்குறுதி.

=======================

டிராபிக் இன்ஸ்பெக்டர்கள் என்னா டூத் பேஸ்ட் யூஸ் பண்ணுவாங்க?சமிக்ஞை.

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## தலசயன பெருமாள் கோவிலில் சித்திரை பிரம்மோற்சவம் தொடக்கம்



மாமல்லபுரத்தில் உள்ள தலசயன பெருமாள் கோவில் 108 திவ்விய தேசங்களில், 63வது திவ்ய தேசம் ஆகும். இங்கு தலசயன பெருமாள், நிலமங்கை தாயார், ஆண்டாள், பன்னிரு ஆழ்வார்கள் வீற்று அருள்பாலிக்கின்றனர்.

இந்தகோவிலில் ஆண்டுதோறும் சித்திரை பிரம்மோற்சவம் விழா விமரிசையாக நடைபெறும். இந்த ஆண்டுக்கான பிரம்மோற்சவ விழாவையொட்டி இன்று அதிகாலை பந்தக்கால் நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து வருகிற 23-ந்தேதியில் இருந்து அங்குரார்ப்பணம், சேனை முதன்மையார் புறப்பாடு, துவஜாரோகணம், கேடயம் புறப்பாடு, மங்களகிரி, யாளி வாகனம், சிம்ம வாகனம், சூரிய பிரபை, அனுமந்த வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்து அருள்பாலிக்கிறார். முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வருகிற 30-ந் தேதி காலை விமரிசையாக நடைபெற உள்ளது.

தொடர்ந்து அடுத்தமாதம் மே 4-ந் தேதி முதல், 7-ந் தேதி வரை, விடையாற்றி உற்சவம் மற்றும் "புஷ்ப பல்லக்கு" வீதி உலாவுடன் விழா நிறைவடைகிறது.

## சித்திரை அமாவாசை தர்ப்பணம்




பொதுவாக மொத்தம் 96 தர்ப்பணங்கள் இருப்பதாக கூறுகின்றனர். சாஸ்திரப்படி, ஓராண்டில் முன்னோர்களுக்குச் செய்ய வேண்டிய 96 முக்கியமான தர்ப்பணங்கள் 'ஷண்ணாவதி தர்ப்பணம்' என்று அழைக்கப்படுகின்றன.

இதில் 12 மாத அமாவாசை தர்ப்பணம், 12 தமிழ் மாதப் பிறப்பு தர்ப்பணம், 12 பவுர்ணமி, 16 மகாளய பட்சம் (புரட்டாசி மாதத்தில் வரும் 16 நாட்கள்), கிரகண காலங்கள், தை, மாசி, பங்குனி, புரட்டாசி மாதங்களில் வரும் அஷ்டமி நாட்கள், மற்றும் யுகாதி நாட்கள் போன்றவை அடங்கும். இந்த 96 தர்ப்பணங்களும் நம் முன்னோர்களை வணங்கி, அவர்களின் ஆசி பெற வழிவகுக்கின்றன.

முன்னோர்களின் ஆத்மா சாந்தி அடையவும், குடும்பத்தில் உள்ள தடைகள் நீங்கி நலம் பெறவும் இந்த 96 தர்ப்பணங்களைச் செய்வது சிறந்தது என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

## அமாவாசை விரத மகிமை: முன்னோர்களின் ஆசியும் குலதெய்வ அருளும் பெறும் வழிபாட்டு முறைகள்.





ஒவ்வொரு அமாவாசைக்கும் பிரபஞ்சம் முழுவதும் விசேஷமான சக்திகள் நிறைந்து காணப்படும் என்பார்கள். அமாவாசை போல பவுர்ணமியிலும் பிரபஞ்ச சக்தி அதிகரித்து காணப்படும். அமாவாசையில் வழிபடும் வழிபாட்டு முறைகள் விசேஷமான பலன்களை கொடுக்கின்றன.

அமாவாசை நாளில் குலதெய்வ பூஜை செய்யலாம். அமாவாசையில் உணவேதும் உண்ணாமல் மந்திரங்களை உச்சரித்து விரதமிருந்து வழிபட்டு வந்தால் சகல சவுபாக்கியங்களும் உண்டாகும் என்கிறது சாஸ்திரம். அமாவாசை விரதம் இருக்க சிறந்த நாளாக கருதப்படுகிறது. அன்றைய நாளில் பிரம்ம முகூர்த்தத்தில் எழுவது என்பது விசேஷ சக்திகளை கொடுக்கும்.

இது உங்களிடம் இருக்கும் கெட்ட சக்திகளை விலகி ஓட செய்யும். வீட்டை சுத்தம் செய்ய அன்றைய நாளில் தண்ணீருடன் சிறிது அளவு கல் உப்பு சேர்த்து துடைத்து எடுக்கலாம். காலை, மாலை இருவேளையும் பூஜை அறையில் விளக்கேற்றி வைக்க வேண்டும்.

குறிப்பாக அமாவாசை நாளில் விரதம் இருப்பவர்கள், விரதம் இல்லாதவர்கள் என்று யாராக இருந்தாலும் புலால் உணவைத் தவிர்ப்பது நல்லது. அமாவாசை ஒளியின் போது புலால் உணவு உண்ணும் பொழுது உடம்பில் ஒருவித அசவுகரியம் உண்டாகும்.

இது அறிவியல் ரீதியாகவும் உண்மை என்பதால் அமாவாசை தினத்தில் அசைவ உணவு உண்ணாமல் இருப்பது நல்லது. மேலும் அதில் பூண்டு, வெங்காயம் போன்ற பொருட்களை சேர்த்த சைவ உணவையும் தவிர்க்க வேண்டும். அமாவாசை தினத்தில் சாப்பிட கூடாத பொருட்கள் இது ஆகும்.

வீட்டில் நேர்மறை ஆற்றல்கள் அதிகரிக்க அன்றைய நாளில் மந்திர ஸ்லோகங்களை உச்சரிப்பதும் அல்லது ஒலிக்க விடுவதும் செய்ய வேண்டும். உங்களுக்கு தெரிந்த சிறு சிறு மந்திரங்களை கூட அமாவாசை நாளில் உச்சரித்து பாருங்கள். நல்ல பலன்கள் எல்லாம் கிடைக்கும். பொன், பொருள் சேர குலதெய்வ அருள் பெறவும் குலதெய்வ வழிபாடு செய்வது நல்லது.

ஒரு மண்பானையில் அல்லது செம்பு, பித்தளை கலசத்தில் தண்ணீரை வைத்து பூஜை அறையில் வையுங்கள். அதில் குலதெய்வத்தை நினைத்து ஆவாகனம் செய்து கொள்ளுங்கள்.

அதன் பிறகு விளக்கு ஏற்றி தீப வழிபாடு செய்வது குலதெய்வ வழிபாட்டை நிறைவு செய்கிறது. உங்களால் முடிந்தால் நைவேத்தியம் வைத்து வழிபடவும், அப்படி இல்லை என்றால் சிறிதளவு கற்கண்டு வைத்து வழிபடுங்கள்.

## சித்திரை அமாவாசை தர்ப்பணம் வழிமுறை



ராமேஸ்வரத்தில் முன்னோருக்கு திதி கொடுப்பவர்கள் முதலாவதாக, அக்னி தீர்த்தம் என்று சொல்லப்படும் ராமேஸ்வரம் கடற்கரையில் நீராடி திதி காரியம் அல்லது, தர்ப்பணம் ஆகியவற்றை செய்து முடிக்க வேண்டும்.

இந்த பித்ரு காரியத்தை செய்து முடிக்காமல் கோவிலுக்கு செல்லக்கூடாது அல்லது கோவிலுக்கு சென்று வந்த பிறகு தர்ப்பணம் செய்யக்கூடாது என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் மீண்டும் அக்னி தீர்த்தத்தில் நீராடி ராமேஸ்வரம் கோவிலில் உள்ள 22 தீர்த்தங்களில் நீராடிய பிறகு ஆடைகளை மாற்றிக்கொண்டு சுவாமி தரிசனம் செய்யலாம்.

ராமேஸ்வரத்திற்கு சித்திரை மாத அமாவாசை அன்று தர்ப்பணம் செய்பவர்கள் அதை முடித்து நீராடி இறைவனை தரிசித்த பிறகு நேரடியாக வீட்டுக்கு திரும்ப வேண்டும்.

அமாவாசை திதி முதல் நாள் இரவே துவங்கி விடுவதால் காலை பிரம்ம முகூர்த்தத்தில் சூரிய உதயம் ஆகும் முன்பே சித்தர்களுக்கான தர்ப்பணம் செய்வது உகந்தது.

அதற்குப் பிறகு கூட்டம் அதிகரிக்கும் என்பது குறிபிடத்தக்கது.

## சித்ரா பவுர்ணமிக்கு அன்னதானம் வழங்குபவர்கள் நாளை முதல் விண்ணப்பிக்கலாம்



சித்ரா பவுர்ணமி முன்னிட்டு அன்னதானம் வழங்குபவர்கள் உணவு பாதுகாப்பு துறையில் நாளை முதல் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக திருவண்ணாமலை கலெக்டர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது,

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் நடைபெறும் முக்கிய விழாக்களில் சித்ரா பவுர்ணமி ஒன்றாகும். இந்த ஆண்டிற்கான சித்ரா பவூர்ணமி வருகிற மே மாதம் 1-ந் தேதி வருகிறது. சித்ரா பவுர்ணமி முன்னிட்டு கிரிவலம் வரும் பக்தர்களுக்கு பொது அன்னதானம் வழங்க உத்தேசிக்கும் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் உணவு பாதுகாப்பு துறையின் www.foscos.gov.in என்ற இணையதளத்தின் மூலம் பதிவு சான்று பெற வேண்டும்.

அவ்வாறு பதிவு சான்று பெற்றவர்கள் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே அன்னதானம் வழங்க வேண்டும். அன்னதானம் வழங்க விரும்புவோர் திருவண்ணாமலை நகரம், செங்கம் சாலை, பழைய அரசு ஆஸ்பத்திரியில் இயங்கி வரும் உணவு பாதுகாப்புத்துறை மாவட்ட நியமன அலுவலர் அலுவலகத்தில் நாளை முதல் 26-ந் தேதி வரை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை அளித்து அனுமதி பெறலாம். மேலும் அவர்கள் பாஸ்போர்ட் அளவு போட்டோ, முகவரி தெரிவிக்கும் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சான்று நகல் ஆகிய விவரங்களை அளிக்க வேண்டும். அன்னதானம் வழங்குபவர்கள் தங்கள் சார்ந்தவர்களின் விவரத்தினை ஆதார் அட்டை நகலுடன் சமர்ப்பிக்க வேண்டும். உணவு மேலாண்மை பயிற்சி பெற்று இருக்க வேண்டும்.

உணவு பொருட்களை கையாள்பவர்கள் தடுப்பூசி மற்றும் மருத்துவச் சான்று பெற்றிருக்க வேண்டும். அன்னதானம் வழங்குபவர்கள் அனுமதிக்கப்பட்ட இடத்தில் மட்டுமே அன்னதானம் வழங்க வேண்டும். அனுமதி அளிக்கப்பட்ட நாள், நேரத்தில் மட்டுமே அன்னதானம் வழங்கப்பட வேண்டும். க்காரணத்தைக் கொண்டும் அனுமதி பெறாமல் அன்னதானம் வழங்கக் கூடாது.


நோய் தொற்று உள்ளவர்களை அன்னதானம் சமைக்கவோ அல்லது வழங்கவோ அனுமதிக்க கூடாது. வாழை இலையில் மட்டுமே அன்னதானம் வழங்க வேண்டும். உணவுப் பொருட்கள் தரமானதாகவும், தூய்மையானதாகவும் மற்றும் கலப்படம் இல்லாமல் இருக்க வேண்டும். உணவுக் கழிவு பொருட்களை போடுவதற்கு ஏதுவாக குப்பை தொட்டிகளை ஏற்பாடு செய்து அன்னதானம் வழங்குபவர்கள் உணவு கழிவுகளை சேகரித்து அகற்ற வேண்டும். மேலும் தொடர்புக்கு 04175 237416 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். மேலும் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாதவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செவ்வாய் தோஷம் முருகன் பரிகாரம்

முருகனின் திருஉருவங்கள்:-

1, சக்திதரர்,
2. கந்தசாமி,
3.தேவசேனாதிபதி,
4. சுப்பிரமணியர்,
5.கஜவாகனர்,
6.சரவணபவர்,
7.கார்த்திகேயர்,
8.குமாரசுவாமி,
9.சண்முகர்,
10.தாரகாரி,
11.சேனாபதி,
12. பிரம்மசாத்தர்,
13. வள்ளிகல்யாண சுந்தரர்,
14.பாலசுவாமி,
15.கிரவுஞ்ச பேதனர்,
சிகிவாகனர் எனப்படும்.

முருகன் அழித்த 6 பகைவர்கள் ஆணவம், கன்மம், குரோதம், லோபம், மதம், மாற்சரியம். முருகனை பூஜிப்பதால் சிறப்பு பெற்ற தலம் மயிலாடு துறை அருகே திருவிடைக்கழி ஆகும். இங்கு முருகபெருமானுக்கு பின்புறம் சிவலிங்கம் உள்ளது. (குராமரத்தடியில் முருகன் பூஜித்தது). அதுபோல் திருவேற்காட்டில் வேலமரத்தடியில் முருகன் பூஜித்த சிவலிங்கம் முருகனுக்கு முன்புறமாக உள்ளது.



முருகபெருமான் போர் புரிந்து அசுரர்களை அழித்த இடம் மூன்றாகும்.

1. சூரபத்மனை வதம் செய்தது- திருச்செந்தூர்.
2. தாரகாசுரனை வதம் செய்தது- திருப்பரங்குன்றம்.
3. இந்த இருவரின் சகோதரனான சிங்கமுகாசுரனை வதம் செய்தது போரூர் ஆகும்.

திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோவில் மூலவரின் நெஞ்சில் சிறிய பள்ளம் இருக்கிறது. சூரனை வதம் செய்யும் போது அவனோடு மோதியதால் இந்த பள்ளம் ஏற்பட்டது. செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் அதிகாலையில் குளித்து முடித்து தூய்மையுடன் ஸ்ரீ சுப்பிரமண்ய அஷ்டகம் ஓத வேண்டும். இதனால் தோஷம் விலகி நன்மை உண்டாகும்.

முருகபெருமானின் வலப்புறம் உள்ள 6 கரங்களில் அபயகரம், சேவல்கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல் என்ற ஆறு ஆயுதங்களும் இடப்புறம் உள்ள 6 கரங்களில் வரமளிக்கும் கை, தாமரை, மணி, மழு, தண்டாயுதம், வில் போன்றவையும் இருக்கும்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.

## திருநாங்கூர் திவ்ய தேசம்



ஸ்ரீ புருசோத்தம நாயகி சமேத ஸ்ரீ புருஷோத்தம பெருமாள் ப்ரம்மோற்சவம் விடையாற்றி உற்சவம் @ மாலை திருவீதி புறப்பாடு

## மாயக்கூத்தர் அனுமந்த வாகனம்



திருக்குளந்தை மாயக்கூத்தர் அனுமந்த வாகனம் 3 ம் உத்ஸவம்

## மோகினி அலங்காரம்



மந்தைவெளி மாரி செட்டிங் தெரு ஆலய பிரம்மோற்சவம் காலை பல்லாக்கு மோகினி அலங்காரம்

# மண்டபம் கடற்கரையில் கரை ஒதுங்கிய கடல் பசு



**மண்டபம், ஏப்.17:** மண்டபம் தென் கடலோரப் பகுதியில் நேற்று கடல் பசு ஒன்று இறந்த நிலையில் கரை ஒதுங்கியது, மீனவர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மண்டபம் தென் கடலோர் பகுதியில் அய்யனார் கோவில் என்ற கிராமப் பகுதி அருகே இறந்த நிலையில் கடல் பசு ஒன்று கரை ஒதுங்கியது. இந்த கடல் பசுவை பார்த்த மீனவர்கள் மண்டபம் வனச்சராக அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்தனர்.

அதன் பேரில் அங்கு வந்து அதிகாரிகள், கடல் பசுவை கைப்பற்றினார்கள். அதன் பின்னர் பசுவை சோதனை செய்ததில் ஆண் பசு எனவும், பாறைகளில் மோதி காயங்களுடன் இறந்து அழுகிய நிலையில் கரை ஒதுங்கியது தெரிய வந்தது.

மேலும் 10 அடி நீளமும், ஆயிரம் கிலோ எடை அளவு வரை இருக்கும் என அதிகாரிகள் மதிப்பீடு செய்தனர். பின்னர் இறந்த கடல் பசுவை உடல் கூறு ஆய்வு செய்து அப்பகுதியிலேயே மணலில் புதைத்தனர்.

# வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் விவரம் பொருத்துவது குறித்து மண்டல அலுவலர்களுக்கு பயிற்சி





**திருவண்ணாமலை ஏப்17:** தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் விவரம் பொருத்துவது தொடர்பாக மண்டல அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



பெருங்குளம் பிரம்மோற்சவம் 5வது நாள் காலை - ஸ்வாமி மாயகூதர் வீதி புரப்பாடு.

## சிம்ம வாகனம்



ஸ்ரீபெரும்புதூர் ஸ்வாமி ராமானுஜர் திருஅவதார உற்சவம் நான்காம் திருநாள் காலை சிம்ம வாகனம் புறப்பாடு.

# ஊட்டி அருகே ஒற்றை காட்டு யானை உலா: வனத்துறை தீவிர கண்காணிப்பு



**ஊட்டி, ஏப்.17:** ஊட்டி அருகே லவ்டேல் சந்திப்பு பகுதியில் ஒற்றை காட்டு யானை உலா வரும் நிலையில் அதன் நடமாட்டத்தை வனத்துறையினர் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். நீலகிரி மாவட்டம், ஊட்டி அருகே தொட்டபெட்டா சிகரம் பகுதியில் கடந்த 12ம் தேதி ஒற்றைக் காட்டு யானை உலா வந்தது. வனத்துறையினர் கண்காணித்து வந்த நிலையில் அந்த யானை இடம்பெயர்ந்து அருவங்காடு பகுதிக்கு சென்றது. அங்கு ஊட்டி-குன்னூர் சாலை மற்றும் அருகில் உள்ள வனப்பகுதியில் நடமாடி வந்த நிலையில் கடந்த 3 நாட்களாக எங்கு சென்றது என தெரியவில்லை.

இந்த சூழலில் யானை அங்கிருந்து இடம்பெயர்ந்து ஊட்டி அருகே உள்ள லவ்டேல் சந்திப்பு பகுதியில் நேற்று நடமாடியது. அங்குள்ள விவசாய நிலத்தை ஒட்டிய வனப்பகுதியில் தென்பட்ட நிலையில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகளும், பொதுமக்களும் யானையை விரட்டியுள்ளனர். யானை நடமாட்டம் குறித்து வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த வனத்துறையினர் யானை நடமாட்டத்தை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

# குருசுமலையில் பாறையில் நின்றபோது தவறி விழுந்து கேரள பள்ளி மாணவர் படுகாயம்: நீண்ட நேரம் போராடி தீயணைப்பு வீரர்கள் மீட்டனர்



**அருமனை, ஏப்.17:** குருசுமலை கொண்டகட்டி மலையில் பாறையில் இருந்து தவறி விழுந்த கேரள மாற்றுத்திறனாளிகள் பள்ளி மாணவர் படுகாயம் அடைந்தார். தமிழக- கேரள எல்லை பகுதியான வெள்ளரடை போலீஸ் எல்லைக்குட்பட்ட குருசுமலை அருகே கொண்டகட்டி மலை பகுதி உள்ளது. இங்கு திருவனந்தபுரம் பகுதியில் உள்ள மாற்றுத்திறனாளி சிறப்பு பள்ளியை சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சுற்றுலா சென்றுள்ளனர். அப்போது அக்ஷய் (22) என்ற மாற்றுத்திறனாளி மாணவர் மலையில் உள்ள பெரிய பாறையின் மேல் நின்று எட்டி பார்த்துள்ளார். அப்போது எதிர்பாராதவிதமாக அவர் தவறி பாறைளுக்கு இடையே விழுந்தார். அவரின் சத்தம் கேட்டு அங்கு வந்த ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் படுகாயமடைந்த மாணவனை மீட்பதற்கு போராடியும் முடியவில்லை.

இதையடுத்து பாறசாலை தீயணைப்பு துறையினருக்கு தகவல் அளித்தனர். அதன்பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற யேசுதாஸ் தலைமையிலான வீரர்கள் நீண்ட நேரம் போராடி பாறைகளுக்கு இடையில் சிக்கி படுகாயமடைந்த அக்ஷயை பத்திரமாக மீட்டனர். பின்னர் அவரை ஸ்ட்ரெச்சரில் வைத்து மலையிலிருந்து கீழே இறக்கினர்.

தொடர்ந்து மாணவருக்கு வெள்ளரடை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்று முதலுதவி அளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக அவரை திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து வெள்ளரடை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## மிஞ்சிகரை வரதராஜ பெருமாள் கோயில்



ராமாநுஜர் ஊத்சவம் 3வது நாள் மாலை, அமிஞ்சிகரை வரதராஜ பெருமாள் கோயில்

# "தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை" - கோவையில் டெல்லி முதல்வர் ரேகா குப்தா குற்றச்சாட்டு



**கோவை, ஏப்.17:** டெல்லி முதல்வர் ரேகா குப்தா கோவை வடக்குத் தொகுதியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் வானதி சீனிவாசனுக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். பின்னர், கோவையில் தங்கிய அவர் (ஏப்.16) அன்று தனியார் சார்பில் நடந்த கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொண்டார். அதைத் தொடர்ந்து நேற்று மதியம் செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

"முதல்வர் ஸ்டாலின் ஆட்சி காலத்தில் பெண்களுக்கு தமிழ்நாட்டில் பாதுகாப்பு இல்லை. இந்தத் தருணத்தில் அனைத்து பெண்களும், தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். முதல்வர் ஸ்டாலின் பெண்களை அவமதித்து வருகிறார்.

முதல்வர் ஸ்டாலினுக்கு எதிராக ஏன் பெண்கள் போராட்டத்தை கையில் எடுக்கக் கூடாது? ஸ்டாலினுக்கு எதிராக ஏன் கருப்புக்கொடி போராட்டத்தை செய்யக் கூடாது?தொகுதி மறுவரையறை நாடாளுமன்றத்தில் பெண் உறுப்பினர்களை அதிக அளவில் கொண்டுவர வழிவகுக்கும். இந்த நாட்டின் முக்கியமான பல முடிவுகளை எடுப்பதற்கு பெண்களின் பங்கு இருப்பதை உறுதி செய்யும்.

பெண்கள் முன்னேற வேண்டாம் என்று திமுக கருதுகிறது. திமுகவின் உதயசூரியன் சின்னம் என்பது உதயசூரியன் அல்ல, அஸ்தமனமாக கூடிய சூரியன். முதல்வர் ஸ்டாலின் பெண்களுக்கு எதிரானவர். அவர் ஒரு குற்றவாளி" என்றார்.




# 'ஸ்டாலின் மத சாயம் பூசி வாக்குகளை வாங்கப் பார்க்கிறார்... இஸ்லாமிய மக்கள் சிந்திக்க வேண்டும்' - இபிஎஸ்



**கோவை, ஏப்.17:** கோவை மேட்டுப்பாளையத்தில் இபிஎஸ் நேற்று பிரசாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய அவர்,

இஸ்லாமிய மக்களே, சிந்தியுங்கள். நாங்கள் மக்கள் விரோத ஆட்சியை அகற்றவே பாஜகவுடன் கூட்டணி வைத்திருக்கிறோம். உடனே, மதவாதக் கட்சியோடு சேர்ந்துவிட்டோம் என்கிறார் ஸ்டாலின். பாஜக இந்திய நாட்டை ஆள்கிறது, ஸ்டாலினுக்கும் பிரதமர் மோடி தான். இந்தியாவில் ஒரு மாநிலம் தான் தமிழ்நாடு.

மதச் சாயத்தை பூசி வாக்குகளை பெற ஸ்டாலின் நாடகம் அரங்கேற்றி வருகிறார். அவர்கள் 1999 ஆண்டு பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ளனர், வாஜ்பாய் அமைச்சரவையில் அமைச்சர் முரசொலி மாறன் இருந்தார். 2001 சட்டமன்றத் தேர்தலிலும் பாஜகவுடன் கூட்டணியில் இருந்தார்கள்.

அப்போதெல்லாம் பாஜக மதவாதக் கட்சி என்று தெரியாதா? ஒவ்வொரு கட்சிக்கும் தனிக் கொள்கை இருக்கிறது. கொள்கை வேறு, கூட்டணி வேறு. தமிழ்நாட்டை மீண்டும் ஏமாற்றலாம் என்று பழக்க தோஷம். ஊழல் ஆட்சியை அகற்றுவதற்குத்தான் கூட்டணி அமைத்தோம்.

இஸ்லாமியர்களுக்கு அதிமுக ஆட்சியில் நிறைய சாதனைகள் செய்தோம், பல கோரிக்கைகளை நிறைவேற்றினோம், தமிழ்நாடு அமைதி பூங்காவாக விளங்க காரணம் 31 ஆண்டுகாலம் ஆட்சி புரிந்த அதிமுக. கண்ணை இமை காப்பதை போல சிறுபான்மை மக்களை காத்த கட்சி அதிமுக. இஸ்லாமியப் பெருமக்களுக்கு ஏராளமான திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறோம்.

சென்னையில் ஹஜ் இல்லம் கட்ட 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது; ஹாஜிகளுக்கு மதிப்பூதியம், உலமாக்கள், மோதினார்களுக்கு ஓய்வூதியம் அதிகரிக்கப்பட்டது; உலமாக்களுக்கு இருசக்கர வாகன மானியம் 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. வக்ஃப் வாரியத்துக்கு ஆண்டு மானியம், பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்கள் புனரமைப்பு நிதி வழங்கப்பட்டது.

இஸ்லாமியர்களுக்கு நேரடி நியமன முறையில் நிரப்பப்படாத பணியிடங்களுக்கு முன்கொணர்வு முறையை நீடிக்க அரசாணை வெளியிடப்பட்டது. டெல்டா மாவட்டங்களில் பெய்த கனமழையில் நாகூர் தர்கா குளக்கரை சேதமடைந்துவிட்டதால், அதனை சரிசெய்ய நானே நேரில் பார்வையிட்டு 4 கோடியே 25 லட்சம் ரூபாய் ஒதுக்கி சீரமைத்துக் கொடுத்தேன்.

சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டது; ஜனாதிபதி தேர்தலில் அப்துல்கலாமுக்கு ஆதரவு கொடுத்தது அதிமுக, எதிர்த்து ஓட்டுப்போட்டது திமுக. 2019ல் மறைந்த அப்துல்கலாம் நினைவாக கலை அறிவியல் கல்லூரி ராமேஸ்வரத்தில் தொடங்கப்பட்டது; 2017ல் திண்டுக்கல்லில் திப்பு சுல்தான் மற்றும் ஹைதர் அலி வாழ்க்கை வரலாறு குறித்த மணி மண்டபம் அமைக்கப்பட்டது;

கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களுக்கு சென்னையில் மணிமண்டபம் அமைக்கப்பட்டது. இஸ்லாமியர்களே சிந்தியுங்கள், எந்த அரசு சிறுபான்மை மக்களுக்குத் தேவையான திட்டங்கள் கொடுத்தது என்று சிந்தித்தால் வாக்களிப்பீர்கள்." என தெரிவித்தார்.

## திவ்ய சேவை



நெல்லூர் தள்பகிரி ஸ்ரீரங்கநாத பெருமாள் சன்னதி ஸ்வாமி எம்பெருமானார் திருவாவதார விழா நாள் 3 திவ்ய சேவை.

# சுற்றுலா: கோடை விடுமுறையில் மிஸ் பண்ணக்கூடாத 5 இடங்கள்!



### 1. கேர்ன் ஹில் – Cairn Hill Ooty

ஊட்டியில் இருக்கும் இந்த இடம் அடர்ந்த காடுகள் மற்றும் இயற்கை சூழலில் அமைந்த அமைதியான சுற்றுலாத் தளம். மரங்களுக்கு நடுவே அமைக்கப்பட்ட தொங்கும் பாலம் வித்தியாசமான அனுபவத்தை தரும். இயற்கையின் அழகு நிறைந்த இந்த இடத்தில் நடந்து சென்று அமைதியாக ரசிக்கலாம்.

### 2. வால்பாறை – Valparai

பொள்ளாச்சிக்குஅருகில்உள்ள ஆனைமலை மலைத்தொடரில் அமைந்துள்ள வால்பாறை பசுமை நிறைந்த இடம். தேயிலை மற்றும் காபி தோட்டங்கள் நிறைந்த இந்த மலைப்பகுதியில் 40 கொண்டை ஊசி வளைவுகள் (HAIRPIN BENDS) உள்ள சாலை பயணம் செம்ம INTERESTING-ஆ இருக்கும்.

கடல் மட்டத்திலிருந்து உயரத்தில் இருப்பதால் வருடம் முழுவதும் கிளைமேட் சூப்பராக இருக்கும். வனப்பகுதி என்பதால் வனவிலங்குகளை இயற்கையாக காணும் வாய்ப்பும் கிடைக்கும்.

### 3. பூம்பாறை – Poombarai

கொடைக்கானலுக்கு அருகில் அமைந்துள்ள இந்த மலை கிராமம் இயற்கை எழிலால் மெய்சிலிர்க்க வைக்கும். கூட்ட நெரிசல் குறைவாக இருப்பதால் அமைதியாக சுற்றிப் பார்க்க விரும்புபவர்களுக்கு இது மிகச்சிறந்த இடம். பசுமை மலைகள், மேகங்கள், வியூ பாயிண்ட்கள் என எங்க பார்த்தாலும் அழகு தான். புகைப்பட ஆர்வலர்களுக்கும் செல்ஃபி லவர்ஸ்க்கும் இது PERFECT SPOT.



### 4. மசினகுடி – Masinagudi

நீலகிரிமாவட்டத்தில், ஊட்டிக்கு அருகில் உள்ள அமைதியான வனவிலங்கு சுற்றுலாத் தளம். இது முதுமலை புலிகள் காப்பகத்தின் எல்லையில் உள்ளது.

இயற்கை ஆர்வலர்கள், WILDLIFE PHOTOGRAPHERS மற்றும் TREKKING LOVERS-க்கு இது மிகவும் ஏற்ற இடம். ஜீப் சவாரி, பறவைகள் பார்ப்பது, யானை சவாரி போன்றவை இங்கு பிரபலமானவை. சாலை பயணத்தின்போது வனவிலங்குகளை காணும் வாய்ப்பும் கிடைக்கும்.

### 5. சிறுமலை – Sirumalai

நத்தம் சாலையில் அமைந்துள்ள இந்த மலைப்பகுதி கோடைக்காலத்தில் குளிர்ச்சியான சூழலை தரும் ஒரு HIDDEN GEM. கூட்டம் குறைவாக இருப்பது இதன் பெரிய PLUS POINT. மழைக்காலங்களில் இது இன்னும் பசுமையாக மாறி கண்களை கவரும். பேருந்து வசதி இருந்தாலும், நம்ம காரில் போனால் முழு அழகையும் ரசிக்க முடியும்.

தமிழ்நாட்டில் பல சுற்றுலா தலங்கள் இருந்தாலும், கேர்ன் ஹில், சிறுமலை போன்ற HIDDEN PLACES போனால் கூட்ட நெரிசல் இல்லாமல் நிம்மதியாக விடுமுறையை அனுபவிக்கலாம்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### மாதம் ரூ. 85,920 சம்பளத்தில் பஞ்சாப்-சிந்து வங்கியில் வேலை!

1908 ஆம் ஆண்டு தில்லியை தலைமையிடமாகக் கொண்டு தொடங்கப்பட்டது பஞ்சாப் மற்றும் சிந்து வங்கி. நாடு முழுவதும் பல்வேறு கிளைகளுடன் நிதி சேவைகளை வழங்கி வரும் பொதுத்துறை முன்னணி வங்கிகளில் ஒன்றாகும். தற்போது இந்த வங்கியில் 1000 உள்ளூர் அலுவலர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியும் ஆர்வமும் உள்ள பட்டதாரி இளைஞர்களிடம் இருந்து வரும் 20 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி: உள்ளூர் அலுவலர் (Local Bank Officer)

காலியிடங்கள்: 1000 (தமிழ்நாடிற்கு 65 பணியிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது)

மாநிலங்கள் வாரியாக காலியிடங்கள் விவரம்:

அஸ்ஸாம் - 50, அருணாச்சலப்பிரதேசம் - 15, உத்தரப்பிரதேசம் - 200, சத்தீஸ்கர் - 80, ஹிமாச்சலப் பிரதேசம் - 20, ஜார்க்கண்ட் - 10, குஜராத் - 125, கர்நாடகம் - 60, கேரளம் - 10, தெலங்கானா - 30, மத்தியப்பிரதேசம் - 60, மகாராஷ்டிரம் - 60, ஒடிசா - 80, நாகாலாந்து - 5, மேற்குவங்கம் - 30, பஞ்சாப் - 100, தமிழ்நாடு - 65

சம்பளம்: மாதம் ரூ.48,480 - 85,920

வயதுவரம்பு: 1.3.2026 தேதியின்படி 20 முதல் 30-க்குள் இருக்க வேண்டும். எஸ்சி, எஸ்டி பிரிவினர்களுக்கு 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகளும், மாற்றுத்திறனாளி பிரிவினருக்கு பத்தாண்டுகள் சலுகை வழங்கப்படும். தகுதி: ஏதாவதொரு பாடத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். வணிக வங்கிகள், நிதிநிறுவனங்கள் என வங்கி சார்ந்த பணிகளில் குறைந்தது 18 மாதங்கள் பணிஅனுபவம் பெற்றிருக்க வேண்டும். மேலும் பணிபுரிய விரும்பும் மாநிலத்தின் அலுவலக மொழியில் பேச, எழுத தெரிந்திருக்க வேண்டும். ஆன்லைன் முறையில் நடத்தப்படும் எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு அடிப்படையில் தகுதியானவர்கள்தேர்வு செய்யப்படுவர். எழுத்துத் தேர்வு நடை பெறும் இடம், தேதி குறித்த விபரம் அடங்கிய நுழைவுச்சீட்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். தேர்வு நடைபெறும் இடங்கள்: தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், நாகர்கோவில், விருதுநகர்.

விண்ணப்பிக்கும் முறை: www.punjabandsind.bank.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 20.4.2026

## சென்னை அருகே மீஞ்சூரில் கல்லூரி மாணவிக்கு சரமாரி வெட்டு - இளைஞர் கைது, இருவருக்கு வலை

**சென்னை, ஏப். 17:**

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூரை அடுத்த வல்லூர் ஊராட்சிக்கு உட்பட்ட வாலாஜா மசூதி தெருவில் வசித்து வருபவர் முகமது அஸ்கர். இவருக்கு சல்மா என்ற மனைவியும், இரு பிள்ளைகளும் உள்ளனர். இவரது மகள் சுமையா ஃபாத்திமா (18) தனியார் கல்லூரி ஒன்றில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார். தற்போது கல்லூரி செமஸ்டர் தேர்வு நடைபெற்று வரும் நிலையில், மாணவி ஃபாத்திமா தேர்வுக்காக தயாராகி கொண்டிருந்தார். நேற்று இரவு இந்த மாணவி தனது வீட்டு மாடியில் உள்ள அறையில் தனியாக படித்து கொண்டிருந்த நிலையில், மூன்று இளைஞர்கள் கஞ்சா போதையில் ஃபாத்திமா வீட்டு பின்புறம் உள்ள முட்புதர் வழியாக பக்கத்து வீட்டு மாடி வழியாக ஏறி ஃபாத்திமா வீட்டு மாடியில் குதித்தனர்.

பின்னர் கஞ்சா போதையில் இருந்த மூன்று இளைஞர்கள், ஃபாத்திமா அறையில் புகுந்து அவரை பாலியல் வன்கொடுமை செய்ய முயன்றதாக கூறப்படுகிறது. அப்போது, மாணவி ஃபாத்திமா கூச்சலிடவே ஆத்திரமடைந்த போதை இளைஞர்கள் கத்தியால் ஃபாத்திமாவை கை, கால் , தலை உள்ளிட்ட பகுதிகளில் சரமாரியாக வெட்டி விட்டு தப்பி ஓட முயன்றுள்ளனர்.

அப்போது, ஃபாத்திமா அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த பெற்றோர் மற்றும் அக்கம்பக்கத்தினர், தப்பி ஓட முயன்ற மூவரில் ஒருவரை மட்டும் விரட்டிச் சென்று பிடித்து அடித்து, மீஞ்சூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பின்னர், பாதிக்கப்பட்ட மாணவியை மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட மாணவி ஃபாத்திமாவுக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். இச்சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்த மீஞ்சூர் போலீஸார், கைது செய்யப்பட்ட இளைஞர் டில்லி பாபுவிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், தப்பி ஓடியவர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

## 20,400 மெட்ரிக் டன் எல்பிஜிக்களுடன் இந்தியா வந்தடைந்த ஜக் விக்ரம் கப்பல்!

**புதுடெல்லி, ஏப்.17:**



ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து 20400 மெட்ரிக் டன் எல்பிஜிக்களை ஏற்றி வந்த இந்தியக் கப்பலான ஜக் விக்ரம் செவ்வாய்க்கிழமை (ஏப்ரல் 14) குஜராத்தின் காண்ட்லா துறைமுகத்தை வந்தடைந்தது.

அந்தக் கப்பல் செவ்வாய்க்கிழமை இரவு தாமதமாக காண்ட்லா துறைமுகத்தில் நங்கூரமிட்டது. சரக்குகளை இறக்கும் பணி விரைவில் தொடங்கும். மேலும் இது நாட்டின் எல்பிஜி விநியோகத்தை வலுப்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டுவார தற்காலிக போர் நிறுத்ததுக்குப் பிறகு, ஏப்ரல் 11 ஆம் தேதி ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து இந்தியா வந்தடைந்த முதல் கப்பலாக ஜக் விக்ரம் உள்ளது.

ஈரான் - இஸ்ரேல், அமெரிக்கா இடையேயான போர் கடந்த பிப்.28 ஆம் தேதி தொடங்கியது. அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது தொடர்ந்த தாக்குதல்களால் ஈரான் உலகளவில் எண்ணெய் வழிப்போக்குவரத்துக்கு முக்கிய வழித்தடமான ஹோர்முஸ் நீரிணையை முடக்கியது.

இதனால் உலகின் பல நாடுகளில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில நாடுகளின் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு ஹோர்முஸ் நீரிணையைப் பயன்படுத்த குறிப்பிட்ட நாடுகளுக்கு மட்டும் ஈரான் அனுமதி அளித்திருந்தது. அதில் இந்தியாவும் ஒன்றாகும்.

## 8 லட்சம் மனுக்கள் நிலுவை! மாவட்ட நீதிமன்றங்கள் மீது உச்சநீதிமன்றம் அதிருப்தி!!

**புதுடெல்லி, ஏப்.17:**



மாவட்ட நீதிமன்றங்களில் 10 லட்சத்துக்கும் அதிகமான மனுக்கள் நிலுவையில் இருப்பதாகவும், அவற்றில் 8 லட்சத்துக்கும் அதிகமான மனுக்கள் ஆறு மாதங்களுக்கும் மேலாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக உச்சநீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

உரிமையியல் வழக்குகளில், குறிப்பாக சொத்து தொடர்பான வழக்குகளில் தமக்கு சாதகமாக நீதிமன்ற உத்தரவு பெற்றவர்கள், அந்த உத்தரவை நிறைவேற்றக் கோரி தாக்கல் செய்யும் மனுக்கள் மீது, அவை தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து 6 மாதங்களுக்குள் முடிவு எடுக்க வேண்டும் என்றும், தமது அதிகார வரம்புக்குள்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் அனைத்து உயர்நீதிமன்றங்களுக்கும் கடந்தாண்டு மார்ச் 6 ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவுக்கிணங்கநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? என்பதை உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி. பார்திவாலா, பங்கஜ் மித்தல் ஆகியோர் அடங்கிய அமர்வு கடந்தாண்டு விசாரித்தது.

அப்போது உரிமையியல் விவகாரங்களில் நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றக் கோரி, நாட்டில் உள்ள பல்வேறு நீதிமன்றங்களில் 7,95,981-க்கும் மேற்பட்ட மனுக்கள் நிலுவையில் உள்ளதாகவும், இந்த மனுக்களால் மிகுந்த ஏமாற்றமளிப்பதாகவும் நீதிபதிகள் தெரிவித்திருந்தனர். மேலும், இந்த விவகாரம் நடப்பாண்டு ஏப்.10 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நிலுவையில் உள்ள மனுக்களின் நிலவரம் குறித்த முழுமையான விவரங்கள் தொடர்பாக மீண்டும் விசாரிக்கப்பட்டது.

அதன்படி, உச்சநீதிமன்றத்தின் உத்தரவின்படி, கடந்த ஓராண்டில் சுமார் 7.7 லட்சம் வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த ஆறு மாதங்களில் மாவட்ட நீதிமன்றங்களில் 4.3 லட்சம் மனுக்கள் முடித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட நீதித்துறைமேற்கொண்ட முயற்சிக்கு உச்சநீதிமன்றம் பாராட்டு தெரிவித்துள்ளது.

ஆனாலும், நிலுவையில் உள்ள மனுக்களை முடித்துவைக்க மாவட்ட நீதிமன்றங்களை உயர்நீதிமன்றங்கள் வழிகாட்டுமாறு சுட்டிக்காட்டியதை மேற்கொள்காட்டிய உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் தாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அதற்கு இன்னும் விளக்கமளிக்கவில்லை. தங்கள் பதிலைத் தாக்கல் செய்யுமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## தமிழகம் முழுவதும் 3 லட்சம் அரசு ஊழியர்கள் தபால் வாக்குகளை செலுத்தினர்

**சென்னை, ஏப்.17:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலின் ஒரு பகுதியாக வாக்குச்சாவடி அலுவலர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு மாநிலம் தழுவிய 2-ம் கட்ட தேர்தல் பயிற்சி நேற்று நடத்தப்பட்டது. இதில் வாக்குப் பதிவு அலுவலர்களின் கடமைகள், பணிகள், பொறுப்புகள் தொடர்பான தலைப்புகளிலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கையாள்வது குறித்த நேரடிப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. மேலும், வாக்குப்பதிவு அலுவலர்கள் தங்களின் வாக்குகளை தபால் வாக்குச்சீட்டு மூலம் பதிவு செய்வதற்கான வசதியும் ஏற்படுத்தித் தரப்பட்டது.

சுமார் 3 லட்சம் வாக்குப்பதிவு அலுவலர்கள் 'படிவம் 12' வாயிலாக தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளனர். இப்பயிற்சி மையங்களிலேயே அவர்கள் தங்களது தபால் வாக்குச்சீட்டுகளைப்பெற்று, அங்கேயே வாக்குகளைப் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி தமிழகம் முழுவதும் நேற்று சுமார் 3 லட்சம் பேர் தங்கள் தபால் வாக்குகளை செலுத்தினர். முந்தைய நடைமுறைப்படி, தேர்தல் பணியாளர்கள் தபால் வாக்குச்சீட்டை தங்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்று, பின்னர் தபால் மூலம் அனுப்பி வைப்பது வழக்கமாக இருந்தது.

தற்போது அதற்கென அமைக்கப்பட்ட வாக்களிப்பு மையங்களிலேயே தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

## ரூ.8 ஆயிரம் கூப்பன்: 2 திமுகவினர் மீது வழக்கு பதிவு

**சென்னை, ஏப்.17:**

வண்ணாரப்பேட்டையில் வாக்காளர்களுக்கு ரூ.8 ஆயிரம் இலவச கூப்பன் விநியோகம் செய்ததாக திமுகவைச் சேர்ந்த 2 பேர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது.

வண்ணாரப்பேட்டை வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு பகுதியில் வாக்காளர்களுக்கு பரிசுப் பொருள்கள் விநியோகம் செய்யப்படுவதாக தகவல் கிடைத்த நிலையில், போலீஸாரும், பறக்கும் படையினரும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது சந்தேகத்துக்குரிய வகையில் 2 பேர், அங்குள்ள வீடுகளுக்குள் சென்று வருவது தெரிந்தது. இதையடுத்து போலீஸார், அவர்களைப் பிடித்து விசாரித்தனர். அவர்கள் வைத்திருந்த பையை சோதனையிட்டபோது, ரூ.8 ஆயிரம் கூப்பன்கள் இருப்பது தெரிந்தது.

அதை போலீஸார் உடனடியாக பறிமுதல் செய்தனர். மேலும் அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. பிடிபட்ட இருவரும் திமுகவைச் சேர்ந்தவர்கள் என்பதும், அந்த பகுதியைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு ரூ.8 ஆயிரம் இல்லத்தரசி கூப்பன் என்ற இலவச கூப்பன் மாதிரிகளை விநியோகம் செய்ததும் தெரியவந்தது.

இது தொடர்பாக வண்ணாரப்பேட்டை போலீஸார் வழக்கு பதிவு செய்து தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# கோடை விடுமுறையை மாணவர்கள் பயனுள்ளதாக மாற்ற வேண்டும்: பள்ளிக்கல்வித் துறை அறிவுறுத்தல்

**சென்னை, ஏப்.17:**

கோடைவிடுமுறைக்காலத்தை மாணவர்கள் பயனுள்ளதாக மாற்ற வேண்டுமென பள்ளிக்கல்வித் துறை அறிவுறுத்தியுள்ளது. தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு கோடை விடுமுறை நாளை (ஏப். 17) முதல் வழங்கப்பட்டுள்ளது.

மீண்டும் பள்ளிகள் ஜூன் 1-ம் தேதி திறக்கப்பட உள்ளன. எனவே இந்த விடுமுறை நாட்களில் மாணவர்களின் பாதுகாப்பு கருதி பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் குறித்து பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.




அதன் விவரம் வருமாறு: மாணவர்கள் விடுமுறை நாட்களில் கடல், ஆறு, ஏரி, குளம் மற்றும் குட்டை போன்ற நீர்நிலைகளில் குளிப்பதற்கு பெற்றோர் அனுமதிக்க வேண்டாம்.

கோடை வெப்பம் அதிகமாக இருப்பதால் வெளிப்புற விளையாட்டுகளின் போது அதிகளவு தண்ணீரை அருந்தச் செய்யுங்கள். வெயில் அதிகமாக இருக்கும் பகல் நேரத்தில் வெளியே செல்வதையும், விளையாடுவதையும் தவிர்க்கவும்.

விடுமுறை நாட்களில் சில மாணவர்கள் தங்கள் உடல் மற்றும் மனநலனைப் பாதிக்கும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும். அதை சரியாகக் கையாள வேண்டும்.

அதன்படி தனிமை உணர்வுகளைத் தடுக்க நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் சேர்ந்து விளையாடுதல், உணவு அருந்துதல், இசை நிகழ்ச்சிகளைக் கவனித்தல் ஆகியவற்றின் மூலம் சமூக தொடர்புகளை ஊக்குவிக்கவும், மனநலனைப் பேணவும் முடியும். டி.வி, செல்போன் ஆகியவற்றைப் பார்ப்பதில் அதிகமான நேரத்தை செலவிடுவதைத் தவிர்க்க அறிவுறுத்த வேண்டும்.

மாணவர்களின் வளர்ச்சிக்கு சமச்சீரான உணவு அளிப்பது அவசியம். எனவே பாரம்பரிய உணவு வகைகளைத் தரவேண்டும். கோடை காலத்துக்கு ஏற்ற பழ வகைகளை வழங்க வேண்டும்.

இதுதவிர மாணவர்களை அருகில் உள்ள பொது நூலகங்களுக்கு அழைத்துச் சென்று ஒரு மணி நேரமாவது புத்தகங்களைப் படிக்க ஊக்குவிக்கவும்.

அவர்களின் ஆர்வங்களைப் பொருத்து காமிக்ஸ் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள், சிறார் கதைகள் மற்றும் நீதி நூல்களைப் படிக்க அறிவுறுத்த வேண்டும்.

இசை, நடனம், ஓவியம் போன்றவற்றில் ஆர்வமுள்ள மாணவர்களை விடுமுறை நாட்களில் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

தினமும் இருவேளை பல் துலக்கி, குளித்தல் போன்ற பழக்கங்களை ஊக்குவிக்க வேண்டும். பெரியோர்களை மதிக்கவும் அவர்களுக்கு உதவி செய்யவும் பழக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### கேரள மாணவர் இறப்பதற்கு முன் கடன் செயலியில் இருந்து 96 அழைப்பு - போலீஸார் தகவல்

**கண்ணூர், ஏப்.17:**

கண்ணூர்: கேரளாவின் உழமலக்கால் கிராமத்தைச் சேர்ந்த நிதின் ராஜ், கண்ணூரில் உள்ள தனியார் பல் மருத்துவக் கல்லூரியில் பிடிஎஸ் படித்து வந்தார். இவர் கடந்த வாரம் கல்லூரி கட்டிடத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து போலீஸார் கூறியதாவது: ஆன்லைன் கடன் செயலி மூலம் நிதின் ராஜ் ரூ.13,500 கடன் பெற்றுள்ளார். இதற்கு அதிக வட்டி விதிக்கப்பட்டதால், ஒரே மாதத்தில் இந்த கடன் ரூ.19,000-ஆக உயர்ந்துள்ளது. இந்நிலையில் கடந்த 6-ம் தேதி நிதின் ராஜ் ரூ.1,000 திருப்பிச் செலுத்தியுள்ளார்.

ஆனால் கடன் கொடுத்தவர்கள் நிதின் இறப்பதற்கு முதல் நாள் 96 முறை அழைத்து பணத்தை திருப்பி செலுத்தும்படி தொந்தரவு செய்துள்ளனர். அதேநேரம் நிதின் படிக்கும் கல்லூரி பேராசிரியர் ஒருவருக்கும் 26 முறை போன் செய்து நிதினை கடனை திருப்பிச் செலுத்தும்படி கூறியுள்ளனர். இதனால் அவர் இதுகுறித்து கல்லூரி முதல்வரிடம் புகார் அளித்தார். இதைத் தொடர்ந்து நிதினை கல்லூரி முதல்வர் அழைத்து விசாரித்துள்ளார். அடுத்த 10-வது நிமிடத்தில் நிதின் ராஜ் மாடியிலிருந்து குதித்து இறந்துள்ளார். இவ்வாறு போலீஸார் தெரிவித்துள்ளனர்.

### ராபர்ட் வதேராவுக்கு டெல்லி நீதிமன்றம் சம்மன்

**புதுடெல்லி, ஏப்.17:**

ஹரியானா மாநிலம் ஷிகோப்பூரில் ஓம்காரேஷ்வர் பிராப்பர்டீஸ் என்ற நிறுவனத்திடமிருந்து கடந்த 2008-ல் ராபர்ட் வதேராவுக்குச் சொந்தமான ஸ்கைலைட் ஹாஸ்பிட்டாலிட்டி நிறுவனம் 3.53 ஏக்கர் நிலத்தை வாங்கியது. இந்த நிலத்தை வாங்கியதில் முறைகேடு நடந்திருப்பதாக ராபர்ட் வதேரா உள்ளிட்ட 9 பேர் மீது அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த ஆண்டு ஜூலையில் வழக்குப் பதிவு செய்தனர். நிலம் வாங்கியதில் சட்ட விரோத பணப் பரிவர்த்தனை நடந்திருக்கலாம் என்று தெரியவந்துள்ளதாக அமலாக்கத்துறை தெரிவித்தது. ரூ.7.5 கோடி கொடுத்து வாங்கப்பட்டதாக ஆவணங்களில் உள்ளது. ஆனால், நிலத்தை வாங்கியதற்காக கொடுக்கப்பட்ட காசோலை பணமாக்கப்படவில்லை என அமலாக்கத்துறை புகார் கூறியுள்ளது. இந்நிலையில் இந்த வழக்கு தொடர்பான விசாரணை டெல்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றத்தில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி சுஷாந்த் சங்கோத்ரா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது ராபர்ட் வதேரா உள்ளிட்ட 9 பேரும் வரும் மே 16ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று நீதிபதி சம்மன் அனுப்ப உத்தரவிட்டார். இந்த வழக்கில் ராபர்ட் வதேராவுக்குச் சொந்தமான ரூ.37.64 கோடி மதிப்புள்ள 43 அசையா சொத்துகளை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### மும்பை இசை நிகழ்ச்சியில் போதைப்பொருள் உட்கொண்ட 2 மாணவர்கள் உயிரிழப்பு

**மும்பை, ஏப்.17:**

மும்பையில் உள்ள நெஸ்கோ மையத்தில் கடந்த 11-ம் தேதி இரவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ரூ.2,000 நுழைவுக் கட்டணம் செலுத்தி சுமார் 4,000 பேர் கலந்து கொண்டனர். இதில் கலந்துகொண்ட சிலர் தடை செய்யப்பட்ட எம்டிஎம்ஏ போதைப் பொருளை உட்கொண்டதாக கூறப்படுகிறது, இதனால் இரவு 12 மணியளவில், 3 மாணவர்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் 24 வயது பெண்ணும் 28 வயது ஆணும் மருத்துவமனையில் உயிரிழந்தனர். 25 வயது பெண் கவலைக்கிடமான நிலையில் உள்ளார்.

இதுகுறித்து மும்பை போலீஸார் கூறுகையில், “இறந்த மாணவர்களில் ஒருவர் நிகழ்ச்சிக்கு செல்லும் வழியில் டாக்ஸிக்குள் ஒரு மாத்திரையும் நிகழ்ச்சியில் இரண்டாவது மாத்திரையும் உட்கொண்டுள்ளார். இது போதைப் பொருள் அதிகமாவதற்கு வழிவகுத்தது. அதிக போதைப்பொருளை உட்கொண்டதே மரணத்துக்கு காரணம் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர் என்றனர். மும்பைக்கு வெளியிலிருந்து இந்த மாத்திரைகள் கொண்டு வரப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## விளையாட்டு செய்திகள்

### வரலாறு படைத்த வைஷாலி.. கேண்டிடேட்ஸ் போட்டியில் ‘சாம்பியன்’ பட்டம் வென்று அசத்தல்

**பெஜியா, ஏப்.17:**

உலக செஸ் சாம்பியன்ஷிப்பில் நடப்பு சாம்பியனுடன் மோதும் வீரர், வீராங்கனையை தேர்வு செய்வதற்கான கேண்டிடேட்ஸ் செஸ் தொடர் சைப்ரஸ் நாட்டில் நடந்துவந்தது. நேற்று 14-வது மற்றும் கடைசி சுற்று நடந்தது. ஆண்கள் பிரிவில் ஏற்கனவே பட்டத்தை உறுதி செய்து விட்ட உஸ்பெகிஸ்தானின் ஜவோகிர் சிந்தா ரோவ் சீனாவின் வெய்யியுடன் டிரா செய்தார்.

பிரக்ஞானந்தா (இந்தியா)- ஹிகரு நகமுரா (அமெரிக்கா) இடையிலான ஆட்டமும் ‘டிரா’வில் முடிந்தது. 14 சுற்று முடிவில் முதலிடத்தை பிடித்த சிந்தாரோவ் (10 புள்ளி) உலக செஸ் சாம்பியன்ஷிப்புக்கு தகுதி பெற்றார். இதன்படி அவர் உலக போட்டியில் இந்தியாவின் குகேசுடன் விளையாட இருக்கிறார். தமிழகத்தின் பிரக்ஞானந்தா 6 புள்ளியுடன் 7-வது இடத்தை பெற்று ஏமாற்றம் அளித்தார்.

பெண்கள் பிரிவில் கடைசி ரவுண்டில் தமிழகத்தின் வைஷாலி, ரஷியாவின் கேத்ரினா லாக்னோவை சந்தித்தார். வெள்ளைநிற காய்களுடன் ஆடிய வைஷாலி 48-வது நகர்த்தலில் எதிராளியை மடக்கினார். அவருடன் சவாலுக்கு நின்ற பிபிசரா அசாபயேவா (கஜகஸ்தான்) கடைசி சுற்றில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக்குடன் டிரா கண்டார்.

முடிவில் ஆர். வைஷாலி 8% புள்ளிகளுடன் (5 வெற்றி, 7 டிரா, 2 தோல்வி) முதலிடத்தை பிடித்து சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். கேண்டிடேட்ஸ் போட்டியில் வாகை சூடிய முதல் இந்திய வீராங்கனை என்ற வரலாற்று சாதனையை 24 வயதான வைஷாலி படைத்தார். அத்துடன் ஆண்டின் இறுதியில் நடக்கும் பெண்கள் உலக செஸ் சாம்பியன்ஷிப்பில் நடப்பு சாம்பியன் சீன வீராங்கனை ஜூ வென்ஜூனுடன் மோதும் வாய்ப்பையும் பெற்றார்.

### பார்சிலோனா ஓபன்: டி மினார் அதிர்ச்சி தோல்வி

**மாட்ரிட் , ஏப்.17:**

ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2வது சுற்றில் ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினார், செர்பியாவின் ஹமத் மெட்ஜ்டோவிக் உடன் மோதினார். பரபரப்பான இந்த ஆட்டத்தில் செர்பிய வீரர் 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வென்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

### பேட்மிண்டன் வீரர் விக்டர் ஆக்செல்சன் ஓய்வு

**சென்னை, ஏப்.17:**

ஒலிம்பிக்கில் இரண்டுமுறை தங்கப் பதக்கம் வென்ற டென்மார்க் நாட்டின் பிரபல பேட்மிண்டன் வீரர் விக்டர் ஆக்செல்சன், பேட்மிண்டன் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக இன்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, “இந்த முடிவை எடுப்பது கடினமாகவும், நேர்மையற்றதாகவும் தோன்றியது. பல முக்கியமான தொடர்களில் வெற்றி பெறுவதற்கும் எனக்கு வாய்ப்பு கிடைத்ததை ஒரு மிகப்பெரிய பாக்கியமாக நான் கருதுகிறேன்.என ஓய்வு தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# கூட்டமெல்லாம் குடும்பமாகிவிடாது; அது கலைந்துவிடும்- கமல்ஹாசன் தாக்கு

**சென்னை, ஏப்.17:**

சேலத்தில் நடைபெற்ற திமுக பிரசார கூட்டத்தில் கமல்ஹாசன் பேசியதாவது: மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் எம்.பி. பேசும்போது, அரசியல் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நான் தி.மு.க. கூட்டணியில் ஒருவனாக இல்லாமல் குடும்பத்தில் ஒருவனாக இருக்கிறேன். தொகுதி மறுவரையறையும், இட ஒதுக்கீட்டையும் ஒன்றாக இணைக்க வேண்டாம். நாளை நமக்கு நடக்கபோகும் அநீதிக்கு எதிராக எழுச்சி குரலாக இருக்கவேண்டும். 33 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்க வேண்டும் என்பதை நாங்கள் முன்பே சொல்லிக்கொண்டு வருகிறோம்.



ஆனால் தற்போது புதிய கண்டுபிடிப்பு போல ஒன்றிய அரசு சொல்லிக்கொண்டிருக்கிறது. தற்போது 5 மாநில தேர்தல் நடக்கும் நேரத்தில் தொகுதி மறுவரை தேவையில்லாதது. தேர்தல் முடியட்டும் பேசலாம் என்றால், உடனே பேசலாம் என்கிறீர்கள். தமிழகத்தின் உரிமையை நாங்கள் ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம் . “இங்கு பெருங்கூட்டம் வந்துள்ளது; எந்த அசம்பாவிதமும் இல்லை;ஒருவிபத்துஇல்லை. கூட்டம் நடத்துவதற்கும் இது ஒரு முன் உதாரணம். வழிதவறி போகவேண்டாம்; கூட்டமெல்லாம் குடும்பமாகிவிடாது, அது கலைந்துவிடும். திராவிட குடும்பம் 75 வருடம் கட்டிக்காத்த குடும்பம்” என்றார்.

# வார இறுதி நாட்கள், கோடை விடுமுறைகளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 835 சிறப்பு பஸ்கள் இயக்கம்



**சென்னை, ஏப்.17:**

சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குனர் ஆர்.மோகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

கோடை விடுமுறை மற்றும் வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 17-ந் தேதி (வெள்ளிக்கிழமை) 295 பஸ்களும், 18-ந் தேதி (சனிக்கிழமை) 310 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 17-ந் தேதி (வெள்ளிக்கிழமை) 55 பஸ்களும், 18-ந் தேதி (சனிக்கிழமை) 55 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இருந்தும் பல்வேறு இடங்களுக்கு 100 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதாவரத்தில் இருந்து 17-ந் தேதி மற்றும் 18-ந் தேதி ஆகிய நாட்களில் 20 பஸ்களும் சிறப்பு பஸ்களாக இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வணிகச் செய்திகள்

### ‘கச்சா எண்ணெய் விலை 130 டாலராக அதிகரித்தால் இந்தியப் பொருளாதார வளர்ச்சி 0.8% வரை குறையும்’

**புதுடெல்லி, ஏப்.17:**

எஸ் அண்ட் பி குளோபல் ரேட்டிங்ஸ் நிறுவனம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவின் வலுவான மேக்ரோ பொருளாதார மற்றும் நிதித்துறை அடிப்படைகள், நீடித்த கச்சா எண்ணெய் விலை அதிர்ச்சியின் தாக்கத்தைத் தாங்கும் வாய்ப்புள்ளது. இருப்பினும், 2026-ம் ஆண்டில் கச்சா எண்ணெயின் சராசரி விலை ஒரு பேரலுக்கு 130 டாலராக உயர்ந்தால் இந்திய பொருளாதார வளர்ச்சி 0.8% வரை குறையக்கூடும். அதன் அழுத்த சூழ்நிலையின் கீழ், வட்டி, வரி, தேய்மானம் மற்றும் கடன் தள்ளுபடிக்கு முன்னதான கார்ப்பரேட் வருவாய், 2027 நிதியாண்டில் 15-25% குறையக் கூடும். மேலும் கடன் விகிதம் 0.5 முதல் 1 மடங்கு வரை உயரக்கூடும். அதேநேரம் வங்கித் துறையின் சொத்து தரம் பலவீனமடைந்து, வாராக்கடன்கள் சுமார் 3.5% வரை அதிகரிக்கக்கூடும். மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போரால் ஏற்படும் அதிர்ச்சிகளில் இருந்து இந்தியா தப்பிக்க முடியாது.

எஸ் அண்ட் பி குளோபல் ரேட்டிங்ஸ், அழுத்த நிலையில் 2026-ல் பிரெண்ட் கச்சா எண்ணெய் ஒரு பேரலுக்கு 130 டாலராகவும், 2027-ல் 100 டாலராகவும் இருக்கும் என்று கருதுகிறது (சாதாரண நிலையில் முறையே 85 மற்றும் 70 டாலர்). இந்தியாவின் இறையாண்மை மதிப்பீட்டில் உடனடி தாக்கம் எதையும் அது எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் நிதி ஒருங்கிணைப்பு முயற்சிகள் தற்காலிக பின்னடைவைச் சந்திக்கக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 1 முதல் 9-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இன்று முதல் கோடை விடுமுறை

**சென்னை, ஏப்.17:**

பள்ளி முழு ஆண்டுத் தேர்வுகள் இன்றுடன் (ஏப்.16) நிறைவு பெறுவதை அடுத்து, மாணவர்களுக்கான கோடை விடுமுறை இன்று (ஏப்.17) முதல் தொடங்குகிறது.



தமிழக பள்ளிக் கல்வி பாடத்திட்டத்தில் 10, 11, 12-ம் வகுப்புக்கான பொதுத் தேர்வு கடந்த மார்ச் 2 முதல் ஏப்ரல் 6-ம் தேதி வரை நடத்தப்பட்டது. அதேபோல் 1 முதல் 9-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான முழு ஆண்டு தேர்வுகள் ஏப்ரல் 1-ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறவுள்ளதால், வழக்கத்தைவிட முன்கூட்டியே தேர்வுகள் நடத்தப்பட்டன.

அதன்படி 1 முதல் 9-ம் வகுப்பு மாணவர்களுக்கு நடைபெற்று வந்த முழு ஆண்டுத் தேர்வுகள் நேற்றுடன் (ஏப்ரல் 16) நிறைவுபெறுகின்றன. நிறைவு நாளில் சமூக அறிவியல் உள்ளிட்ட பாடத் தேர்வுகள் நடத்தப்பட உள்ளன.

ஜூன் 1-ல் பள்ளிகள் திறப்பு: தொடர்ந்து இவர்களுக்கான கோடை விடுமுறை இன்று (ஏப்ரல் 17) முதல் தொடங்குகிறது. எனினும், ஆசிரியர்கள் பள்ளி இறுதி வேலைநாளான ஏப்ரல் 25-ம் தேதி வரை பணிக்கு வந்து விடைத்தாள் மதிப்பீடு மற்றும் மாணவர் சேர்க்கை போன்ற நிர்வாகப் பணிகளை கவனிக்க வேண்டும். கோடை விடுமுறை முடிந்து மீண்டும் பள்ளிகள் ஜூன் 1-ம் தேதி திறக்கப்படும் என்று பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நாட்டிலேயே பயணிகள் சேவை, வருவாயில் தெற்கு ரயில்வே முதலிடம் பிடித்து சாதனை




புதுடெல்லி, ஏப்.17:

கடந்த 2025-26-ம் நிதி ஆண்டில் இந்திய ரயில்வேயில் ஒட்டுமொத்த மண்டலங்களிலும் பயணிகள் வருவாயில் தெற்கு ரயில்வே ரூ.8,271.47 கோடி வருவாய் ஈட்டி முதலிடம் பிடித்துள்ளது. இது முந்தைய ஆண்டை விட ரூ.735.78 கோடி (9.8%) அதிகமாகும். மேற்கு ரயில்வே, மத்திய ரயில்வே 2, 3-வது இடங்களை பிடித்துள்ளன. தெற்கு ரயில்வேயில் 229 சிறப்பு ரயில்கள் மூலம் 2,513 பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. 32.97 லட்சம் பேர் பயணித்துள்ளனர். ஒரு பயணத்துக்கு சராசரியாக 1,312 பயணிகள் வீதம் பயணித்து, தெற்கு ரயில்வே தேசிய அளவில் (சராசரி 894) முதலிடம் வகிக்கிறது. கடந்த நிதி ஆண்டில் இந்திய ரயில்வேயின் அனைத்து மண்டலங்களையும்விட, முன்பதிவு ரயில்களில் அதிக இடங்கள் நிரப்புதல் விகிதத்தைப் பெற்று, தெற்கு ரயில்வே முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது. தெற்கு ரயில்வேயில் இயக்கப்பட்ட ஒட்டுமொத்த முன்பதிவு ரயில்களில் 96 சதவீதம் ரயில்கள், 75 சதவீதத்துக்கும் அதிகமான இடங்கள் நிரப்பப்பட்டு இயங்கியுள்ளன.

கடந்த நிதி ஆண்டில் இயக்கப்பட்ட மொத்தம் 2.6 லட்சம் ரயில் பயணங்களில் (TRIPS), சுமார் 2.49 லட்சம் பயணங்கள் 75 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான மிகச்சிறந்த பயணிகள் இடங்கள் நிரப்புதல் விகிதத்தைக் கொண்டிருந்தன. இந்திய ரயில்வேயின் ஒட்டுமொத்த சராசரி இடங்களை நிரப்புதல் விகிதம் 87 சதவீதமாக உள்ள நிலையில், தெற்கு ரயில்வே அதைவிட அதிகமாக 96 சதவீதம் பெற்றுள்ளது.

சிறப்பான திட்டமிடல் மற்றும் பயணிகள் தேவைக்கேற்ப ரயில்களை இயக்கியதன் மூலம் இந்த மைல்கல்லை எட்டியுள்ளோம் என்று தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேகதாது திட்டத்திற்கு விரைவாக அனுமதி: பிரதமர் மோடியிடம் சித்தராமையா நேரில் கோரிக்கை

பெங்களூரு, ஏப்.17:

கர்நாடகத்தில் நடந்த கோவில் திறப்பு விழா ஒன்றில் பங்கேற்பதற்காக நேற்று பிரதமர் மோடி சிறப்பு விமானத்தில் பெங்களூரு வந்தார். விமான நிலையத்தில் அவரை வரவேற்ற முதல்-மந் திரி சித்தராமையா கர்நாடக திட்டங்கள் தொடர்பான கோரிக்கை மனுவை பிரதமரிடம் வழங்கினார்.

குறிப்பாக அந்த கடிதத்தில், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பெங்களூருவுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடாக ரூ.6 ஆயிரம் கோடி வழங்க வேண்டும். கர்நாடகத்தில் மேகதாது திட்டத்தை அமல்படுத்துகிறோம். இதற்கு விரைவாக அனுமதி வழங்க வேண்டும். இதுகுறித்து மத்திய நீர் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும். அங்கு 67 டி.எம்.சி. (ஒரு டி.எம்.சி. என்பது 100 கோடி கனஅடி) தேக்கும் வகையில் அணை கட்டப்படுகிறது. இது பெங்களூருவின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய உதவும். மேலும் தமிழ்நாட்டுக்கும் குறித்த காலத்தில் தண்ணீர் திறக்க முடியும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

மேகதாது அணை கட்டும் திட்டத்தை கர்நாடக அரசு பெங்களூரு தெற்கு (ராமநகர்) மாவட்டம் கனகபுரா அருகே காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் கட்டப்பட உள்ளது. இதன் திட்ட மதிப்பு ரூ.15 ஆயிரம் கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அணை கட்டும் திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்துவதற்கான முன்னேற்பாட்டு பணியை கர்நாடக அரசு தீவி ரப்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்திய கடற்படைக்கு 18 அதிநவீன வாட்டர்ஜெட்: நார்வே நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்து

புதுடெல்லி, ஏப்.17:

இந்திய கடற்படையின் அடுத்த தலைமுறை ஏவுகணை கப்பல் திட்டத்திற்காக, 18 அதிநவீன 'கமேவா' வாட்டர் ஜெட் உந்துவிசை அமைப்புகளை வழங்குவதற்கான ஒப்பந்தத்தை நார்வேயைச் சேர்ந்த கோங்ஸ்பெர்க் மேரிடைம் நிறுவனம் பெற்றுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: இந்திய கடற்படைக்கு தேவையான வாட்டர்ஜெட் கருவிகளை வழங்க நார்வே நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. வழக்கமான கப்பல்களில் காணப்படும் விசிறி போன்ற புரொப்பல்லர் அமைப்பிற்கு மாற்றாக, இந்த வாட்டர்ஜெட் தொழில்நுட்பம் நீரை உள்ளிழுத்து, அதிக வேகத்தில் வெளியேற்றுவதன் மூலம் கப்பலை இயக்கும். இதன் மூலம் கப்பல்கள் எதிரிகளின் ரேடார் பார்வையில் படாமல் அதிவேகமாகச் செல்லவும், கடலில் மிக லாவகமாகத் திரும்பவும் முடியும். இந்தக் கப்பல்களைக் கட்டி வரும் கொச்சி கப்பல் கட்டும் தளத்துடன் இணைந்து நார்வே நிறுவனத்துடன் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கொச்சி கப்பல் கட்டும் தளத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "ஏற்கனவே பல வர்த்தக ரீதியான திட்டங்களில் இந்நிறுவனம் எங்களுக்கு நம்பகமான கூட்டாளியாக இருந்துள்ளது என்றார்.

# மூன்று திருத்த மசோதாக்களுக்கு எதிர்ப்பு! மக்களவையில் கனிமொழி நோட்டீஸ்!



புதுடெல்லி, ஏப்.17:

மக்களவையில் மத்திய அரசு தாக்கல் செய்யவுள்ள மூன்று திருத்த மசோதாக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி நோட்டீஸ் அளித்துள்ளார்.

நாடாளுமன்ற நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரின் நீட்சியாக, வியாழக்கிழமை (ஏப்.16) முதல் மூன்று நாள்களுக்கு சிறப்பு அமர்வு நடைபெறவுள்ளது.

மக்களவை-பேரவைகளில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை 2029-ஆம் ஆண்டுமுதல் அமலாக்கவும், அதற்கு ஏதுவாக மொத்த மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 543-இல் இருந்து 850 வரை அதிகரிக்கவும் வகை செய்யும் அரசமைப்புச் சட்டத்தின் 131-ஆவது திருத்த மசோதா உள்பட மூன்று மசோதாக்களை அறிமுகம் செய்து, விவாதித்து நிறைவேற்றும் நோக்கில் இந்த அமர்வு நடைபெறுகிறது.


இதில், மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகள் மறுவரையறை செய்வதற்கு தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று கருப்புக் கொடியேற்றி, மசோதா நகலை எரித்து போராட்டம் நடத்தினார். மேலும், தமிழ்நாடு முழுவதும் இன்று கருப்புக் கொடியேற்றும் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில், அரசியலமைப்பு (131-வது திருத்த) மசோதா - 2026, ஒன்றியப் பிரதேசச் சட்டங்கள் (திருத்த) மசோதா - 2026 மற்றும் தொகுதி மறுவரையறை மசோதா - 2026 ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களவையில் கனிமொழி நோட்டீஸ் வழங்கியுள்ளார்.

முன்னதாக, முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் திமுக எம்பிக்கள் ஆலோசனைக் கூட்டம் காணொலி வாயிலாக புதன்கிழமை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# மகளிர் இடஒதுக்கீட்டை ஆதரிக்கிறோம் - ராகுல் காந்தி



புதுடெல்லி, ஏப்.17:

நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிராக காங்கிரஸ் உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள் என்றும், மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை ஆதரிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக வீடியோ வெளியிட்டு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி எம்.பி. பேசியுள்ளதாவது:

மகளிர் இடஒதுக்கீட்டை நிபந்தனையின்றி காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறது. மகளிர் இடஒதுக்கீடு நமது அரசமைப்பின் ஒரு பகுதி; அரசு முன்மொழிந்த இடஒதுக்கீட்டுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை மகளிர் மசோதா திருத்தம், தொகுதி மறுவரையறையை பயன்படுத்தி அதிகாரத்தை கைப்பற்ற முயற்சி செய்கிறது. சாதிவாரி கணக்கெடுப்பை புறக்கணித்து, ஓபிசி, எஸ்சி எஸ்டி உரிமையை திருடுவதை அனுமதிக்க மாட்டோம்.

மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் 106-ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் 2023-ஐ (நாரி சக்தி வந்தன் அதிநியம்) அமல்படுத்துவதற்கான சட்டத் திருத்த மசோதா ஏப்.16 முதல் ஏப்.18 வரை நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்ட த்தொடரில் அறிமுகமாகவுள்ளது.

அப்போது மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 850-ஆக அதிகரிக்கப்பட்டு அதில் 280 தொகுதிகள் மகளிருக்கு ஒதுக்கப்படவுள்ளன.

2029 மக்களவைத் தேர்தலின்போது இது நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனையின் முடிவில் தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிராக வாக்களிப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

# பா.ஜ.க. தலைவர் நிதின் நபின் உள்ளிட்ட 16 பேர் மாநிலங்களவை எம்.பி.க்களாக பதவியேற்பு



புதுடெல்லி, ஏப்.17:

3 நாட்கள் சிறப்பு நாடாளுமன்ற கூட்டத் தொடர் இன்று தொடங்கி உள்ளது. கூட்டம்தொடங்கியதும்மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல்குறிப்புவாசித்தபிறகு, நாடாளுமன்ற அலுவல்கள் தொடங்கப்பட்டன.

தொடர்ந்து, பா.ஜ.க. தேசிய தலைவர் நிதின் நபின், மத்திய மந்திரி ராம் நாத் தாக்கூர் மற்றும் மூத்த காங்கிரஸ் தலைவர் அபிஷேக் சங்வி உள்பட, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 13 பேர் மாநிலங்களவைஎம்.பி.க்களாக இன்று பதவியேற்றனர். பீகார், அசாம், அரியானா, இமாசலப் பிரதேசம், மராட்டிய மாநிலம், ஒடிசா மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 16 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு இந்திய துணை ஜனாதிபதியும், மாநிலங்களவை சபாநாயகருமான சி.பி. ராதாகிருஷ்ணன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

நேற்று பதவியேற்ற 16 நாடாளுமன்ற உறுப்பினர்களில், 8 பேர் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்கள் மற்றும் 3 பேர் அதன் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

மேலும், மற்ற 5 பேர் பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆவர். பா.ஜ.க.வின் தேசியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, பீகார் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த நிதின் நபின், தற்போது மாநிலங்களவை எம்.பி. ஆக பதவியேற்றுள்ளார். அவருடன் மத்திய மந்திரி ராம் நாத் தாக்கூரும் பதவியேற்றார். அவர் பீகாரில் இருந்து மீண்டும் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். உபேந்திர குஷ்வாஹா (ஆர்.எல்.எம்.) மற்றும் சிவேஷ் குமார் (பா.ஜ.க.) ஆகியோரும் பீகாரில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அதே போல் அசாம் மாநிலத்தில் இருந்து தெராஷ் கோவல்லா (பா.ஜ.க.), ஜோகன் மோகன் (பா.ஜ.க.) மற்றும் பிரமோத் போரோ (UPP-L) ஆகியோர் மாநிலங்களைவை எம்.பி.க்களாக பதவியேற்றுள்ளனர்.

## மேற்கு வங்கத்தில் 15 ஆண்டுகளாக ஊழல் ஆட்சி: பிரதமர் மோடி குற்றச்சாட்டு

புதுடெல்லி, ஏப்.17:

வங்காள புத்தாண்டு 'பொய்லா பைசாக்'-ஐ முன்னிட்டு மேற்கு வங்க மக்களுக்கு பிரதமர் எழுதிய வாழ்த்து கடிதத்தில் கூறியிருப்பதாவது: வங்காள புத்தாண்டை முன்னிட்டு மேற்கு வங்க மக்களுக்கு வாழ்த்துகள்.

கடந்த 15 ஆண்டுகளாக மேற்கு வங்கத்தில் குழப்பமான ஊழல் ஆட்சி நடைபெறுகிறது. மக்கள் தங்களின் அடிப்படை உரிமை, கவுரவம் மற்றும் வளமான கலாச்சார பாரம்பரியத்தை இழந்துள்ளனர். மேற்கு வங்கத்தில் தற்போது நிலவும் சூழல் பெண்களின் பாதுகாப்பு, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு,ஏழைகளின் உரிமைகள் ஆகியவற்றை சீர்குலைத்துள்ளது.

ஒரு காலத்தில் மேற்கு வங்கம் நாட்டுக்கு வழிகாட்டியது. எனவே வளர்ச்சியடைந்த மேற்கு வங்கத்தை உருவாக்க நாம் உறுதி எடுக்க வேண்டும். இங்கு ஏழைகள் பட்டினியாக இருக்கக் கூடாது. இளைஞர்கள் வேலை தேடி வேறு மாநிலங்களுக்கு செல்லக் கூடாது.

மேற்குவங்கத்தின் எதிர்காலம் வரும் சட்டப்பேரவை தேர்தலில் உள்ளது. பாஜக அரசு மேற்கு வங்கத்தை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும். அதனால் மக்கள் இந்த தேர்தலில் சரியான முடிவு எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.


## ஆந்திர வெடி விபத்தில் 5 பேர் உயிரிழப்பு

அனந்தபூர், ஏப்.17:

ஆந்திர மாநிலம் கும்மராவான்லபல்லியில் குவாரி தொழிலாளர்கள் குடும்பத்துடன் வசித்து வந்தனர். இவர்கள் குவாரிக்கு தேவையான டெட்டனேட்டர், அமோனியம் சல்பேட், டீசல் போன்றவற்றை வைத்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று வெடி விபத்து ஏற்பட்டதில் 4 பேர் அதே இடத்திலும் ஒருவர் மருத்துவமனையிலும் உயிரிழந்தனர். காயம் அடைந்த 20 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 12 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இது குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## தெலுங்கு தேச செயல் தலைவராக நாரா லோகேஷ் நியமனம்



அமராவதி, ஏப்.17:

29 உறுப்பினர்களை கொண்ட அரசியல் விவகாரக் குழு, 31 உறுப்பினர்களை கொண்ட தேசியக் குழு, 185 உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் மாநிலக் குழுவையும் அவர் அறிவித்தார். கட்சியின் தேசிய தலைவராக சந்திரபாபு நாயுடுவும் மாநில தலைவராக பி.ஸ்ரீநிவாஸ் ராவும் தொடர்கின்றனர். தேசிய பொதுச் செயலாளர்களாக மத்திய அமைச்சர் ராம்மோகன் நாயுடு, நந்தியால் எம்.பி. பைரெட்டி ஷபரி, மூத்த தலைவர் ராஜேஷ் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

44 ஆண்டு கால வரலாற்றில்: கட்சியின் 44 ஆண்டு கால வரலாற்றில் செயல் தலைவர் நியமனம் செய்யப்பட்டிருப்பது இதுவே முதல்முறையாகும். முதல்வரின் மைத்துனரும் மூத்த தெலுங்கு நடிகருமான நந்தமுரி பாலகிருஷ்ணா, அரசியல் விவகாரக் குழு உறுப்பினராக தொடர்கிறார்.

மாநிலக் குழுவில் உள்ள 185 பேரில் 50 பேர் பெண்களாவர். மேலும் பிசி- 77, எஸ்சி- 25, எஸ்டி- 7, சிறுபான்மையினர் 13 பேர் இடம் பெற்றுளனர். இந்த நியமனம் மூலம் அனுபவம் வாய்ந்தவர்கள் மற்றும் இளைஞர்களை கொண்டு கட்சிக்கு புதிய உயிரோட்டம் கொடுக்கப்பட்டு உள்ளது.

## நாசிக் ஐடி அலுவலகத்தில் மதமாற்ற முயற்சி: மனிதவள பிரிவு மேலாளர் உட்பட 7 பேர் கைது

நாசிக், ஏப்.17:

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தின் (டிசிஎஸ்) நாசிக் கிளை அலுவலகத்தில் பயிற்சிக்கு சேரும் ஊழியர்களிடம் பாலியல் துன்புறுத்தல் மற்றும் மதமாற்ற முயற்சியில் ஒரு குழுவினர் ஈடுபடுவதாக புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து அங்கு பெண் போலீஸார் துப்புரவு பணியாளர்கள் போல் வேலைக்கு அனுப்பப்பட்டு கண்காணிக்கப்பட்டனர். இதில் குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்பட்டன. இந்த குற்றச் செயலில் மனித வள பிரிவு மேலாளர் மற்றும் மூத்த ஊழியர்கள் ஈடுபட்டது தெரியவந்தது. பயிற்சிக்கு வருபவர்களிடம் பணத் தேவை உள்ளவர்கள், குடும்ப பிரச்சினை உள்ளவர்கள் ஆகியோரை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பாலியல் துன்புறுத்தலுடன் மதமாற்ற முயற்சியிலும் ஒரு கும்பல் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக மனிதவள மேலாளர் நிதா கான், ஆசிப் அன்சாரி, ஃஃபி ஷேக் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த கும்பல் பயிற்சிக்கு சேர்ந்தவர்களிடம் இந்து கடவுள்கள் பற்றி தரக்குறைவான கருத்துக்களை தெரிவிப்பர். இதனால் மனம் புண்படும் பயிற்சியாளர்களை மனிதவள மேலாளர் நிதா கான் சமாதானம் செய்து அவர்களின் நம்பிக்கையை பெறுவார்.

இப்படி படிப்படியாக பயிற்சிக்கு சேர்பவர்களின் வாழ்க்கை முறை, உடை அணியும் பழக்கம் ஆகியவற்றை அந்தக் குழுவினர் மாற்றியுள்ளனர். மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள் தங்கள் வீடுகளில் உள்ள இந்து கடவுள்களின் படத்தை குடும்பத்தினருடன் தகராறு செய்து அகற்றியுள்ளனர்.

## ஈரான் தாக்குதலில் ரூ. 2,300 கோடி டிரோனை இழந்த அமெரிக்கா!

**தெஹ்ரான், ஏப்.17:**

ஈரானுக்கு எதிரான போரில் மிகவும் அதிக விலைமிக்க ஆளில்லா விமானமான டிரோனை இழந்ததாக அமெரிக்க கடற்படைத் தலைமையகம் உறுதிப்படுத்தியுள்ளது.

அணுசக்தித் திட்டத்தைக் கைவிடக் கோரி மேற்காசிய நாடான ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப். 28 ஆம் தேதி 'ஆப்ரேஷன் எபிக் ஃபியூரி' என்ற ராணுவ நடவடிக்கையை தொடங்கின.

போர் தொடங்கி கிட்டத்தட்ட 40 நாள்களுக்குப் பின்னர், சுமார் இரண்டு வாரங்கள் போர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவரவும், அமெரிக்க தாக்குதலில் ஏற்பட்டுள்ள கட்டட இடிபாடுகளுக்கு இழப்பீடு வழங்கவும் ஈரான் முனைப்புக் காட்டி வருகிறது.

ஈரான் அணுசக்தித் திட்டங்களை முற்றிலுமாக கைவிட வேண்டும் என அமெரிக்கா முறையிட்டு வருகிறது. அமெரிக்கா - ஈரான் இடையேயான அமைதிப்பேச்சு மீண்டும் இரண்டு நாள்கள் கழித்து தொடங்கும் என்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நேற்று தெரிவித்திருந்தார்.

சுமார் 40 நாள்கள் நடைபெற்ற போரில், அமெரிக்கா இதுவரை 40-க்கும் மேற்பட்ட போர் விமானங்கள் மற்றும் டிரோன்களை இழந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் மதிப்பு 720 அமெரிக்க டாலர்கள் என்றும் இந்திய மதிப்பில், ரூ. 7,000 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது. தொடக்கம் முதலே அமெரிக்க விமானங்கள் மற்றும் டிரோன்கள் மீது தாக்குதல் நடத்தி வீழ்த்தப்பட்டதாக ஈரான் தெரிவித்திருந்தற்கு மறுப்புத் தெரிவித்திருந்த அமெரிக்கா, தற்போது சுமார் 24 எம்கியூ4சி (MQ-4C) டிரோன்களும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக உறுதிப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், ஈரானுக்கு எதிரான போரில் சுமார் ரூ. 2,300 கோடி மதிப்பிலான டிரோனை இழந்ததாக அமெரிக்க ராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஹோர்முஸ் நீரிணை அருகே ஏப். 9 ஆம் தேதி அமெரிக்க ராணுவத்துக்கு எதிராக ஈரான் நடத்திய பதிலடித் தாக்குதலில் அமெரிக்காவின் கண்காணிப்பு டிரோன்களில் மிக முக்கியமான எம்கியூ4சி டிரைட்டன், செயலிழந்து பாரசீக வளைகுடாவில் விழுந்து காணாமல்போனதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இந்த டிரோனின் மதிப்பு சுமார் 200 முதல் 240 மில்லியன் டாலர்கள் வரை இருக்கும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதன் மதிப்பு இந்திய மதிப்பில் சுமார் ரூ. 2,300 கோடி. இந்த டிரோனானது மிகத் தீவிரத் தாக்குதல் நடத்தும் 100 மில்லியன் டாலர்கள் கொண்ட எஃப்-35 போர் விமானத்தைவிட இரு மடங்கு அதிகம் என்றும் கூறப்படுகிறது. எம் 4கியூ டிரைட்டன் டிரோனானது சுமார் 50,000 அடிக்கு மேற்பட்ட உயரத்தில் 24 மணி நேரத்திற்கும் மேலாக தொடர்ந்து பறக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவரை நடந்த ஈரானுக்கு எதிரான போரில் இந்த டிரோன் மட்டுமின்றி, இ-3 செண்ட்ரி ஏடபிள்யூசிஎஸ், ஏ10 தண்டர்போல்ட் 2 வார்த்ஹாக், சி-130 ஹெர்குலஸ், எஃப்15இ ஆகிய விமானங்களையும் அமெரிக்கா இழந்திருக்கிறது.

## அமெரிக்காவில் நடைபெறும் உலகக் கோப்பையில் ஈரான் பங்கேற்கும்..! ஃபிஃபா தலைவர் உறுதி!

**வாஷிங்டன், ஏப்.17:**

அமெரிக்க, இஸ்ரேலிய படைகள் நடத்திய கூட்டுத் தாக்குதல்களில், கடந்த பிப். 28ஆம் தேதி ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். இதையடுத்து, வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள முக்கிய கட்டமைப்புகளைக் குறிவைத்து ஈரானின் படைகள் தாக்குதல் நடத்தியது.

பாகிஸ்தான் அரசின் தலைமையில் இஸ்லாமாபாதில் நடைபெற்ற ஈரான், அமெரிக்கா இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததை அடுத்து, ஹோர்முஸ் நீரிணையை முற்றுகையிடுவோம் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், கால்பந்து உலகக் கோப்பைப் போட்டிகள் வரும் ஜூன் மாதம் முதல் அமெரிக்கா, மெக்சிகோ, கனடாவில் நடைபெற இருக்கின்றன.

குரூப் ஜி பிரிவில் இடம்பெற்றுள்ள ஈரான் அணி நியூசிலாந்து, பெல்ஜியம், எகிப்து ஆகிய அணிகளுடன் முறையே ஜூன் 15, 21, 26ஆம் தேதிகளில் எதிர்கொள்கின்றன. இந்தப் போட்டிகள் அனைத்தும் அமெரிக்காவில் நடைபெற இருக்கின்றன. இந்த நிலையில், ஃபிஃபா தலைவர் ஜியானி இன்ஃபாடினோ பேசியிருப்பதாவது: ஈரான் அணி வருவதில் உறுதியாக இருக்கிறது. விரைவில் சூழ்நிலைகள் அமைதியாகுமென நம்புகிறேன். எப்படியாகினும் ஈரான் நிச்சயமாக வரும். அவர்கள் அந்த நாட்டு மக்களை பிரதிநிதித்துவம் செய்தாலும் அவர்கள் உலகக் கோப்பைக்குத் தேர்வாகியுள்ளார்கள். வீரர்கள் விளையாட வேண்டுமென விரும்புகிறார்கள் என்றார்.

# பாக். மூலம் அமெரிக்காவுடன் தொடரும் பேச்சு! - ஈரான் அரசு அறிவிப்பு!

**தெஹ்ரான் ஏப்.17:**



பாகிஸ்தான் மூலம் தொடர்ந்து அமெரிக்காவுடன் செய்திகளைப் பரிமாற்றம் செய்து வருவதாக, ஈரான் அரசு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் தலைமையில் கடந்த பிப். 11 அன்று இஸ்லாமாபாதில் நடைபெற்ற அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான முதற்கட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன.

இந்தப் பேச்சுவார்த்தையில், அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் மற்றும் அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் மருமகன் ஜராட் குஷ்னர் தலைமையிலான குழுவும், ஈரானின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தலைமையிலான குழுவும் பங்கேற்றனர்.

இந்த நிலையில், 2 ஆம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமா அல்லது மீண்டும் போர் தொடருமா என சர்வதேச அளவில் கேள்விகள் எழுந்துள்ள சூழலில், அமெரிக்காவுடன் தொடர்ந்து செய்திகளைப் பரிமாறி வருவதாக ஈரான் அரசு புதன்கிழமை (ஏப். 15) அறிவித்துள்ளது.

இதுபற்றி, ஈரான் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் இஸ்மாயில் பாகாயி பேசுகையில்,

"கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று ஈரானியக் குழு தெஹ்ரானுக்குத் திரும்பியது முதல் பாகிஸ்தான் மூலம் பல செய்திகள் அமெரிக்காவுடன் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளன" எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதலுக்குப் பதிலடியாக வளைகுடா நாடுகளின் முக்கிய கட்டமைப்புகளைக் குறிவைத்து ஈரானின் படைகள் தாக்குதல் நடத்தி வந்தன.

இத்துடன், எரிபொருள் விநியோகத்தின் முக்கிய பாதையான ஹோர்முஸ் நீரிணையை ஈரானிய படைகள் முடக்கியதால், சர்வதேச அளவில் எரிபொருள் தட்டுப்பாடு உருவானது குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா.சபை அதிகாரத்தை நிலைநாட்டுவதில் இணைந்து செயல்பட ரஷியாவுக்கு சீனா அழைப்பு

**பெய்ஜிங், ஏப்.17:**



ஐ.நா.சபையின் அதிகாரத்தையும், நம்பகத்தன்மையையும் மீண்டும் நிலைநாட்ட சீனாவும், ரஷியாவும் இணைந்து செயல்பட வேண்டும்' என்று சீன அதிபா் ஷி ஜின்பிங் வலியுறுத்தியுள்ளாா்.

ஈரான் மீதான போா், வெனிசுலா ஆட்சிமாற்றம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி, அமெரிக்க அதிபா் டொனால்ட் டிரம்ப்பின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இரு நாடுகளும் தங்களின் ஒத்துழைப்பைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று அதிபா் ஷி ஜின்பிங் கேட்டுக்கொண்டாா்.

சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ரஷிய வெளியுறவு அமைச்சா் சொ்கெய் லாவ்ரோவைச் சந்தித்தபோது அதிபா் ஷி ஜின்பிங் இவ்வாறு தெரிவித்தாா்.

இச்சந்திப்பில் அவா் மேலும் பேசியதாவது: அமெரிக்காவின் தன்னிச்சையான போக்கைத் தடுத்து நிறுத்தி, ஐ.நா. சபையின் அதிகாரத்தையும், நம்பகத்தன்மையையும் மீட்டெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

சா்வதேச அளவில் ஒரு நியாயமான மற்றும் சமநிலையான ஒழுங்குமுறையை உருவாக்க வேண்டியது அவசியம்.

இதையொட்டி, பிரிக்ஸ், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) ஆகிய கூட்டமைப்புகளில் சீனாவும் ரஷியாவும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். என்றாா்.

ஹோா்முஸ் நீரிணை முடக்கம் காரணமாக உலக அளவில் ஏற்பட்டுள்ள கச்சா எண்ணெய் தட்டுப்பாட்டைச் சமாளிக்க, ரஷியா உதவத் தயாராக இருப்பதாக சொ்கெய் லாவ்ரோவ் தெரிவித்தாா். குழாய்கள் மூலம் சீனா மற்றும் இதர நாடுகளுக்குத் தடையின்றி எரிபொருள் விநியோகம் செய்ய ரஷியாவால் முடியும் என்றும் அவா் உறுதியளித்தாா்.

இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் உச்சிமாநாட்டில், வளா்ந்து வரும் நாடுகளின் நலன்களைப் பாதுகாக்கவும், பன்னாட்டுக் கொள்கையை வலுப்படுத்தவும் ரஷியா, சீனா நாடுகள் முக்கிய முன்னெடுப்புகளை எடுக்கும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.

# பாகிஸ்தானுக்கு சவூதி 300 கோடி டாலர் கூடுதல் நிதியுதவி

**இஸ்லாமாபாத், ஏப்.17:**



பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள பாகிஸ்தானின் அந்நியச் செலாவணி கையிருப்பை உயா்த்தும் வகையில், அந்நாட்டு மத்திய வங்கிக்கு கூடுதலாக 300 கோடி டாலரை வைப்புத்தொகையாக வழங்க சவூதி அரேபியா முன்வந்துள்ளது.

இத்துடன், ஏற்கெனவே வழங்கப்பட்ட 500 கோடி டாலா் நிதிக்கான காலக்கெடுவை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதாகவும் அந்நாடு அறிவித்தது.

பாகிஸ்தான் பிரதமா் ஷாபாஸ் ஷெரீப், சவூதி அரேபியா, கத்தாா், துருக்கி ஆகிய நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாகப் புறப்பட்ட நிலையில் இந்த அறிவிப்பு வெளியானது.

ஐக்கிய அரபு அமீரகத்துக்கு நடப்பு மாதத்துக்குள் 350 கோடி டாலரை பாகிஸ்தான் திருப்பிச் செலுத்த வேண்டி இருப்பதால், சவூதியின் இந்த உதவி அந்நாட்டின் பொருளாதார அழுத்தத்தைச் சற்றே குறைத்துள்ளது.

நிதி நெருக்கடியைச் சமாளிக்க ஏற்கெனவே கடன்பத்திரங்களை வெளியிடும் திட்டத்திலுள்ள பாகிஸ்தான், சாவதேச நிதியத்திடம் கூடுதல் நிதி கோருவது குறித்தும் பரிசீலித்து வருகிறது.

## ரஷியா, ஈரான் கச்சா எண்ணெய் வாங்குவதற்கான அனுமதி நீட்டிக்கப்படாது: அமெரிக்கா

**வாஷிங்டன், ஏப்.17:**

ரஷியா, ஈரான் கச்சா எண்ணெய்யை வாங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையில் இருந்து அளிக்கப்பட்ட விலக்கு நீட்டிக்கப்படாது என்று அமெரிக்க நிதியமைச்சர் ஸ்காட் பெசன்ட் புதன்கிழமை தெரிவித்தார்.

ஈரானுடனான போர் காரணமாக மேற்காசியாவில் இருந்து கச்சா எண்ணெய் விநியோகம் தடைபட்டது. இதைக் கருத்தில் கொண்டு, உக்ரைன் மீது போர் தொடுத்த ரஷியாவிடம் கச்சா எண்ணெய் வாங்க விதிக்கப்பட்ட தடையை தளர்த்திய அமெரிக்கா, ரஷியாவிடம் 30 நாள்களுக்கு கச்சா எண்ணெய் வாங்க இந்தியாவுக்கு கடந்த மார்ச் 5-ஆம் தேதி தற்காலிக அனுமதி அளித்தது. இந்தத் தடையில் இருந்து மேலும் சில நாடுகளுக்கும் அமெரிக்கா விலக்களித்திருந்த நிலையில், அது ஏப்.11-ஆம் தேதியுடன் காலாவதியானது.

இந்நிலையில் அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய ஸ்காட் பெசன்ட், 'ரஷியா மற்றும் ஈரான் கச்சா எண்ணெய்யை வாங்குவதற்கு அளிக்கப்பட்ட அனுமதியை அமெரிக்கா நீட்டிக்காது' என்று தெரிவித்தார்.

## துருக்கியில் 2-ஆவது நாளாக பள்ளி துப்பாக்கிச் சூடு- 9 பேர் உயிரிழப்பு

**வாஷிங்டன், ஏப்.17:**

துருக்கியில் துப்பாக்கி உரிமம் பெறுவதற்கான சட்டங்கள் கடுமையாக உள்ளது. அதேபோல் பள்ளிகளில் துப்பாக்கிச் சூடு நடப்பது மிகவும் அரிதான நிலையில், கடந்த 2 நாள்களில் தொடர்ச்சியாக நடைபெற்ற 2 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் அந்நாட்டு மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கஹ்ரமன்மராஸ் மாகாணத்தில் உள்ள பள்ளியில் பயின்று வரும் 8-ஆம் வகுப்பு மாணவன், ஓய்வுபெற்ற காவல் அதிகாரியான தனது தந்தையின் 5 துப்பாக்கிகள் மற்றும் 7 தோட்டாபெட்டிகளைப் புத்தகப்பையில் மறைத்து, பள்ளிக்கு எடுத்து வந்துள்ளார்.

பள்ளியில் 5-ஆம் வகுப்பு நடைபெறும் 2 வகுப்பறைகளுக்குள் நுழைந்து, கண்மூடித்தனமாகச் சுட்டதில் இந்த உயிரிழப்புகள் நேரிட்டுள்ளன. தாக்குதலுக்குப் பிறகு அந்த மாணவனும் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டார். இது தொடர்பாக மாணவனின் தந்தை கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு வருகிறார்.

துப்பாக்கிச் சூடு குறித்த அதிர்ச்சியூட்டும் காணொளிகளை ஊடகங்கள் ஒளிபரப்பத் துருக்கி அரசு தடை விதித்துள்ளது. தாக்குதல் குறித்து துருக்கி உள்துறை அமைச்சர் முஸ்தபா சிஃப்ட்சி கூறுகையில், 'காயமடைந்த 13 பேரில் 6 பேரின் நிலைமைக் கவலைக்கிடமாக உள்ளது. இது அந்த மாணவன் தனிப்பட்ட விரக்தியில் நடத்திய தாக்குதலே தவிர, பயங்கரவாதச் செயல் அல்ல' என்றார்.

முன்னதாக செவ்வாய்க்கிழமையன்று, சன்லியுர்ஃபா மாகாணத்தில் உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியில் முன்னாள் மாணவர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மாணவர்கள், ஆசிரியர்கள் என 16 பேர் காயமடைந்தனர். தாக்குதல் நடத்திய அந்த நபரும் தற்கொலை செய்துகொண்டார்..

## ஈரான் அதிகாரிகளை சந்தித்த பாகிஸ்தான் ராணுவத் தலைமைத் தளபதி!

**தெஹ்ரான், ஏப்.17:**

அமைதிப் பேச்சுவார்த்தையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல பாகிஸ்தான் ராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் அசீம் முனீர் தெஹ்ரானில் ஈரானிய அதிகாரிகளை வியாழக்கிழமை (ஏப்.16) சந்தித்தார்.

கடந்த ஏழு வாரங்களாக நடைபெற்று வரும் போர்ப் பதற்றத்தைத் தணிக்கும் வகையில், ஈரான் - அமெரிக்கா இடையே இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு வழிவகுப்பதற்காக நேற்று ஈரான் சென்ற பாகிஸ்தான் ராணுவத்தளபதி தெஹ்ரானில் அதிகாரிகளை சந்தித்துள்ளார்.

ஈரான் - இஸ்ரேல், அமெரிக்கா இடையே கடந்த பிப்.28 ஆம் தேதி தொடங்கிய போர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர பாகிஸ்தான் தொடர்ந்து மத்தியஸ்தம் செய்துவருகிறது. இதன் ஒருபகுதியாக இஸ்லாமாபாதில் நடந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. இதனால் பாகிஸ்தான் அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக தீவிர முயற்சிகளை செய்து வருகிறது.

இதனிடையே, ஈரானுடனான அடுத்தகட்ட பேச்சுவார்த்தைகள் பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாதில் நடைபெற வாய்ப்புள்ளது என அமெரிக்கா தெரிவித்தது. இருப்பினும், பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதா இல்லையா என்பது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. முன்னதாக அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் லெபனான்-இஸ்ரேல் இடையே செவ்வாய்க்கிழமை (ஏப்.13) நடந்த பேச்சுவார்த்தை எவ்வித உடன்பாடும் இன்றி நிறைவடைந்தது.

# அமெரிக்க கடற்படையின் முற்றுகை தொடர்ந்தால் செங்கடலை முடக்குவோம்! - ஈரான் எச்சரிக்கை!

**தெஹ்ரான், ஏப்.17:**



ஹோர்முஸ் நீரிணையில் அமெரிக்க கடற்படையின் முற்றுகை தொடர்ந்தால், செங்கடல் பகுதியை முழுவதுமாக முடக்குவோம் என ஈரான் ராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தான் தலைமையில் இஸ்லாமாபாதில் நடைபெற்ற ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான முதற்கட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன.

இதனால், கடந்த ஏப். 13 அன்று முதல் ஈரானின் துறைமுகம் மற்றும் ஹோர்முஸ் நீரிணை பகுதியில் அமெரிக்க கடற்படை முற்றுகையிட்டு வருகிறது.

இந்த நிலையில், ஈரானின் வர்த்தகம் மற்றும் எண்ணெய்க் கப்பல்களை அமெரிக்க கடற்படை முடக்குவது, போர்நிறுத்தத்தை மீறியதாகக் கருதப்படும் என ஈரான் ராணுவம் புதன்கிழமை (ஏப். 15) அன்று அறிவித்துள்ளது.

இதுபற்றி, ஈரான் ராணுவத்தின் மூத்த அதிகாரி அலி அப்துல்லாஹி கூறியதாவது:

"ஈரான் ராணுவம் நாட்டின் இறையான்மையையும், நலன்களையும் பாதுகாக்கத் தீர்க்கமாகச் செயல்படும். இந்த முற்றுகைகள் தொடர்ந்தால், பாரசீக வளைகுடா, ஓமன் கடல் மற்றும் செங்கடல் பகுதிகளில் எவ்வித ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளை இஸ்லாமியக் குடியரசின் வலிமைமிக்க ஆயுதப் படைகள் அனுமதிக்காது" எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதலுக்குப் பதிலடியாக வளைகுடா நாடுகளின் முக்கிய கட்டமைப்புகள் மீது ஈரானின் படைகள் தாக்குதல் நடத்தி வந்தன.

ஏற்கெனவே, காஸா மீதான போரைக் கண்டித்து செங்கடல் வழியாகச் சென்ற இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க கப்பல்களைக் குறிவைத்து ஈரானின் ஆதரவு பெற்ற யேமனின் ஹவுதி கிளர்ச்சிப் படையினர் தாக்குதல் நடத்தியது குறிப்பிடத்தக்கது.



# அரசியல் சாயம் பூச வேண்டிய அவசியமில்லை
# மக்களவையில் பிரதமர் மோடி பேச்சு

## மகளிருக்கு மாதம் ரூ.2,500; வேலையில்லாத பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.4,000
## தவெக தேர்தல் அறிக்கையில் உத்தரவாதம்

## 3 மசோதாக்கள் மீது 12 மணி நேரம் விவாதம் - இன்று மாலை வாக்கெடுப்பு

## தமிழகத்தில் 5 முதல் 9-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இன்று முதல் கோடை விடுமுறை

## பாக். மூலம் அமெரிக்காவுடன் தொடரும் பேச்சு! - ஈரான் அரசு அறிவிப்பு!


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 17.04.2026 வெள்ளிக்கிழமை இலவச இ–பேப்பர்